# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/43- 2013 ජූනි 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1816/43 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) – மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

*அங்கீகாரம் பெற்ற துணைச் சட்டங்கள்*

***ஊவா மாகாண மாகாண சபை***

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள்) சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பாவனையில் உள்ள விதிமுறைகள்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் ஒப்பிட்டு அறிய வேண்டியதான (262 ஆம் அதிகார சபையாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆம் பகுதியின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய என்னால் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆவது பகுதியின் பிரகாரம் ஆக்கப்பட்ட நகல் துணைச் சட்டங்கள் இதன் மூலம் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*குறித்த நகல் துணைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் அடங்கிய துணைச் சட்டங்களை ஆக்குவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பகுதியுடன் ஒப்பிட்டு அறிய வேண்டிய 126 ஆம் பகுதியின் ஊடாக பிரதேச சபைகளுக்கு அதிகாரங்கள் கிடைத்துள்ளதுடன், அந்த துணைச் சட்டங்கள் மேற்கூறிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகாரம் பெற்ற துணைச் சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆம் பகுதியின் 3 ஆவது உப விதியின் விதிமுறைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்வதற்கு ஊவா மாகாணத்தின் சகல பிரதேச சபைகளுக்கும் இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்றது.*

*சஷீந்திர ராஜபக்ஷ,*
*பிரதம அமைச்சர் மற்றும்*
*நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், கல்வி,*
*உள்ளூராட்சி, கலாசார அலுவல்கள், போக்குவரத்து,*
*காணி, நீர்ப்பாசனம், பொருளாதார அபிவிருத்தி, கிராமிய*
*உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை*
*அமைச்சர்.*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*பதுளை,*
*2009, மே 24.*

**துணைச் சட்டங்கள்**

*பகுதி 1*

*அனைத்து அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டங்களினதும் பொருள் விளக்கம் பற்றிய துணைச் சட்டங்கள்.*

*இந்த அதி விசேட வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள பகுதி 2 தொடக்கம் பகுதி 27 வரை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டங்களையும் பொருள் விளக்கமளிக்கும் போது ஒரு பிரதேச சபையினால் உரிய விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம்பெற்ற துணைச் சட்டத்தில் பிரயோகிக்கப்படுகின்ற –*

(i) *''பிரதேச சபை'' என்ற பதத்தினால் குறிப்பிட்ட பிரதேச சபையும் ;*
(ii) *''தலைவர்'' என்ற பதத்தினால் குறிப்பிட்ட பிரதேச சபையின் தலைவரும் ;*
(iii) *''செயலாளர் '' என்ற பதத்தினால் குறிப்பிட்ட பிரதேச சபையின் செயலாளரும் ;*
(iv). *''பிரதேச சபைப் பிரதேசம்'' என்ற பதத்தினால் குறித்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசமும் ;*
(v) *''வேறு அலுவலர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர்'' என்ற பதத்தினால் தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்தவொரு அலுவலரும் ;*
(vi) *''விண்ணப்பதாரி'' என்ற பதத்தினால் அனுமதிப்பத்திரமொன்றினை அல்லது சேவையொன்றினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு விண்ணப்பிக்கும் ஒரு நபரைக் குறித்துக்காட்டப்படும்.*

*பகுதி 2*

***பிரதேச சபையொன்றுக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்குக் கீழ் வழங்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் முகாமைத்துவம்***

*1. பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற அல்லது பிரதேச சபைக்குரிய அல்லது பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்டதாக வழங்கப்பட்டுள்ள கருத்தரங்கு மண்டபங்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களைத் தீர்மானித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற கூட்ட மண்டபங்கள் அல்லது கருத்தரங்கு மண்டபங்களை பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கின்ற யாராயினும் ஒரு நபரினால் இந்த துணைச் சட்டத்தின் முதலாவத உப பிரிவில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றைப் பூரணப்படுத்தி பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*3. (அ) பிரதேச சபையின் கருத்தரங்கு மண்டபத்தை பயன்படுத்துவதற்கான அனுமதிகோரும் ஒவ்வொரு விண்ணப்பமும் பிரதேச சபைக்குக் கிடைக்கப்பெற்ற ஒழுங்குக்கமைய கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயினும் கருத்தரங்கு மண்டபத்தைப் பயன்படுத்துவதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களில் அரச நிறுவனங்களிலிருந்து விண்ணப்பிக்கப்பட்ட படிவங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் ;*

*(ஆ) இரண்டாம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி கட்டணம் பட்டியலுக்கிணங்க அல்லது பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் விதத்தில் கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்குவதற்கான கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்புப்பணத்தை செலுத்தியதன் பின்பே அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.*

*குறித்த கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்புப் பணம் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படுகின்ற போது குறித்த பணத்தொகை வருடாந்தம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.*

*4. கருத்தரங்கு மண்டபத்தை பயன்படுத்துவதற்கான விண்ணப்பப்படிவமொன்று மண்டபம் தேவைப்படும் தினத்திற்கு குறைந்தபட்சம் மூன்று வேலை செய்யும் தினங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*5. கருத்தரங்கு மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்கு மற்றும் அதனைச் சூழவுள்ள அரசாங்க அலுவலகங்களின் கடமைகளுக்கு மற்றும் தனியார் இல்லங்களுக்கு பங்கம் விளையாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒலிபெருக்கி மற்றும் ஒலிபெருக்கிக் கருவிகள் பாவிக்கப்படுமாயின் அது தொடர்பில் விசேட அனுமதி பெறப்படல் வேண்டும்.*

*6. கருத்தரங்கு மண்டபத்தினுள் மதுபானம் அருந்துதல் மற்றும் புகைபிடித்தல் இடம்பெறக்கூடாததுடன், சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். அக்கருத்தரங்கு மண்டபத்தைப் பயன்படுத்தும் தினங்களில் பாவிக்கப்படும் அலங்காரப் பொருட்கள் மற்றும் வேறு வகையான கழிவுப் பொருட்கள் உரிய முறையில் உரிய இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.*

7. கருத்தரங்கு மண்டபம், ஒதுக்கப்பட்டதன் பின்னர் அதனை ரத்து செய்து கொள்வதற்கு யாராயினுமொரு விண்ணப்பதாரிக்குத் தேவைப்படின் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட அதற்கு இடமளிப்பதற்கு பிரதேச சபையின் தலைவருக்கு அல்லது செயலாளருக்கு அதிகாரம் உண்டு :-

(அ) மேற்குறிப்பிடப்பட்ட இடத்தை ஒதுக்கியமையினை ரத்து செய்வதற்கு தேவைப்படின் வைப்புப் பணத்தில் 10% மான தொகையினை பிரதேச சபையின் நிதியத்துக்கு செலுத்துதல் வேண்டும் ;

(ஆ) கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்குவதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை எந்தவொரு காரணத்தின் பேரிலும் வேறொருவருக்கு வழங்க முடியாது.

8. (அ) யாராயினும் ஒருவரினால் ஒதுக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபத்தினை ஒதுக்கப்பட்ட காரியத்தைத் தவிர வேறெந்த காரியத்துக்கும் பயன்படுத்த இயலாது ;

(ஆ) கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்குவதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை எந்தவொரு காரணத்திற் பேரிலும் வேறொருவருக்கு வழங்க முடியாது.

(இ) யாராயினுமொரு நபரினால் கருத்தரங்கு மண்டபத்தினை ஒதுக்குவதற்காக சமர்பிக்கப்படும் விண்ணப்பத்துக்கு இடமளிக்காத வேளையில் அவ்வாறு இடமளிக்காமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலேயே குறித்த விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

9. ஏதாயினுமொரு காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபத்தினை அவ்வாறு ஒதுக்கப்பட்ட தினத்தை மாற்றிக்கொள்ளும் தேவை ஏற்படின் விண்ணப்பதாரியினால் அது சம்பந்தமாக எழுத்துமூலம் கோரிக்கை விடுக்க இயலும். அந்த கோரிக்கைக்கு இணங்க ஒதுக்கிய தினத்தை மாற்றம் செய்வதற்கு 03 ஆம், 04 ஆம் பந்திகளின் விதப்புரைகளுக்கு உட்படுத்தல் வேண்டும்.

10. ஏதாயினுமொரு காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபம் குறித்த காரியத்துக்காகப் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சபையில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தின்,

(அ) கருத்தரங்கு மண்டபத்திலுள்ள உபகரணங்கள் மற்றும் பொருத்தப்பட்டுள்ளவை சம்பந்தமாக ஏதாவது சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கான நட்டத்தின் பெறுமதி மற்றும் ;

(ஆ) கருத்தரங்கு மண்டபத்தை ஒதுக்கிக்கொண்ட கால எல்லையைவிட கூடுதலாக பயன்படுத்திக் கொண்ட காலத்துக்காக அறிவிடப்படவேண்டிய கட்டணத்தைக் கழித்துக்கொண்டதன் பின்னர் மிகுந்திருக்கும் தொகையினை மாத்திரம் விண்ணப்பதாரிக்கு மீளளிக்க இயலும்.

11. கருத்தரங்கு மண்டபத்தினைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் வருகின்ற வாகனங்கள், மோட்டார் சைக்கில்கள், மிதிவண்டிகள் ஆகிய அனைத்தையும் கட்டிடத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவ் வளவினுள் நிறுத்தி வைக்கலாம்.

12. இந்த துணைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட கருத்தரங்கு மண்டபம் பிரதேச சபையின் அத்தியாவசியக் காரியங்களுக்காகத் தேவைப்படுமிடத்து குறித்த ஒதுக்கினை ரத்து செய்வதற்கு பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரமிருத்தல் வேண்டும். அதனைப் பற்றி ஒதுக்கப்பட்ட தினத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்பதாக அறிவிக்கப்பட வேண்டியதுடன், விண்ணப்பதாரியினால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புப் பணம் ஆகியவற்றைப் பூரணமாக அவருக்கு மீண்டும் கொடுக்கப்படல் வேண்டும்.

13. இத்துணைச் சட்டத்தில் எந்தவொரு விதி முறையும் மீறப்படுதல் குற்றச் செயலாவதுடன், உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றின் மூலம் இக்குற்றவாளிக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் இல. 15 ஐக் கொண்ட பிரதேச சபைக் கூட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்பட வேண்டியேற்படும்.

### 1 ஆம் அட்டவணை

பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள......................... கருத்தரங்கு மண்டபத்தினை பயன்படுத்துவதற்கான அனுமதிகோரும் விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின்/நிறுவனத்தின் பெயர் :..............................................................................................
2. முகவரி :..............................................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..............................................................................................
4. மண்டபத்தினைக் கோரும் காரணம் :..............................................................................................
5. தேவைப்படும் திகதியும், நேரமும் :..............................................................................................
   ........................................................ திகதியிலிருந்து.................................... திகதிவரை நேரம்..............................
6. மண்டபத்தினுள் பயன்படுத்துவதற்காக வெளியிலிருந்து கொண்டு வரப்படும் உபகரணங்கள்.

**மரத் தளபாடங்கள் மற்றும் ஒலிபெருக்கி உபகரணங்கள் பற்றிய விபவரங்கள்**

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன். இந்த கோரிக்கைக்கிணங்க குறித்த கூட்ட மண்டபம் ஒதுக்கித் தரப்படுமாயின் அந்த கூட்ட மண்டபத்தின் கட்டிடங்களுக்கு, நிர்மாணங்களுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்தியுள்ளனவற்றிக்கு யாதாயினும் சேதம் ஏற்பட்டால் அதற்குரிய நட்டத்தினை வைப்புப் பணத்திலிருந்து பிரதேச சபையினால் அறவிடப்படுதற்கு உடன்படுவதுடன் வைப்பு பணம் அறவீட்டுக்குப் போதாதெனில் மேலும் தேவையான பணத்தை பிரதேச சபைக்குச் செலுத்துதவதற்கும் உடன்படுகிறேன். அதேபோன்று கருத்தரங்கு மண்டபத்தினை மேற்கார்வையிடுதல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைச் சட்டத்தின் விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கு உடன்படுகின்றேன்.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..............

*இணைப்பு : 2*

***கருத்தரங்கு மண்டபத்தினை பயன்படுத்துவதற்காக அறவிடப்படும் கட்டணம் தொடர்பான பட்டியல்***

| நிலையம்/இடம் | கட்டணம் ரூபா சதம் | வைப்புப்பணம் | மேலதிக காலத்துக்காக அறவிடப்படும் கட்டணம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

***பகுதி 3***

***பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் முகாமைத்துவம்***

*சனசமூக நிலையங்கள்*

1. பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள சனசமூக நிலையங்களின் பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான கட்டணங்களை நிர்ணயித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற சனசமூக நிலையமொன்றினை பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள நினைக்கும் ஒரு நபரினால் துணைச் சட்டத்தின் முதலாவது உப பட்டியலில் காணப்படுகின்ற மாதிரிக்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2 ஆம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப்படிவம் ஒன்றினைச் சமர்ப்பித்தயாராயினும் ஒருவருக்கு.......................................................பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற சனசமூக நிலையமொன்றினைப் பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது இங்கே குறிப்பிடப்படுகின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால் தவிர தலைவரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது.

(அ) சனசமூக நிலையமொன்றினை பயன்படுத்துவதற்கு பெற்றுக்கொள்வதற்காக அனுமதிப்பத்திரம் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் ...................................................... பிரதேச சபைக் காரியாலயத்துக்குக் கிடைக்கப்பெற்ற ஒழுங்கின்படி கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயினும் சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் எதாயினுமொரு அரச நிறுவனத்தின் கூட்டமொன்று அல்லது அத்தகைய அமைப்பொன்றினால் நடாத்தப்படுகின்ற பகிரங்கக் காரியம் ஒன்றுக்காக கூடிய முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் ;

(ஆ) ...................................................... பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் சனசமூக நிலையத்தினை ஒதுக்கிக்கொள்ளும் கட்டணம் மற்றும் வைப்புப் பணம் ஆகியன செலுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும் ;

(இ) சனசமூக நிலையங்களை ஒதுக்கிக்கொள்ளும் கட்டணம் மற்றும் வைப்புப் பணத்தொகைகள் காலத்துக்குக் காலம்................ பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் குறித்த பணத்தொகைகள் வருடாந்தம் அரசாங்க அதி விசேட வர்த்தமானியின் ஊடாகவே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் யாதேனுமொரு அரச நிறுவனத்தின் கூட்டமொன்று அல்லது அத்தகைய அமைப்பொன்றினால் நடாத்தப்படுகின்ற பகிரங்கக் காரியம் ஒன்றுக்காக எதுவித கட்டணமும் அறவிடப்படக்கூடாது.

4. பயன்படுத்துவதற்காக சனசமூக நிலையமொன்றினை ஒதுக்கிக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம், குறித்த ஒதுக்கினை எதிர்பார்க்கும் தினத்திற்குக் குறைந்த பட்சம் மூன்று தினங்களுக்கு முன்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறெனினும் .......................... பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வசித்துவந்த யாராயினுமொரு நபரின் அல்லது அத்தகைய ஒரு நபரின் உறவினரது சடலத்தை பொதுமக்களின் மரியாதைக்காக தற்காலிகமாக வைக்கப்படுவதற்காக சனசமூக நிலையமொன்றினை ஒதுக்கிக் கொள்வதற்கு கோரிக்கைவிடுக்கும் போது இக்கால எல்லை ஏற்புடையதாகாது. யாராயினும் ஒருநபரினால் விடுக்கப்படும் கோரிக்கையானது சனசமூக நிலையத்தினை ஒதுக்கிக் கொள்ளத் தேவைப்படும் தினத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்பாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்க இயலுமாவதுடன் குறித்த கோரிக்கைக்கிணங்க மேற்கொள்ளப்படும் ஒதுக்கானது 3 ஆம் பந்தியின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாதல் வேண்டும்.

5. இந்த சட்டத்திற்கமைய ஒதுக்கிக்கொள்ளப்பட்டயாதாயினுமொரு சனசமூக நிலையத்தின் குறித்த ஒதுக்கினை ரத்துச் செய்துகொள்வதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரிக்கு தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட இடமளிப்பதற்கு தலைவரினால் இயலும்.

6. யாராயினுமொரு நபரினால் சனசமூக நிலையமொன்றினை ஒதுக்கிக்கொள்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில் அவ்வாறு இடமளிக்காதமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலேயே விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியது தலைவரினது கடமையாகும்.

7. ஏதோவொரு காரியத்துக்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்துக்கான ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தை மாற்றிக்கொள்ளத் தேவையேற்படின் விண்ணப்பதாரியினால் அது தொடர்பாக எழுத்துமூலம் தலைவருக்கு கோரிக்கை விடுக்க முடியும். குறித்த கோரிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட தினத்தை மாற்றம் செய்வது 3 ஆம் மற்றும் 4 ஆம் துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு உட்படவேண்டும்.

8. ஏதாவொரு காரியத்துக்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்தினை குறித்த காரியத்துக்காகப் பயன்படுத்தியதன் பின்னர் பிரதேசசபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புப் பணத்தின்

(i) சனசமூக நிலையத்துக்கோ, அதன் ஒரு பகுதிக்கோ, அங்குள்ள உபகரணங்களுக்கோ சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கான பெறுமதியையும் மற்றும் ;

(ii) சனசமூக நிலையத்தினை ஒதுக்கிக்கொண்ட கால எல்லையைவிட கூடுதலாகப் பயன்படுத்திய காலத்துக்காக அறிவிடப்படவேண்டிய கட்டணத்தையும் ;

(iii) கழித்துக்கொண்டதன் பின்னர் எஞ்சியுள்ளயாதாயினும் பணத்தொகையை மாத்திரம் விண்ணப்பதாரிக்கு மீளச் செலுத்த இயலும்.

9. யாராயினுமொரு................ நபரினால் ............... சபைக்குரிய ஏதேனுமொரு சனசமூக நிலையத்துக்கு சேதம் ஏற்படுத்துதல் அல்லது அவ்வாறு சேதமுற ஏற்பாடு செய்யப்படக் கூடாது என்பதுடன், சனசமூக நிலையத்தினுள் புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், சூதாட்டத்தில் ஈடுபடுதல் அல்லது வேறு துர் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

10. இந்த துணைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையமொன்று அவ்வாறு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட தினத்தில் ................. பிரதேச சபையின் யாதேனும் அத்தியாவசிய காரியத்துக்காக தேவைப்படும் போது குறித்த ஒதுக்கினை ரத்துச் செய்வதற்கு தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறெனினும் அத்தகைய ரத்துச் செய்தலானது இடம்பெறுமாயின் குறித்த ரத்து செய்தல் பற்றி சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பதாக விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும். அவரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புப் பணம் ஆகியன முழுமையாக அவருக்கு மீளளிக்கப்படல் வேண்டும். மேலும் அதேபோன்ற அத்தகைய ரத்துச் செய்தல் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு முன்பான மூன்று தினங்களுக்குக் குறைவான காலத்துக்குள் செய்யப்படலாகாது.

11. இந்த துணைச் சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரம்............ பிரதேச சபையினால் நியமிக்கப்படும் திட்டவட்டமான ஓர் அதிகாரியிடம் அல்லது அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படல் இயலும்.

12. 11 ஆம் பந்திக்கமைய அதிகாரம் வழங்கப்படும் அதிகாரிக்கு அல்லது அதிகாரிகளுக்கு பாவனைக்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள குறிப்பிட்டவளவினுள் பிரவேசிப்பதற்கு இந்த துணைச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்படுகின்றது.

13. 11 ஆம் பந்திக்கமைய அதிகாரமளிக்கப்படும் அதிகாரி அல்லது அதிகாரிகள் சனசமூக நிலையத்தினை ஒதுக்கிக் கொண்ட நபருக்கு மற்றும் அவர்களது உரிய காரியங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு தமது கடமைகளில் ஈடுபடல் வேண்டும்.

14. சனசமூக நிலையத்தினை பாவனைக்காக பெற்றுக்கொள்ளும் நபர்களினால் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு வருகை தரும் அதிகாரியின் அல்லது அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறுவிளைவித்தல் ஆகாது.

15. இந்த துணைச் சட்டத்தின் ஏதேனுமொருவிதி முறையினை மீறுதல் குற்றமாவதுடன், உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) பிரிவில் கூறப்பட்டுள்ள தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும்.

16. சொற்பிரயோகம் தொடர்பாக வேறு பொருள் விளக்கம் தேவைப்பட்டால் அன்றி அப் பிரிவின் துணைச் சட்டங்களில் -

"பொது காரியம்" என்பதன் மூலம்..................... பிரதேச சபைக்குரிய பிரதேசத்திற்குள் குடியிருக்கும் மக்களின்

பொது நன்மை கருதி அல்லது தேவை கருதி ஏதோவொரு அரச நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் யாதேனுமொரு கூட்டம் கலந்துரையாடல், வைத்திய சிகிச்சை நிலையம், நிவாரணம் வழங்கும் காரியம் போன்ற சுபாவத்தினாலான யாதேனுமொரு காரியம் அல்லது சமய ரீதியான அல்லது சமூக ரீதியான காரியமொன்று கருதப்படுவதுடன், ஏதேனும் வர்த்தக சுபாவத்துடன் கூடிய காரியம் அதில் உள்ளடக்கப்படக்கூடாது.

"சனசமூக நிலையம்" என்பதன் மூலம் .............. பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள யாதேனுமொரு காணி அல்லது சூழல் குறிப்பிடப்படுவதுடன் அதனைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மதிற் சுவர் அல்லது வேலி அல்லது அதனுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாதேனுமொரு கட்டிடம் அல்லது அதனுள் அடங்கும்.

"அரச நிறுவனம்" என்பதன் மூலம் அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிர்வாகத்தின் கீழுள்ள ஏதேனுமொரு நிறுவனம் எனக் கருதப்படும்.

### முதலாம் அட்டவணை

**ஹாலி - எல பிரதேச சபையின்.............. அமைந்துள்ள சனசமூக நிலையத்தினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிகோரும் விண்ணப்பப்படிவம்**

(1) விண்ணப்பதாரியின்/நிறுவனத்தின் பெயர் :----.
முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(2) சனசமூக நிலையத்தினைக் கோருவதற்கான காரணம் :---.
(3) தேவைப்படும் திகதி மற்றும் நேரம் :----.

| திகதியிலிருந்து | திகதிவரை | நேரம் |
|---|---|---|
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |
| .................................. | .................................. | .................................. |

*(4) **அரச நிறுவனமாயின் தலைவரின் பதவி முத்திரையும் கையொப்பமும்**.*

*மேற்கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானதும், சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இந்த கோரிக்கைக் கிணங்க குறித்த சனசமூக நிலையத்தினை ஒதுக்கித் தரப்பட்டால், அந்த சனசமூக நிலையத்தின் கட்டிடத்திற்கோ நிர்மாணங்களுக்கோ, உபகரணங்களுக்கோ, பொருத்துகைகளுக்கோ யாதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கான நட்ட ஈட்டிணை வைப்புப் பணத்திலிருந்து .............................. பிரதேச சபையினால் அறவிடப்படுவதற்கு சம்மதிப்பதுடன் குறித்த வைப்புப் பணம் அந்த அறவிடுகைக்கு போதாதெனில் மேலும் தேவைப்படும் பணத்தை..................... பிரதேச சபைக்குச் செலுத்துவதற்கும் சம்மதிக்கின்றேன். அதேபான்று சனசமூக நிலையங்கள் தொடர்பான துணைச் சட்டங்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் சம்மதிக்கின்றேன்.*

............................................................
*விண்ணப்பதாரியின் யையொப்பம்.*

*திகதி :.........................*

*பகுதி 4*

***பிரதேச சபையிடம் அல்லது சபையின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்துக்களின் முகாமைத்துவம் விளையாட்டு மைதானங்கள்***

*1. பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லது சபையின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்களினதும் விளையாட்டு அரங்குகளினதும் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவிடல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. பிரதேச சபைக்குரிய விளையாட்டுத் திடல்கள் மற்றும் விளையாட்டு அரங்குகளை பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றினைப் பெறுவதற்கு விரும்பும் யாராயினும் ஒரு நபர் இங்கு 1 ஆவது பட்டியலில் காணப்படும் மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றினை பிரதேச சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*3. விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டு அரங்கினையும் பயன்படுத்துவதற்காக அனுமதி கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் பிரதேச சபை அலுவலகத்துக்குக் கிடைத்த ஒழுங்குக்கு அமைய கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறாயினும், விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டு அரங்கினையும் பயன்படுத்துவதற்காகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களில் ஏதாயினும் ஒரு விளையாட்டுக்கு அல்லது விளையாட்டுடன் தொடர்பான ஏதாவது ஒரு காரணம் சம்பந்தமான விண்ணப்பப்படிவத்துக்கு மேலான முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.*

*4. பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படுகின்ற விதத்தில் விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டு அரங்கினையும் ஒதுக்குவதற்கான கட்டணங்கள் மற்றும் பாதுகாப்புப் பிணைப்பணம் செலுத்தப்பட்டதன் பின்னரே அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். குறித்த கட்டணங்களும் பாதுகாப்புப் பிணைப்பணமும் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படும் வேறு அத்தொகை வருடாந்தம் அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*5. விளையாட்டு மைதானம் அல்லது விளையாட்டு அரங்கு பயன்படுத்துவதற்கான விண்ணப்பப்படிவம் குறித்த ஒதுக்குதலை எதிர்பார்க்கின்ற தினத்திற்கு குறைந்த பட்சம் (03) மூன்று வேலை செய்யும் நாட்களுக்கு முன்பு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*6. விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளுக்கோ அதனைச் சுற்றியுள்ள அரசாங்க அலுவலகங்களின் கடமைகளுக்கோ இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*7. விளையாட்டு மைதானத்தில் அல்லது விளையாட்டு அரங்கினுள் மதுபானம் அருந்துதல் தகாததுடன், வைபவ தினங்களில் பயன்படுத்தும் அலங்காரப் பொருட்களும் வேறு கழிவுப் பொருட்களும் முறையாக உரிய இடங்களில் போடப்படுதல் வேண்டும்.*

*8. மேலே கூறியவாறு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் அல்லது விளையாட்டு அரங்கினது ஒதுக்கலை ரத்து செய்து கொள்ள யாராயினும் ஒரு விண்ணப்பதாரிக்குத் தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு இணங்க இடமளிப்பதற்கு சபையின் தலைவருக்கு அல்லது செயலாளருக்கு இயலுமை உண்டு:-*

*(அ) விளையாட்டு அரங்கினை அல்லது விளையாட்டு மைதானத்தை ஒதுக்குவதற்காக செலுத்தப்பட்ட கட்டணம் அன்றே பிரதேச சபையின் வருமானத்தில் வரவு வைக்கப்படுவதால், அத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது ;*

*(ஆ) வைப்புப் பணமாகப் பெறப்பட்ட தொகை மாத்திரம் விண்ணப்பதாரிக்குத் திருப்பித் தரப்படும் ;*

*9. (அ) யாராயினும் ஒரு நபரினால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் அல்லது விளையாட்டு அரங்கு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட காரணத்துக்கு அல்லாது வேறு எந்த ஒரு காரியத்துக்காகவும் பயன்படுத்துதல் ஆகாது ;*

(ஆ) விளையாட்டு மைதானத்தை அல்லது விளையாட்டு அரங்கினை ஒதுக்குவதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று எக்காரணம் கொண்டும் வேறொரு நபருக்குக் கொடுக்கப்படுதல் ஆகாது.

10. யாராயினும் ஒரு நபரினால் விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு, அது சம்பந்தமாக விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலேயே விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

11. ஏதாவது காரியத்துக்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் ஒன்று தொடர்பில் அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட தினத்தை மாற்றிக் கொள்வதற்குத் தேவை ஏற்பட்டால், விண்ணப்பதாரியால் அது சம்பந்தமாக எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றினை சமரப்பிக்கலாம். குறித்த கோரிக்கைக்கு அமைவாக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட தினத்தை மாற்றம் செய்வது 3 ஆம், 4 ஆம் துணைச் சட்டங்களின் நியதிகளுக்கு உட்பட்டனவாக அமைதல் வேண்டும்.

12. இத்துணைச் சட்டங்களில் காணப்படும் விதிமுறைகளுக்கு அமைய விளையாட்டு மைதானம் யாதாயினும் ஒரு காரியத்துக்காகவும் ஒதுக்கப்படாத ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த விளையாட்டு மைதானம் விளையாடுவதற்காக அல்லது விளையாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு பிரதேச சபையின் தலைவரது அல்லது தலைவரின் அதிகாரம் வழங்கப்பட்டவேறோர் அதிகாரியின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

13. யாதாயினும் ஒரு காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானம் உரிய காரித்துக்காக பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சபையில் வைப்புச் செய்யப்பட்ட பிணைப்பணத்தில்,

(அ) விளையாட்டு மைதானத்துக்கோ, விளையாட்டு அரங்கிற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ ஏதாவது சேதம் அல்லது நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்த சேதத்தின் பெறுமதி மற்றும் ;

(ஆ) விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கால எல்லையினைவிட கூடுதலாக பயன்படுத்திய காலத்துக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் ஆகியவற்றை கழித்துக் கொண்டதன் பின்னர் எஞ்சியுள்ள பணம் மாத்திரம் விண்ணப்பதாரிக்கு திருப்பிச் செலுத்தப்படலாம்.

14. யாராயினும் ஒரு நபரினால் பிரதேச சபைக்குரிய விளையாட்டு மைதானத்துக்கு மற்றும் விளையாட்டு அரங்கிற்கு தீங்கு விளைவித்தல் அல்லது அவ்வாறு தீங்கு நேர ஏற்பாடு செய்தல் ஆகாது என்பதுடன், விளையாட்டு மைதானத்துக்குள் மாடுகள், பன்றிகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் அல்லது நாய்களை உட்புகவிடுதல் ஆகாது. அதேபோன்று மேலும் பிரதேச சபையின் தலைவர் அல்லது வேறோர் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின்றி எந்த ஒருவாகனத்தையும், எந்த ஒரு விளையாட்டு மைதானத்துக்குள்ளும் செலுத்துதல் ஆகாது.

15. இத்துணைச் சட்டங்களின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் பிரதேச சபையின் அத்தியாவசியமான காரியத்துக்காகத் தேவைப்படுமிடத்து, குறித்த ஒதுக்கினை இரத்துச் செய்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அது பற்றி ஒதுக்கப்பட்ட தினத்துக்கு மூன்று தினங்களுக்கு முன்பதாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதரியினால் செலுத்தப்பட்ட கட்டணமும் பிணைப்பணமும் முழுமையாக அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

16. இத்துணைச் சட்டங்களின் எந்த ஒரு விதிமுறையினையும் மீறுகின்ற ஒரு நபர் குற்றச் செயல் ஒன்றினைச் செய்கின்றார் என்பதுடன், உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தல் வேண்டும்.

17. இத்துணைச் சட்டத்தில் சொற்பிரயோகம் சம்பந்தமாக வேறு பொருள் தேவைப்பட்டால் அன்றி,

"விளையாட்டு" என்பது 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட விளையாட்டுக்கள் சட்டத்தில் அதற்காக கொடுக்கப்பட்டுள்ள அர்த்தத்தையும் ;

"விளையாட்டு மைதானம்" என்பது சபையினால் விளையாட்டு மைதானம் என்று பெயரிடப்பட்டுள்ள முறையான பெயர்ப்பலகை பொருத்தப்பட்டதன் மூலம் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இடமொன்றையும்;

"விளையாட்டு அரங்கு" என்பது பெயரிடப்பட்ட வியைாட்டு மைதானத்தினுள் அமைக்கப்பட்டுள்ள உள்ளக விளையாட்டரங்கு, பார்வையாளர் மேடை, கட்டிடங்கள், நீச்சல் குளம் மற்றும் வேறு கட்டிடத்தொகுதிகள் அனைத்தையும் குறிக்கும்.

## முதலாம் அட்டவணை

## பிரதேச சபையின் விளையாட்டு மைதான பாவனைக்காக அனுமதிகோரும் விண்ணப்பப்படிவம்

1. கோருகின்ற விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்தின் பெயர் :....................................................................
.......................... ..........................................................................................................................................

2. விண்ணப்பதாரியின் பெயர் :................................................................. ..........................................................
..........................................................................................................................................................................

விலாசம் :.......................................................................................................

...............................................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :.......................................................................

3. விளையாட்டு மைதானம் கோரப்படும் காரணம் :..........................................................

...............................................................................................................

...............................................................................................................

4. தேவைப்படும் திகதியும் நேரமும் :

| திகதியிலிருந்து | திகதிவரை | நேரம் |
|---|---|---|
| ............................................. | ............................................. | ............................................ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானது எனவும், பிழையற்றது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்த வேண்டுதலுக்கு இணங்க குறித்த விளையாட்டு மைதானம் ஒதுக்கித் தரப்படுமெனில், அவ் விளையாட்டு மைதானத்தில் கட்டிடங்களுக்கோ, நிர்மாணங்களுக்கோ, உபகரணங்களுக்கோ மற்றும் பொருத்தப்பட்டுள்ளவற்றுக்கோ யாதாயினும் சேதம் ஏற்பட்டால், அதற்கான நட்டத்தை பிணைப் பணத்திலிருந்து பிரதேச சபை அறவிட்டுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன்.

அத்துடன், குறித்த பிணைப்பணம் அறவிடுவதற்கு போதாது என்னும் போது மேலும் தேவைப்படும் பணத்தை பிரதேச சபைக்குக் கொடுப்பதற்கும் இணங்குகிறேன். அதேபோன்று விளையாட்டு மைதானத்தை ஒழுங்குறுத்தல், நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான துணைச் சட்டங்களின் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கும் இணங்குகிறேன்.

.................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :...................................................

***பகுதி 05***

***பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்கு கீழ் வழங்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் முகாமைத்துவம்***

***சவத் தகனசாலை (சுடலை)***

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சவத்தகன சாலையினை ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி சபைக்குச் சொந்தமான சவத் தகனசாலையில் எந்தவொரு சடலமும் தகனம் செய்யப்படலாகாது.

3. இரண்டாவது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கும் இதன் பின்னர் விண்ணப்பதாரி என அழைக்கப்படும் நபரினால் 1 ஆம் பட்டியலில் காட்டப்பட்டவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்று தலைவருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரி இறந்துபோனவரின் மிகக்கிட்டிய உறவினராதல் வேண்டியதுடன், இறந்து போனவரின் மரணச் சான்றிதழின் மூலம் பிரதியையும் அதன் புகைப்படப் பிரதியொன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும். மரணச் சான்றிதழில் தகனம் செய்யப்படும் இடமென பிரதேச சபையினது தகனச் சாலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5. இறந்து போனவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு சட்டக் கோவைப் பிரமானங்களின் கீழ் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தால் விசாரணையை மேற்கொண்ட நீதிவானால் அல்லது மரண விசாரணை அதிகாரியினால் சடலத்தைத் தகனம் செய்வதற்கு அனுமதி வழங்கி விநியோகிக்கப்பட்ட சான்றிதழை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. இறந்து பிறந்த ஒரு (சிசுவின்) சடலமாயின் இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் காரியாலயத்திற்குக் கிடைத்ததன் பின்னர் கிடைக்கப்பெற்ற ஒழுங்குக்கு அமைய பட்டியல் படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவமொன்று நிராகரிக்கப்பட்டால், அதற்கான காரணங்கள் விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். சடலத்தைத் தகனம் செய்யும் போது பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அல்லது அதற்கு வெளியே வசித்தவர்களின் சடலங்களும் தகனம் செய்யப்படலாம் என்பதுடன், பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குடியிருந்த ஒருவரின் சடலத்தை தகனம் செய்வதற்கு மற்றும் அதிகார எல்லைக்கு வெளியில் குடியிருந்த ஒருவரின் சடலத்தைத் தகனம் செய்வதற்கு பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் வெவ்வேறாக நிர்ணயிக்கப்படும் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணங்கள் பிரதேச சபையினால் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

8. வாரத்தில் எல்லா நாட்களிலும் தகனம் செய்யப்படலாம் என்பதுடன் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களின் ஒழுங்கமைய நேரம் ஒதுக்கி வழங்கப்படல் வேண்டும் தகனம் செய்யப்படும் நேரம் காலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை ஆவதுடன் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்பதாக சடலத்தை தகனச்சாலை பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். காலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தைவிட மாற்று நேரங்களில் சடலமொன்று தகனம் செய்யப்படவேண்டுமெனில் அதற்காக தலைவரது விசேட அனுமதி பெறப்படல் வேண்டும். ஒரு நாளில் தகனம் செய்யப்படும் அதிகூடிய சடலங்களின் எண்ணிக்கையானது சபையினால் தீர்மானிக்கப்பட்டு தகனச் சாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

9. முறையான அனுமதிப்பத்திரத்தின் மூலம் தகனம் செய்தவற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள சடலமொன்று அனுமதி வழங்கப்பட்டுள்ள நேரத்துக்குள் தகனம் செய்யப்படுவதனை நீதிமன்றத்தினால் அல்லது பொலிஸ் தலைமையதிகாரியினால் வழங்கப்படும் எழுத்துமூலமான கட்டளையொன்றினால் மாத்திரமே இடைநிறுத்த இயலும். ஒதுக்கப்பட்ட நேரத்துக்குப் பதிலாக மாற்று நேரத்தை வழங்கிட அல்லது அதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை மீளச் செலுத்துவதற்கு பிரதேச சபை வகை கூறலுக்கு உட்படாது என்பதுடன் மீளச் செலுத்துமாறு கோருவதற்கு விண்ணப்பதாரிக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

10. தகனச்சாலையில் சடலமொன்று தகனம் செய்யப்படுகின்றபோது இடம்பெறும் தொழில் நுட்பக்கோளாறு காரணமாக சற்று நேரத்தில் மீண்டும் முந்திய நிலைக்குக் கொண்டுவர முடியாத சந்தர்ப்பத்தில் அந்தச் சடலம் அல்லது சடலத்தின் பகுதி கௌரவத்துடன் அடக்கம் செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உரியதாகும்.

11. சடலம் தகனம் செய்யப்பட்டதிலிருந்து 24 மணித்தியாலயத்துக்குள் சடலத்தில் பஸ்மத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரி சமுகமளிக்க வேண்டியதுடன், குறித்த நேரத்துக்குள் பெற்றுக்கொள்ளப்படாத பஸ்மத்தை குழியொன்றில் அடக்கம் செய்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரமுண்டு.

12. சபைக்குச் சொந்தமான மயான பூமியில் பஸ்மத்தை அடக்கம் செய்வதற்கு பிரதேச சபையின் அனுமதிபெறப்பட வேண்டியதுடன், அதற்கான கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும். கட்டணம் சபையினால் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கப்பட்டு அரசாங்க வத்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட விதத்தில் அமைதல் வேண்டும்.

13. தகனச் சாலை வளவுக்குள் அனுமதியின்றி பிரவேசித்தல் குற்றச் செயலாவதுடன் தகனச் சாலை வளவுக்குள் தகனம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சடலத்துடன் வருகை தந்த நபர்களால் மாத்திரமே உட்பிரவேசிக்க முடியும் தகனச் சாலை வாகனமும் மேலதிகமாக மற்றுமொருவாகனமும் மாத்திரமே உள் நுழைய அனுமதிக்கப்படும்.

14.சபையினால் முறையான அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபர் அல்லது நபர்கள் மாத்திரமே தகனச் சாலையின் காரியங்களுக்காக ஈடுபடுத்தப்பட இயலும்.

15. தகனச் சாலை வளவினுள் அமைதியைக் குலைக்கும் வகையில் நடந்துகொள்ள தகனச் சாலையின் சேவையில் ஈடுபடுபவர்களின் கடமைகளுக்குப் பங்கம் விளைவித்தல், தகனச்சாலை வளவினுள் அலங்கார வேலைகளைச் செய்தல் என்பன தவிரக்கப்படல் வேண்டியதுடன் வளவினுள் கூட்டம் நடாத்துதல், மதுபானம் அல்லது போதைப் பொருள் பாவித்தல் தவிர்க்கப்படவேண்டியதுடன் சமய அனுட்டானங்கள் மேற்கொள்ளுதல் இயலும்.

16. தகனச் சூளையினுள் சடலத்தை உள்நுழைத்து அதன் பாதுகாப்புக் கதவை மூடியபின்னர், சூழையின் திறந்த பகுதியினுள் தகனச் சாலைப் பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர்கள் தவிர வேறுயாரும் உள்ளிட முடியாது.

17. இத்துணைச் சட்டத்தில் செய்யத் தகாதது எனக் குறிப்பிடப்பட்ட காரியங்களை செய்தல் குற்றச் செயலாவதுடன், அது சம்பந்தமாக உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் 750 ரூபாவுக்கு குறையாத தண்டத்திற்கு அக் குற்றத்தைச் செய்த நபர் உட்படுதல் வேண்டும். குறித்த குற்றச் செயலை மீண்டும் செய்தல் ஒரு தினத்துக்கு 250 ரூபாவுக்கு மேலதிக தண்டப்பணமாக செலுத்துவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

18. சபைக்குச் சொந்தமான தகனச் சாலையினுள் அல்லது வளவினுள் உள்ள உடைமைகளுக்கு சேதம் விளைவித்தால் அச் சேதம் தொடர்பான நட்டத்தினை சபைக்குச் செலுத்துவதற்கு விண்ணப்பதாரி கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

19. இத்துணைச் சட்டத்தில் "கிட்டிய உறவினர்" என்பது, இறந்தவரின் வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் அல்லது பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகள் அல்லது பாதுகாவலர் ஆகியோரைக் குறிப்பதுடன், "தகனச் சாலை பொறுப்பாளர்" என்று பிரதேச சபையினால் அங்கே சேவைக்காக அமர்த்தப்பட்ட நபரைக் குறிக்கும்.

***முதலாவது அட்டவணை***

*3 ஆவது சரத்து*

**தகனச்சாலையில் சடலமொன்றை தகனம் செய்வதற்காக அனுமதிகோரும் விண்ணப்பப்படிவம்**

1. உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசம் :..........................................................................................................

2. விண்ணப்பதாரியின் விபரங்கள் :.........................................................................................................................

(அ) பெயர் :...........................................................................................................................................
(ஆ) விலாசம் :........................................................................................................................................
(இ) தேசிய அடையாள அட்டை இல. :................................................. ........................................... ................
(ஈ) தொலைபேசி இலக்கம் :........................................................................................................................
(உ) தகனம் செய்ய வேண்டிய திகதி :..............................................................................................................
(ஊ) இறந்தவருக்கான உறவு முறை :................................................................................................................

3. இறந்தவரின் விவரங்கள் :....................................................................................................................

(அ) பெயர் :.......................................................................................... ................ ............. ................. ......
(ஆ) குடியிருந்த முகவரி :.......................................................................................................................
(இ) இறந்த திகதி :............................................................................................. ......................... .....................
(ஈ) வயது :.................................. வருடம் :.................................................................. மாதம் :................................
(உ) மரணச் சான்றிதழ் இலக்கம் :..................................................................................................................
(ஊ) மரணத்துக்கான காரணம் :......................................................................................................................

***விண்ணப்பதாரியின் உறுதியுரை :***

மேற்குறித்த விடயங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதெனவும், சடலத்தை தகனம் செய்வதற்கு ஒதுக்கித் தரப்பட்டுள்ள நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்பதாக சடலத்தை தகனச்சாலையில் ஒப்படைப்பேன் எனவும் தகனச் சாலையில் அல்லது அவ் வளவினுள் உள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பாதுகாக்கப்படுமெனவும் அவ் உடைமைகளுக்கு யாதாயினும் சேதம் ஏற்பட்டால் அவற்றுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் யையொப்பம்.

திகதி :..................................................

***பகுதி 6***

***பிரதேச சபைக்கு அல்லது சபையின் நிர்வாகத்திற்குக் கீழ் வழங்கப்பட்டுள்ள அசையாத சொத்துக்களின் முகாமைத்துவம்***

**நூலகங்களும் வாசிகசாலைகளும்**

1. பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையின் நிர்வாகத்திற்குக் கீழ் வழங்கப்பட்டுள்ள நூலகங்களின் பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் அவற்றின் பாவனை சம்பந்தமாக கட்டணங்கள் விதித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. (அ) சொற்பிரயோகம் சம்பந்தமாக மாற்றுக் கருத்து தேவைப்பட்டாலன்றி நூலகங்கள் தொடர்பான இத் துணைச் சட்டங்களில் ''நூலகப் பொறுப்பாளர்'' என்பதன் மூலம் நூலகத்திற்குப் பொறுப்பாகவிருக்க பிரதேச சபையினால் நியமிக்கப்படுகின்ற நபர் கருதப்படுவார் ;

(ஆ) பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற பொது நூலகமனாது,

(அ) வெளியல் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவு ;
(ஆ) ஆய்வுப் பிரிவு ;
(இ) சிறுவர் பிரிவு ;
(ஈ) பத்திரிகை வாசிப்புப் பிரிவு ;
(உ) கணணிப் பிரிவு ஆகிய பிரிவுகளைக் கொண்டதாக அமையும்.

3. பொது நூலகத்தின் மேற்பார்வை மற்றும் பொது நிர்வாகம் ஆகியன இதன் பின்னர் "நூலக சபை" என அழைக்கப்படும் ஒரு சபையிடம் ஒப்படைக்கப்படும் அச்சபை கீழ்க்காணும் நபர்களைக் கொண்டு அமைக்கப்படும் :-

(அ) இதன் பின்னர் "தலைவர்" என அழைக்கப்படும் சமகால பிரதேச சபையின் தலைவர் பதவியிருக்கும் நபர் ;
(ஆ) பிரதேச சபையினால் பிரதேச சபை உறுப்பினர்களுள் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் இருவர் ;
(இ) பிரதேச சபையினால் பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் அதிகாரப் பிரதேசத்தின் ஒரு விசேட நபர் மற்றும் சபையில் சேவை புரிகின்ற பிரஜைகள் அபிவிருத்தி அலுவலர் அல்லது வேறொரு அலுவலர், நூலகப் பொறுப்பாளர் உட்பட மேற்படி பிரிவுகளைப் பிரதி நிதித்துவம் செய்யும் அங்கத்தினர்கள் ஐவர்.

4. நூலகத்தை நன்முறையில் நடாத்திச் செல்லல், ஒழுங்குப்படுத்துதல், நிர்வகித்தல் மேற்பார்வை செய்தல் ஆகியன தலைவரது வகை கூறலாகும்.

5. (i) பிரதேச சபையின் தலைவர் அதிகார ரீதியாக நூலக சபையின் தலைவராதல் வேண்டியதுடன், நூலக சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் அவர் தலைமை தாங்குதல் வேண்டும். கூட்டத்துக்கு தலைவர் சமுகமளிக்காத வேளையில் சமுகமளித்திருக்கும் அங்கத்தினர்களினால் நூலக சபை அங்கத்தினர்களுள் தெரிவு செய்யப்படும் ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும் ;

(ii) எந்தவொரு கூட்டத்துக்கும் தலைமை வகிக்கும் அங்கத்தினருக்கு ஓர் அடிப்படை வாக்கும், யாதாயினுமொரு விடயம் தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் சமமான வாக்குகள் கிடைக்கப்பெற்றால் அத் தருணத்தில் நிர்ணயவாக்கொன்றும் உரித்தாகும்.

6. ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட பெரும்பான்மை இல்லாதவிடத்து சபைக் கூட்டத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாகாது என்பதுடன், இச்சபை மூன்று மாதங்களுக்கு ஒரு தரம் கூட வேண்டும்.

7. நூலக சபையினால் தேவையெனக் கருதப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட யாராயினுமொரு நபருக்கு பொது நூலக வளவின் ஒரு பகுதியை பாவிப்பதற்கு இடமளிக்கவோ அல்லது யாராயினுமொரு நபரினால் நூலகம் தொடர்பான இத்துணைச் சட்டத்தின் ஏதாவதொரு விடயம் மீறப்பட்டிருப்பின் அந் நபருக்கு நூலக வளவின் யாதாயினுமொரு பகுதியை பாவிப்பதற்கு இடமளிப்பதனை மறுப்பளிப்பதற்கு நூலக சபைக்கு அதிகாரமுண்டு.

**வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவு**

8. (i) யாராயினும் ஒரு நபர் -

(அ) 12 வயதுக்குக் குறையாதவராயிருந்தாலன்றி ;
(ஆ) பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குடியிருந்தால் அல்லது பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காரியாலயம் ஒன்று, வர்த்தக நிலையமொன்று உடையவராயிருந்தாலின்றி ;
(இ) நூலகப் பொறுப்பாளரிடம் 100 ரூபா வைப்புப் பணமாக செலுத்தி இருந்தாலன்றி ;
(ஈ) பிரதேச சபைக்கு வரி செலுத்தும் ஒருவரால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தால் அன்றி அந் நபர் வெளியில் எடுத்துச் செல்லும் பிரிவின் ஓர் அங்கத்தினராக பதிவு செய்யப்படுதலாகாது.

(ii) வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் அங்கத்தினராக தன்னைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு நபரும் தலைவரினால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டியதுடன் அவ் விண்ணப்பப்படிவம் கீழ்க்காணும் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
(அ) சபையின் ஓர் உறுப்பினர் ;

(ஆ) நூலக சபையின் ஓர் உறுப்பினர் ;
(இ) ஒரு சமய குரு ;
(ஈ) ஒரு சமாதான நீதவான் ;
(உ) ஒரு பாடசாலை அதிபர் ;
(ஊ) பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட ஒரு கிராம சேவகர்.

(iii)வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் ஓர் அங்கத்தினருக்கு வெளியில் எடுத்துச் செல்வதற்கான இரண்டு அட்டைகளைப் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு.

9. வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் ஓர் அங்கத்தினருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள ஓர் அட்டை மூலம் அவரால் எடுத்துச் செல்லப்பட்ட யாதாயினுமொரு புத்தகம் தொடர்பாக அவ் வகைகூறல் வேண்டும்.

10. வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் ஓர் அங்கத்தினருக்கு விநியோகிக்கப்பட்ட ஓர் அட்டை, காணாது போய்விட்ட சமயத்தில் அவ்வாறு காணமற் போனமை பற்றி அவர் நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும். அந்த அட்டையின் மூலம் வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து ஏதும் புத்தகம் பெறப்படவில்லை என நூலகப் பொறுப்பாளர் திருப்தியடைந்தால் அவரால் குறித்த அங்கத்தினருக்கு அட்டையின் பிரதியொன்று விநியோகிக்கப்பட இயலும், அட்டை காணமற் போனமை பற்றி அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து குறைந்தது 30 தினங்கள் கழிந்திருந்தால் அன்றி நூலகப் பொறுப்பாளரினால் பிரதியொன்று வழங்கப்படலாகாது.

11. வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து பெறப்பட்ட ஒரு புத்தகம், பெறப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளரிடம் மீண்டும் ஒப்படைத்தல் வேண்டும்.

12. அவ்வாறான யாதாயினுமொரு புத்தகம் வேறொரு அங்கத்தினரால் கோரப்படவில்லை எனில் அப்புத்தகத்தை மீண்டும் அதே அங்கத்தினருக்கு மேலும் 14 நாட்களுக்கு வழங்குவதற்கு நூலகப் பொறுப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

13. 11 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட 14 நாட்களுக்குள் யாதாயினுமொரு புத்தகம் ஓர் அங்கத்தவரினரால் நூலகப் பொறுப்பாளரிடம் மீள் ஒப்படைக்கத் தவறினால், புத்தகம் ஒப்படைக்கப்பட வேண்டிய தினத்தைத் தாண்டிச் செல்லும் ஒவ்வொரு நாளுக்கும் 5.00 ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்துவதற்கு அவ் அங்கத்தினர் உட்படுதல் வேண்டும்.

14. வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து அங்கத்தினரினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு புத்தகம் 11 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்கள் கழிந்து 30 நாட்களுக்குள் ஓர் அங்கத்தினரினால் மீள ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பத்தில் அந்த புத்தகம் காணாமற் போய்விட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

15. ஓர் அங்கத்தினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்று காணாமற் போயுள்ள அல்லது காணாமற் போயுள்ளதாக கருதப்படும் வேளையில் அப்புத்தகத்தை மீண்டும் வாங்கப்படுகின்ற செலவுத் தொகை அவர் அங்கத்தினரால் செலுத்தப்படல் வேண்டும்.

16. எந்தவொரு அங்கத்தினராலும் வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் புத்தகம் சேதப்படுத்தப்படவோ அல்லது எவ்விதத்திலும் பழுதுபடுத்தப்படல் கூடாது.

17. வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து தான் பெற்றுக்கொள்ள விரும்பும் புத்தகத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் அல்லது பழுது குறித்து நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டியது ஒவ்வொரு அங்கத்தினரதும் கடமையாகும்.

18. அவ்வாறான சேதம் அல்லது பழுதுபடுத்தல் பற்றி நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிப்பது யாராயினுமொரு அங்கத்தினரினால் செய்யாது விடப்படும் சந்தர்ப்பத்தில் அப்புத்தகம் அவருக்கு சேதமின்றியும் பழுது இன்றியும் வழங்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

19. ஓர் அங்கத்தினரால் மீள ஒப்படைக்கப்படும் புத்தகமொன்று மேலும் விநியோகிப்பதற்கு பொருத்தமற்ற வகையில் சேதமோ அல்லது பழுதோ ஏற்படுத்தப்பட்டிருப்பதாக நூலகப் பொறுப்பாளர் கருதுகின்ற வேளையில் அப்புத்தகத்தை மீண்டும் வாங்குவதற்கு ஏற்படுகின்ற செலவினை அவ் அங்கத்தினர் ஏற்றுக்கொள்ள கட்டுப்பட்டுள்ளார். குறித்த புத்தகம் மீண்டும் வாங்கப்பட்டதன் பின்னர், பழுதடைந்த புத்தகம் "பொது நூலகத்தினால் காணாமற் போன புத்தகமாகக் கருதி விற்கப்பட்டது." என முத்திரை பதிக்கப்பட்டு அந்த அங்கத்தினரிடம் கொடுக்கப்படல் வேண்டும்.

20. (அ) வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்றை எந்தவொரு அங்கத்தினரும் வேறு யாருக்கும் கொடுத்தலாகாது ;

(ஆ) இச்சரத்தில் (அ) பந்தியின் விதிமுறையினை மீறுகின்ற எந்தவொரு அங்கத்தினரினதும் வைப்புப் பணத்தை இல்லாமற் செய்யாது வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் அவரது அங்கத்துவம் ரத்து செய்யப்படும்.

21. (அ) பரவும் அல்லது தொற்றும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஓர் அங்கத்தவர் தான் எடுத்துச் சென்ற புத்தகத்தினை வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவில் மீள் ஒப்படைத்தலாகாது ;

(ஆ) வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிலிருந்து ஓர் அங்கத்தினரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்று பரவும் அல்லது தொற்றும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள நபரினால் பயன்படுத்தப்பட்டிருந்தால் அப்புத்தகத்தை அழித்துவிட வேண்டியதுடன் அப்புத்தகத்தை மீள வாங்குவதற்கான செலவினை குறித்த அங்கத்தவர் நூலகப் பொறுப்பாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

22. ஏதாவதொரு புத்தகத்தை வெளியில் எடுத்துச் செல்வது யார் என்பது பற்றி வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் அங்கத்தினர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அக்கருத்து வேறுபாட்டினை நூலகப் பொறுப்பாளர் தீர்த்துவைத்தல் வேண்டும்.

*23.* வேறொரு அங்கத்தினரால் வெளியில் எடுத்துச் செல்லப்பட்டுள்ள புத்தகமொன்றினை தான் பெற்றுக்கொள்ள ஓர் அங்கத்தினர் விரும்பினால், தனது பெயரையும் புத்தகத்தின் பெயரையும் அதற்காக வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு வைத்தல் வேண்டும். இப்புத்தகத்தை எடுத்துச் சென்ற அங்கத்தினரால் அது மீள் ஒப்படைக்கப்பட்டதும் நூலகப் பொறுப்பாளரினால் அதனை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தினருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். யாதாயினுமொரு புத்தகம் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தினர்களால் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் அடிப்படையில் அப்புத்தகம் அவர்களிடையில் விநியோகிக்கப்படல் வேண்டும்.

*24.* பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கும் அல்லது அலுவலகம் அல்லது வர்த்தக நிலையம் ஒன்றினை நடாத்திச் செல்வதனை கைவிடும் ஓர் அங்கத்தினர் வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவின் உறுப்புரிமையை இழப்பார் என்பதுடன், 08 ஆம் சரத்தின் கீழ் அவருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள இரு அட்டைகளையும் நூலகப் பொறுப்பாளரிடம் மீண்டும் ஒப்படைத்தல் வேண்டும்.

*25.* யாராவது ஒரு நபரினால் 8 (1) (இ) சரத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ள வைப்புப் பணமான 100 ரூபா வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவிற்கு அவரிடமிருந்து ஏதாவது பணம் வசூலிக்கப்பட உள்ளதாயின் அதனைக் கழித்த பின்னர் யாதாயினுமொரு தொகை எஞ்சியிருக்குமானால் அது அங்கத்தினரின் உறுப்புரிமை ரத்து செய்யப்படும் போது அவருக்கு மீண்டும் வழங்கப்படல் வேண்டும்.

*26.* வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவு ஞாயிற்றுக்கிழமை, பகிரங்க விடுமுறை தினம் மற்றும் குறைந்த பட்சம் 07 நாட்களுக்கு முன்னரான அறிவித்தலின் பின்னர் கையிருப்பைக் கணக்கெடுக்கும் காரியத்துக்காக நூலக சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற வேறும் தினங்களில் அன்றி தினசரி காலை 9.00 மணியிலிருந்து பி. ப. 5.00 மணிவரையான காலப்பகுதியில் திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

**ஆய்வுப் பிரிவு**

*27.* (அ) ஆய்வுப் பிரிவினைப் பயனப்படுத்துவதற்காக நூலகப் பொறுப்பாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தாலன்றியும் ;

(ஆ) ஆய்வுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தால் அன்றியும் எந்தவொரு நபரினாலும் ஆய்வுப் பகுதி பயன்படுத்தப்படல் ஆகாது.

*28.* நூலகப் பொறுப்பாளரினால் -

(அ) வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் இயன்ற ;

(ஆ) பிரதேச சபை எல்லைக்குள் குடியிருக்கும் ;

(இ) 12 வயதுக்கு குறையாத

எந்தவொரு நபருக்கும் ஆய்வுப் பிரிவினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படலாம்.

*29.* வாசிப்பதற்காக தன்னிடம் கையளிக்கப்பட்ட எந்தவொரு புத்தகத்தையும் எந்தவொரு நபரும் ஆய்வுப் பிரிவிலிருந்து வெளியில் கொண்டு செல்லுதலாகாது.

*30.* (i) இத்துணைச் சட்டத்தின் 26 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட ஆய்வு பிரிவு மு. ப. 9.30 மணியிலிருந்து மத்தியானம் 12 மணிவரை பின்னர் பி. ப. 1.00 மணியிலிருந்து 4.30 மணிவரையும் திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) பிரதேச சபையினால் பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்படுவதன் ஊடாக,

(அ) இச்சரத்தின் முதலாவது பந்தியில் கூறப்பட்ட கால எல்லை நீடிக்கப்படலாம்.

(அ) குறித்த பிரேரணையின் பிரகாரம் குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பகிரங்க விடுமுறை தினங்களிலும் ஆய்வுப் பிரிவினைத் திறந்து வைக்குமாறு நூலக சபை கோரிக்கை விடுக்க முடியும் ;

(இ) கையிருப்பை கணக்கெடுக்கும் காரியத்துக்காக பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும் தினங்களில் ஆய்வுப் பிரிவினை மூடி வைக்குமாறும் கோரிக்கை விடுக்கலாம் .

**சிறுவர் பிரிவு**

*31.* நூலகப் பொறுப்பாளரின் அனுமதி பெற்றுள்ளவர்களும் 05 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்களும் மாத்திரமின்றி வேறு எந்தவொரு நபரினாலும் சிறுவர் பிரிவு பயன்படுத்தப்படல் இயலாது.

*32.* புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்லுதல் தொடர்பில் வெளியில் எடுத்துச் செல்ல வழங்கும் பிரிவுக்கான விதிமுறைகள் செல்லுபடியாகும்.

**பத்திரிகை வாசிப்புப் பிரிவு**

33. இத்துணைச் சட்டத்தின் 26 ஆம் சரத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக வாசிப்பு மண்டபம் மு. ப. 9.00 மணியிலிருந்து பி. பி. 5.00 மணிவரை திறந்து வைக்கப்படல் வேண்டும்.

34. கையிருப்புக் கணக்கெடுக்கும் காரியத்துக்காக பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும் தினங்களில் வாசிப்பு மண்டபத்தினை மூடிவைக்குமாறு நூலக சபை கோரிக்கை விடுக்கலாம்.

35. வாசிப்பு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிப்பு மண்டபத்துக்குரிய எந்தவொரு பத்திரிகையோ தவணை அறிக்கையோ, சஞ்சிகையோ வரைபடமோ, ஆவணமோ, கையெழுத்துப் பிரதியோ அல்லது வேறேதுமொரு கடிதமோ எந்தவொரு நபரினாலும் வாசிப்பு மண்டபத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லப்படலாகாது.

**கணனிப் பிரிவு**

36. கணனிப் பிரிவினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு அங்கத்தினரும் நூலகப் பொறுப்பாளருக்கு எழுத்துமூலமானதொரு விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

37. அவ்வாறு கோருகின்ற அங்கத்தினர் 15 வயதினைத் தாண்டியவராக இருத்தல் வேண்டும்.

38. கணனிப் பிரிவிற்கான அங்கத்துவ பணமான 500.00 ரூபாவை செலுத்தி தனியான அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

39. ஒரு கணனியை ஒருவர் ஒரு நாளில் ஒரு மணித்தியாலயம் மாத்திரமே பயன்படுத்தலாம்.

40. கணனியைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் கணணியைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அதிலுள்ள குறைபாடுகளை தேடிப்பார்த்த பின்னரே பயன்படுத்துதல் வேண்டும்.

41. ஏதோ ஒரு விதத்தில் கணனி பழுதடைந்திருந்தால் அதுபற்றி நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

42. அவ்வாறு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கணனியிலுள்ள குறைபாடு என்னவென நூலகப் பொறுப்பாளர் தேடிப்பார்த்தல் வேண்டும்.

43. அவ்வாறு தேடிப்பார்த்ததன் பின்னர் அக்குறைபாடு அச்சமயம் பயன்படுத்தியவருக்கு முன்னரே இருந்ததா அல்லது அப் பாவனையாளரினால் ஏற்பட்டதா என நூலகப் பொறுப்பாளர் தீர்மானித்தல் வேண்டும்.

44. குறித்த குறைபாட்டினை நீக்கி கணனியை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை நூலகப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது**

45. யாதாயினுமொரு பரவும் நோயினால் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த அல்லாவிடின் அவ்வகையான நோயினால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளிக்கு அண்மையில் பரிகாரம் செய்த ஒரு நபர் நோய் பரவக்கூடிய காலத்துக்குள் அல்லது நோயரும்பும் காலத்துக்குள் பொது நூலகத்தினுள் உட்பிரவேசித்தலாகாது.

46. எந்தவொரு நபரும் -

(i) பொது நூலகத்தின் வளவினுள் அல்லது அதனை சூழவுள்ள பகுதியில் கலவரத்தில் ஈடுபடுதல் அல்லது கலவரம் ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ளலாகாது ;

(ii) பொது நூலகத்தினுள் அல்லது அதன் சூழலில் பிரதேச சபையின் ஏதாவதொரு கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு அல்லது ஏதாவது உடைமைகளுக்கு நட்டம் ஏற்படுத்துதல் அல்லது பங்கப்படுத்தலாகாது.

(iii) பொது நூலகம் மூடப்பட்ட பிறகு நூலக வளவினுள் தங்கியிருத்தல், அல்லது காரணமின்றி நடமாடல் கூடாது.

(iv) பொது நூலக வளவினுள் புகைபிடித்தல் அல்லது எச்சில் துப்புதலாகாது.

(v) கோசமிடுதல், பாட்டுப்பாடுதல் அல்லது வேறு ஒலி எழுப்புதலாகாது.

(vi) அசுத்தமான நிலைமையுடன் பொது நூலக வளவினுள் பிரவேசித்தல் ஆகாது ;

(vii) பொது நூலக வளவினுள் கையடக்கத் தொலைபேசி பாவனை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

47. நூலகப் பொறுப்பாளருக்கோ அல்லது நூலகப் பொறுப்பாளரின் பணிப்புரையின் பேரில் செயற்படும் வேறும் யாராவது நபருக்கோ அவரது அதிகாரங்களை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் போது இத்துணைச் சட்டத்தின் பிரகாரம் எவ்வித இடையூறுகளும் விளைவிக்கலாகாது.

48. இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாயினுமொரு விதி முறையினை மீறுதல் குற்றச் செயலாவதுடன், அந்நபர் உரிய அதிகாரமுடைய நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படின் 750 ரூபாவுக்கு மேற்படாத தண்டமும், அக்குற்றச் செயலைத் தொடர்ந்து செய்தால் குற்றமிழைக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கும் 250 ரூபாவுக்கு மேற்படாத தண்டமும் செலுத்துவதற்கு உடன்படல் வேண்டும்.

## பகுதி 7

## வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் எடை மற்றும் வேகத்தை மட்டுப்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டம்

1. பிரதேச சபைக்குரிய வீதிகளில் வாகனங்களின் எடை மற்றும் வேகத்தை மட்டுப்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. பிரதேச சபைக்குரிய வீதிகளில் நிர்ணயிக்கப்படுகின்ற எடையுடனும், வேகத்துடனும் கூடிய வாகனங்கள் பயணித்தல், அவற்றை நிர்வகித்தல் குறித்த வீதிகளுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் வீதிகளைப் பயன்படுத்தலுக்காகக் கட்டணங்களைத் தீர்மானித்தல் என்பவற்றுக்காக இத்துணைச் சட்டம் விதிக்கப்படுகின்றது.

3. பிரதேச சபைக்குரிய வீதியொன்றில் இங்கு மூன்றாவது உப பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எடையை விடகூடிய எடையுள்ள வாகனங்களை செலுத்துவதற்கு தேவை ஏற்படும் ஒவ்வொரு நபரினாலும் குறைந்த பட்சம் அப்பணத்தை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கின்ற தினத்திற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன்பதாக இங்கு முதலாவது பட்டியலில் குறிப்பிட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இங்கு 2 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய முறையான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டிருந்தாலன்றி எந்தவொரு நபரும் அந்த எல்லையைக் கடந்து குறித்த வீதிகளில் வாகனங்களைச் செலுத்துதல் கூடாது.

5. அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் நபரினால் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு ஏற்புடையதாயிருந்தாலன்றி தலைவரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் எந்தவொரு நபருக்கும் போக்குவரத்துக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது :-

(i) வீதிகளில் விதிக்கப்பட்டுள்ள எடைக்கு உட்பட்டதான போக்குவரத்தை மேற்கொள்ள இயலுமாதல் ;

(ii) வீதிகளுக்கு சேதம் விளைக்காத வாகனங்களாயிருத்தல் வேண்டும் ;

(iii) சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வீதிப் பாதுகாப்பு பிணைப் பணம் சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் வருடாந்தம், மாதாந்தம், வருடாந்தம் மற்றும் தினசரி என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படுவதுடன், குறித்த அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணங்கள் அனுமதிப்பத்திரங்களைப் பெறுநர்களினால் சபைக்குச் செலுத்தப்படவேண்டியதுடன், அனுமதிப்பத்திரக் கட்டணம் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. குறித்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் மற்றும் நேரத்தினுள் மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபடுதல் வேண்டியதுடன், குறித்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பொருட்களை மாத்திரம் ஏற்றிச் செல்லப்படல் வேண்டும்.

8. மேலே 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்துக்கு மேலதிகமாக போக்குவரத்தின் போது வீதிகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்களை ஈடுசெய்வதற்காக சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு பாதுகாப்புப் பிணைப் பணத்தையும் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரத்தின் காலக்கெடு முடிந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டவரினால் வீதிப்பாதுகாப்புப் பிணைப் பணத்தை மீளப் பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண்டியதுடன் வீதிக்கு சேதம் ஏற்படாமை குறித்த உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் வீதிப் பாதுகாப்புப் பிணைப் பணம் மீளச் செலுத்தப்படும்.

10. வீதிக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டால் பிணைப் பணம் சபைக்குரியதாவதுடன் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 70 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு நிறுவனத்தினால் அனுமதிப்பத்திரத்தினை பரிசீலனை செய்யப்படுதல் சட்டரீதியானதாக வேண்டியதுடன், யாரேனுமொரு அனுமதிப்பத்திர உடைமையாளரினால் குறித்த பரிசீலனைக்கு அல்லது அவ்வாறான காரியத்துக்கு இடையூறு விளைவித்தல் ஆகாது.

12. வீதிகளில் விதிக்கப்பட்டுள்ள வேக எல்லைகளை மீறி ஓட்டத்தில் ஈடுபடுதல் கூடாது.

13. முறையான அனுமதிப்பத்திரங்களின்றி வீதிகள் ஆரம்பமாகும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்தில் ஈடுபடக்கூடிய வாகனங்கள் எடை எல்லைகளை மீறி வீதிகளில் வாகனங்களைச் செலுத்துதல் கூடாது.

*14. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் இத்துணைச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள வரையறையிலிருந்து விடுவிக்கப்பட கூடும்.*

(i) *அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் வாகனங்கள் ;*

(ii) *இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் பயணிக்கும் வாகனங்கள்.*

*15. இத்துணைச் சட்டங்களில் குறிப்பிடப்படும் எந்தவொரு விதி முறையினையாவது மீறுதல் குற்றச் செயலாற்றுவதுடன், அந்நபருக்கு உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) பந்தியின் எல்லைகளுக்கமைவான தண்டனைக்கு உட்படல் வேண்டும்.*

*16. சொற்பிரயோகம் தொடர்பாக வேறு பொருள் விளக்கம் தேவைப்பட்டாலின்றி இந்த பகுதியின் துணைச் சட்டங்களில் -*

(i) *வீதி என்ற பதத்தினால், பிரதேச சபைக்குரிய ஏதாவதொரு ஒழுங்கை, வீதி, பாலம், மற்றும் பிரதேச சபைக்குரிய ஏதாவதொரு பாதையுடன், வீதியுடன் பெருந்தெருவுடன், ஒழுங்கையுடன் படிக்கட்டுடன் இணைக்கின்ற ஒரு பாலம் அல்லது எவ்வாறானதுமொரு நீர்போக்கு, நீரோடை என்பன கருதப்படும் ;*

(ii) *வாகனம் என்ற பதத்தினால், மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கொள்ளப்படவேண்டியதுடன், மாட்டு வண்டி, மிதிவண்டி, அல்லது சில்லுகள் பொருத்தப்பட்ட இயந்திரத்தினால் அல்லது வேறு வகையில் இயங்கும் ஏதாவதொரு உபகரணம் கருதப்படும்.*

*முதலாவது அட்டவணை*

*3 ஆவது பந்தி*

**பிரதேச சபை வீதிகளில் வாகனங்கள் பயணிப்பதற்கான விண்ணப்பப்படிவம்**

(1) விண்ணப்பதாரியின் பெயர் :----.
(2) முகவரி :----.
(3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(4) தொலைபேசி இலக்கம் :---.
(5) வாகன இலக்கம் :----.
(6) வாகனத்தின் எடை :----.
(7) ஏற்றிச் செல்லப்படும் பொருள் :----.
(8) பொருள் ஏற்றப்பட்டதன் பின் முழு எடை :----.
(9) பயணிக்கும் வீதி பற்றிய விபபரம் :----.

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

வரைபடம் :

| |
|---|
| |

*10. விண்ணப்பிக்கப்படும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாக வேண்டிய காலக்கெடு: ஆரம்ப திகதி :............................. ...............முடிவுத் திகதி :...........................................................*

*11. பிரதேச சபை வீதிகளில் போக்குவரத்தை நிர்வகிப்பதற்கான துணைச் சட்டங்களின் நிர்ணயங்கள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும் எனவும் அனுமதிப்பத்திரத்தினூடாக கிடைக்கப்பெற்றுள்ள அனுமதியின்படி செயல்படுவேன் எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.*

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.........................................................

## இரண்டாவது அட்டவணை

*4ஆவது பந்தி*

### உரிய எடை எல்லையினை மீறி வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம்

(1) சபையின் பெயர் :----.
(2) அனுமதிப்பத்திர உடைமையாளரின் பெயர் :----.
(3) அனுமதிப்பத்திர உடைமையாளரின் முகவரி :----.
(4) வாகனத்தின் இலக்கம் :---.
(5) ஏற்றிச் செல்லப்படும் பொருள் :----.
(6) அதிகூடிய முழு எடையின் அளவு :----.
(7) அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலக்கெடு :----.

| | திகதி | ஆரம்பிக்கும் நேரம் | முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| (1) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (2) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (3) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (4) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (5) | ............................................... | ......................................................... | ......................................................... |

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் வீதிகள்/பாதைகள் :-

| | | | |
|---|---|---|---|
| (1) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (2) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (3) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (4) | ............................................... | ......................................................... | ......................................................... |
| (5) | ............................................... | ......................................................... | ......................................................... |

.................................................
தலைவரின் கையொப்பம்,
............................... பிரதேச சபை,
(பதவி முத்திரை).

திகதி :.........................................................

## மூன்றாவது அட்டவணை

**.................................. பிரதேச சபை**

| தொடர் இல. | வீதியின் பெயர் | தூரம் | அதிகூடிய எடை (டொன் ) | அதிகூடிய வேகம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**மூன்றாவது அட்டவணை** (தொடர்ச்சி)

| தொடர் இல. | வீதியின் பெயர் | தூரம் | அதிகூடிய எடை (டொன்) | அதிகூடிய வேகம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**8 ஆம் பகுதி**

வீதிகளில் மற்றும் பாதைகளில் இடையூறுகள் குறுக்கீடு செய்தல் மற்றும் சேதம் விளைவித்தல்

1. பிரதேச சபைக்குரிய வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு செய்தல், வீதிகளில் குறுக்கீடு செய்தல் போன்றவற்றை தவிர்ப்பதற்கும் இல்லாது செய்வதற்கும் மற்றும் மேற்பார்வை துணைச் சட்டமாகும்.

2. யாதேனுமொருநபரினால் பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதாவதொரு வீதிக்கு சேதம் விளைவித்தல் செய்யத்தகாதது ஆவதுடன் வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கு அல்லது நடை பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதியில்.

(அ) வியாபாரம் செய்தல் ;

(ஆ) அப்புறப்படுத்துவதற்காக முடுக்கிவிடுவதற்கு அல்லது வேறு கோளாறு காரணமாக செலுத்திச் செல்ல முடியாத ஏதாவது காரணம் தோன்றுமேயானால் அன்றி பிரதேச சபையினால் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள யாதாயினுமொரு பகுதியல்லாத இடத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் ;

(இ) வாகனங்களைப் பழுதுபார்த்தல் அல்லது வாகனங்களைக் கழுவுதல் ;

(ஈ) யாதாயினுமொரு வீதியில் நடைபெறுகின்ற ஒரு பழுது பார்த்தலுக்காக...................... பிரதேச சபையின் அல்லது தலைவரது தீர்மானத்தின் பேரில் இடம்பெறும் ஒரு காரியம் தவிர கருங்கல், மணல், பருக்கைக் கற்கள், மண் செங்கல் அல்லது மரக் குற்றிகளை இறக்குதல் அல்லது நிறுத்தி வைத்தல் ;

(உ) பாவிக்க முடியாத வாகன உதிரிப்பாகங்கள் அல்லது யாதேனும் பொருட்கள் அல்லது சாமான்கள் அல்லது உபகரணங்களை நிறுத்தி வைத்தல் ஆகாது ;

3. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்குக் கீழ் ஐம்பது அடி அகலத்துக்கு (16.7 மீற்றர்) மேலான வீதியொன்றிற்காக வீதிரேகை நிர்ணயிக்கப்படாத யாதாயினுமொரு வீதியில் மத்திய ரேகையிலிருந்து 25 அடி (3.18 மீற்றர்) களுக்குள் எந்த வகையானதொரு நிர்மாண வேலையையும் யாராயினுமொரு நபரினால் செய்யப்படலாகாது என்பதுடன், வேறொரு நிர்மாணத்திற்காக கொண்டு வரப்பட்ட யாதாயினுமொரு கட்டிடப் பொருளை எந்தவொரு வீதியிலோ அல்லது அதன் ஏதாவதொரு பகுதியிலோ வைப்பது கூடாது.

4. 2 ஆவது பந்தியில் கூறப்பட்ட நிர்ணயங்களை மீறி யாராயினுமொரு நபரினால் பிரதேச சபைக்குரிய யாதேனுமொரு வீதியில் அல்லது அதன் ஒரு பகுதியில் ஏதாவதொரு பொருளொன்றுவைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தலைவரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரினால் குறித்த பொருளை குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அல்லது பிரதேச சபையின் உடைமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது சட்டரீதியானதாகும். தலைவரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கூறியவாறு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக குறித்த பொருளை வீதியில் வைத்த அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்த நபருக்கு யாதாயினும் நட்டமோ அல்லது சேதமோ அல்லது பாதிப்போ ஏற்படுமாயின் அதற்கு குறித்த பொருளை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த நபரோ அல்லது பிரதேச சபையோ வகை கூறலுக்கு உட்படுதல் ஆகாது. அதேபோன்று மேலும் அவ்வாறு அப்புறப்படுத்தப்படவேண்டிய பொருள்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கு பிரதேச சபையோ அல்லது தலைவரோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரோ உட்படல் ஆகாது.

5. பிரதேச சபைக்குரிய ஏதாவதொரு வீதியை பராமரிப்பதற்காக அல்லது பழுது பார்ப்பதற்காக தேவைப்படும் காரியங்களுக்காக.

(அ) குறித்த வீதியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியினை பராமரிப்பதற்கு அல்லது வீதியில் ஏதாவதொரு திசையை நோக்கிய ஓட்டப் பாதையினை குறித்ததொரு காலத்துக்கு மூடிவைப்பதற்கு ;

(ஆ) ஏதாவது நிர்மாணத்திற்கான பொருளை அல்லது பொருட்களை குறித்த வீதியின் எங்காவதொரு இடத்தில் குவித்து வைப்பதற்கு ;

(இ) குறித்த வீதியின் அருகாமையிலுள்ள காணியொன்றினுள் நுழைவதற்கு மற்றும் நிர்மாணத்திற்கான யாதாயினும் பொருட்களை அக்காணியில் இட்டு வைப்பதற்கு அவ் வீதியின் அருகாமையிலுள்ள காணியில் யாதொரு உடைமைகளுக்கும் சேதம் விளையாதவாறு அக்காணியினூடாக வாகனப் போக்குவரத்துக்காக ஏற்பாடு செய்வதற்கு ஆணையிடுவதற்கு தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

6. ஐந்தாவது ஆவது துணைச் சட்டத்தின் கீழ் தலைவரினால் விதிக்கப்பட்ட ஆணைக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் அல்லது குறித்த ஆணைக்கேற்ப செயற்படும் யாராயினுமொரு நபருக்கு இடையூறுவிளைத்தல் அல்லது அவ்வாறு நடந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்தல் எந்தவொரு நபரினாலும் செய்யப்படலாகாது.

7. தலைவரினால் விநியோகிக்கப்பட்ட எழுத்து மூலமான அனுமதி இருந்தாலின்றி எந்தவொரு நபரினாலும் பிரதேச சபைக்குரிய ஏதாவது ஒரு வீதியில் காணப்படும் கற்கள், பரற்கற்கள், மணல், மண் அல்லது வேறு ஏதாயினும் பொருளை சேகரித்தல், குவித்து வைத்தல் அல்லது அங்கிருந்து கொண்டு செல்லுதலாகாது.

8. ஏதாவதொரு காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் விழுகின்ற மழை நீரைவிட வேறு எவ்வழியிலாவது அந்தக் காணியின் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் உள்ள நீரையோ அல்லது பாவனையின் பின்னர் அகற்றப்படும் அசுத்த நீரையோ உறிஞ்சும் தன்மைகொண்டதொரு குழியை நோக்கி வழிந்தோட வகை செய்ய வேண்டியதுடன், பிரதேச சபைக்குரியதொரு வீதிக்கோ அல்லது வீதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலுக்கோ வழிந்தோடக்கூடியதாக அகற்றப்படல் தகாது.

9. ஏற்றிச் செல்லப்படுகின்ற பொருட்கள் தூசு, மணல் ஆகிய சிறு துணிக்கைகளாக பரப்பப்படுவதைத் தவிர்ப்பதற்கான மறைப்பொன்றினால் மூடப்பட்டிருந்தாலன்றி யாராயினுமொரு நபரினால் அவ்வகையான பொருளை பிரதேச சபைக்குரிய வீதியில் வாகனத்தில் ஏற்றிச் செல்லக்கூடாது.

10. யாதோ ஒரு வீதியிலுள்ள வடிகாலை மூடுதல் அல்லது அதற்கு சேதம் விளைத்தல் அல்லது குறித்த வடிகாலூடாக வழிந்தோடும் நீரும் இலகுவாக வழிந்தோடுவதற்குப் பங்கம் விளைத்தல் செய்யக்கூடாது என்பது மட்டுமன்றி குறித்த வடிகாலுடாக யாதாயினுமொரு காணியினுள் நுழைவதற்குத் தேவைப்படின் ஒரு மீற்றர் நீளத்திற்குக் குறையாத ஒரு பாலம் அல்லது ஒரு மேடை போன்றதனை நிர்மாணித்தல் அக்காணியினது உரிமையாளரின் கடமையாகும்.

11. கொண்கிறீற் செய்யப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட வீதிகளில் ஐந்து (05) டொன்களுக்கு மேலான எடையுள்ள வாகனப் போக்குவரத்து மேற்கொள்ளப்படலாகாது.

12. விற்பனைக்காக 05 டொன் எடையைவிடக் கூடுதலான மரங்களை ஏற்றிச் செல்லும்போது பிரதேச சபை வீதிகளைப் பயன்படுத்துவதாயின் அவ் வீதிகளுக்கு ஏற்படும் நட்டங்களை அல்லது சேதங்களை ஈடுசெய்வதற்காக காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தைச் செலுத்தி வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டணத்தைச் செலுத்தி முறையான அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. இத்துணைச் சட்டத்தினை மீறுதல் குற்றச் செயலாவதுடன் உரிய அதிகாரம் கொண்டதொரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 122 (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தண்டனைக்கு உட்படுதல் வேண்டும்.

14. சொற் பிரயோகம் தொடர்பாக வேறு பொருள் விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்த துணைச் சட்டத்தில் –

(1) ''வீதி'' என்பதனால் ''பிரதேச சபைக்குரிய யாதாயினுமொரு பாதை வீதி பெருந்தெரு, ஒழுங்கை சந்திபடிகட்டு, தொங்கு பாலம் அல்லது பாதசாரிகளுக்கான பாலம் குறிப்பிடப்படுவதுடன் பிரதேச சபைக்குரிய யாதாயினுமொரு பாதை, வீதி, பெருந்தெரு, ஒழுங்கை சந்தி, படிக்கட்டுஆகியன சம்பந்தமாக பொருத்தப்பட்டுள்ள அல்லது நாட்டப்பட்டுள்ள தூரத்தைக் காட்டும் குறிப்பு காட்டி, எல்லைக் கல் எல்லைத் தூண், விளக்குக் கம்பம், பாலம் ஏதாயினுமொரு நீர்ப் போக்கு, மதிற்சுவர் வாங்கி வடிகால் சிறு குகை, உபகாரக் கட்டு, கைப்பிடி சங்கிலி, வேலி, சமிக்ஞை பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதியை அண்மித்த நடைபாதை என்பன உட்படல் வேண்டும்.

(2) ''வாகனம்'' என்பதனால் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் விளக்கம் கருத்தப்பட வேண்டியதுடன், மாட்டு வண்டி, மிதிவண்டி, சில்லுகள் பொருத்தப்பட்டு இயந்திர மூலம் அல்லது வேறுவகையில் இயக்கப்படும் ஏதாவது ஓர் உபகரணம் கருதப்படல் வேண்டும்.

(3) ''சேதம் விளைத்தல்'' என்பதனால் நாசமாக்குதல், கழற்றி எறிதல் உருமாற்றல், சாய்த்துவிடுதல், அகற்றி விடுதல், வேறு எவ்வகையிலாவது சேதம் விளைவித்தல் யாதாயினுமொரு பகுதியின் மீது அறிவித்தல்கள் அல்லது கையேடுகளை ஒட்டுதல், பூச்சுக்கள் அல்லது தார் பூசுதல் என்பன கருதப்படுவதுடன் யாதேனுமொரு பெயர்ப்பலகையின் எழுத்துக்களை மாற்றுதல் அழித்தல், சுரண்டுதல், அல்லது சுழற்றுதல் இதனுள் உள்ளடக்கப்பட வேண்டியதுடன், பிரதேச சபையினால் அல்லது தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகத்தரினால் யாதேனுமொரு வீதியினை பழுது பார்த்தலுக்காக செய்பிக்கப்படுகின்ற காரியம் அதனுள் அடக்கப்படுதல் வேண்டும்.

### பகுதி 9

### வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் அண்மித்த இடங்களை அலங்கரித்தல்

1. இது வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் அண்மித்த இடங்களை அலங்கரித்தல் சம்பந்தமான துணைச் சட்டமாகும்.

2. இத்துணைச் சட்டமானது பிரதேச சபைக்கான பிரதேசங்களுக்குள் உள்ள வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் அவற்றை அண்மித்த இடங்களை அலங்கரித்தல், அதனூடாக பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் மற்றும் சூழலுக்கு ஏற்படும் தீங்குகளைத் தவிர்த்தல், அவற்றை நிர்வகித்தல், அவை தொடர்பில் அனுமதிப்பத்திரங்கள் விநியோகித்தல் மற்றும் கட்டணங்கள் அறவிடல் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்காக விதிக்கப்படுகிறது.

3. இதன் பிறகுயாதேனும் ஒரு பெருந்தெருவுக்கு அண்மையிலுள்ளதொரு பொது இடம் அல்லது வீதி தொடர்பாக பட்டியல் இல. 02 இல் காட்டப்பட்டுள்ள இடம், பெருந்தெரு அல்லது வீதி எந்தவித அலங்காரமும் செய்யப்படலாகாது.

4. மூன்றாம் பிரிவில் குறிப்பிட்டவாறான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் இங்கு முதலாவது பட்டியலில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் அலங்காரம் செய்ய உத்தேசிக்கப்படும் தினத்திற்கு குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன்பதாக தலைவர் அல்லது செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும், இந்த துணைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கப்படாததொரு விண்ணப்பப்படிவம் விசேட சந்தர்ப்பங்களுக்கான காரணிகள் கீழ் கவனத்தில் கொண்டு தலைவர் அல்லது செயலாளரினால் பொறுப்பேற்கப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. மேலே 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முதலாவது பட்டியலில் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து தீர்மானம் மேற்கொள்வதற்காக தலைவர் அல்லது செயலாளரினால் கேட்கப்படும் வேறு ஏதாயினும் விவரங்கள் இருப்பின் அவ்வனைத்து விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பதாரியினாலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. சபையினால் விநியோகிக்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் -

(அ) 2 ஆம் பட்டியலில் உள்ள மாதிரிக்கமைவானதாக செய்வதற்கு உட்பட்ட வகையில் விநியோகிக்கப்படும் காரியம் மற்றும் காலத்துக்காக மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டும் ;

(ஆ) யாதாயினும் இடைநிறுத்தலுக்கு அல்லது ரத்து செய்வதற்கு உட்பட்ட வகையில் விநியோகிக்கப்படும் காரியம் மற்றும் காலத்துக்காக மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டும்.

8. தலைவர் அவர்கள் கீழ்க்காணும் காரணங்கள் குறித்து அதாவது -

(அ) விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது இந்த துணைச் சட்டங்களில் கூறப்பட்டயாதாயினும் விதிமுறைகளை மீறுவதற்காகப் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் ;

(ஆ) அனுமதிப்பத்திரத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்படும் செயற்பாடு காரணமாக பொதுமக்களுக்கு அல்லது சூழலுக்கு அல்லது பொதுச் சொத்துக்களுக்கு நட்டம் அல்லது சேதம் அல்லது யாதாயினும் உபத்திரவம் ஏற்படாது எனவும் ;

(இ) சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக விண்ணப்பதாரியினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்தால் மாத்திரம் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக கட்டணமாக சபையினால் காலத்துக்குக்காலம் பிரேரித்து அங்கீகரிக்கப்படுதல் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணங்கள் விதிக்கப்படலாம் என்பதுடன் குறித்த கட்டணம் வருடந்தோறும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக சபையினால் பிரசுரிக்கப்படல் வேண்டும். அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் குறித்த கட்டணம் விண்ணப்பதாரியினால் சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

10. துணைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்குப் புறம்பாக அனுமதிப்பத்திரத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட அலங்காரங்கள் அனுமதிப்பத்திர உரிமையாளரினால் குறித்த காலக்கெடுவுக்குள் அப்புறப்படுத்தப்படாதவிடத்து, அவ் வலங்காரங்களை அப்புறப்படுத்துவதற்காக ஏற்படக் கூடிய செலவெனக் கருதப்படும் தொகையை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுமுன் வைப்புப் பணமாக அனுமதிப்பத்திர உரிமையாளரினால் சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும். அனுமதிப்பத்திரம் பெற்றவரால் மேற்கொள்ளப்பட்ட அலங்காரங்கள் குறித்து காலக்கெடுவுக்குள் அப்புறப்படுத்தப்படாவிடின் குறித்த வைப்புப் பணம் சபையில் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டியதுடன் குறித்த அலங்காரங்களை சபையினால் அப்புறப்படுத்துதல் சட்டரீதியாதல் வேண்டும்.

11. துணைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற பணம் எவ்வளவு என்பதனை வருடாந்தம் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக தலைவரினால் பிரசுரித்துக் கூறப்படல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவரினால் மேற்கொள்ளப்படும் சகலவித அலங்காரங்களும் வீதிகளில் பயணிக்கும் யாராயினுமொரு நபருக்கு ஒரு குழுவினருக்கு அல்லது உடைமைகளுக்கு இடையூறு அல்லது தீங்கு விளைவிக்கக் கூடியதாக அமைதலாகாது. அவற்றினால் ஏதும் தீங்கு ஏற்படுமானால், அத்தீங்கினால் ஏற்படும் நட்டம் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவரினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

13. அனுமதிப்பத்திர உரிமையாளரினால் மேற்கொள்ளப்படும் சகல அலங்காரங்களும் வீதிகளில் நடமாடுகின்ற யாரேனுமொரு நபருக்கோ அல்லது குழுவினருக்கோ அல்லது செலுத்தப்படுகின்ற வாகனங்களின் போக்குவரத்துக்கோ இடையூறு விளையாதவாறு அமைதல் வேண்டும்.

14. மேற்கொள்ளப்படும் அலங்காரம் யாரேனுமொரு நபரை அல்லது ஒரு குழுவினரை ஏளனம் செய்வதாக அமையக்கூடாது.

15. அலங்காரம் செய்யும்போது கழிக்கப்படும் சகல பொருட்களையும் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாதவாறு அப்புறப்படுத்துதல் அனுமதிப்பத்திர உரிமையாளரினால் செய்யப்படல் வேண்டும்.

16. இத்துணைச் சட்டத்தினை மீறுதல் தொடர்பாக அவ்வாறான சட்ட மீறலைத் தவிர்க்கக்கூடிய எக்காரியத்தினையாவது செய்யாது விடுவதற்காக ரூபா எழுநூற்றைம்பதுக்கு மேற்படாத தண்டத்தினையும், அவ்வாறான சட்ட மீறலை தொடர்ந்தும் மேற்கொள்ளும் போது உரிய அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றத்தினால் அது சம்பந்தமாக குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது அந்த சட்ட மீறல் தொடர்பாக கவனம் செலுத்திய தலைவரினால் அல்லது அதிகாரம் கொண்ட வேறொரு உத்தியோகத்தரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் சட்டமீறலை தொடர்ந்தும் செய்யும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா இருநூற்றைம்பதுக்கு மேற்படாத மேலதிக தண்டத்தினையும் செலுத்துவதற்கு உட்படுதல் வேண்டும்.

சொற்பிரயோகம் சம்பந்தமாக வேறுபொருள் விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இத் துணைச் சட்டங்களில் -

(i) ''வீதிகளில்'' அல்லது பெருந்தெருக்கள் மற்றும் ''சிறுவீதிகள்'' என்பதனால் (193 ஆம் அதிகாரசபையாகிய) பெருந்தெருக்கள் மற்றும் சிறு வீதிகளுக்கான கட்டளைச் சட்டத்தில் முறையாக அவற்றுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொருள்களையும் ;

(ii) பொதுசன சொத்துக்கள் என்பதனால், பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்த சகல வீதிக்கு மற்றும் பெருந்தெருக்கள்/சிறு வீதிகளுக்கும் இரு மருங்கிலும் அமைந்துள்ள தொலைபேசி மற்றும் மின் கம்பங்களும் பொதுமக்கள் பொதுவாக பயன்படுத்தும் அனைத்து இடங்களும் மற்றும் சொத்துக்களும் ;

(iii) ''அலங்காரம் '' என்பதனால் -
இயற்கையான செயற்கையான அல்லது எந்தவொரு பொருளினாலோ அல்லது ஒளி சமிக்ஞைகளினைக் கொண்டோ மேற்கொள்ளப்படுகின்ற எல்லா அலங்காரங்களும் குறிப்பிடப்படும்.

### அட்டவணை இல. 01

### வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் அண்மித்த இடங்களை அலங்கரித்தல்

*விண்ணப்பப்படிவம்*

(1) விண்ணப்பதாரியின் பெயர் விலாசம் :-
........................................................................................................................................
(2) தேசிய அடையாள அட்டை இலக்கம் :.............................................................................................
(3) தொலைபேசி இலக்கம் :..............................................................................................................
(4) அலங்காரம் மேற்கொள்ளப்படும் வைபவம்/காரணத்தின் தன்மை :.........................................................
........................................................................................................................................
(5) அலங்கரித்தலுக்காகப் பயன்படுத்தும் பொருட்கள் பற்றிய விவரம் :....................................................
........................................................................................................................................
(6) அலங்கரிக்கப்படும் இடம் சம்பந்தமான விவரம் :.............................................................................
(அ) வீதியாயின் அதன் பெயர் மற்றும் அலங்கரிக்கப்படும் இடத்தின் நீளம், தரையிலிருந்து உயரம் :
........................................................................................................................................
(ஆ) பொது இடம்/சொத்தாயின் அதுபற்றிய விவரம் :.........................................................................

8. அலங்கரித்தலை ஆரம்பிக்கும் திகதியும், முடிக்கும் திகதியும் :.........................................................

(அ) அலங்காரம் காட்சிப்படுத்தப்படும் காலவரையறை :.......................................................................

9. அலங்காரம் அப்புறப்படுத்தப்படும் திகதி :.......................................................................................
10. கழிவுப் பொருட்களை அகற்றும் விதம் பற்றிய விவரம் :....................................................................

11. பிரதேச சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படுபதாக உறுதியளிக்கின்றேன்.

* அலங்கரிக்கப்படும் விதம் பற்றிய திட்டத்துடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*அட்டவணை இல 2*

### வீதிகள், பெருவீதிகள் மற்றும் அண்மைய வீதிகளை அலங்கரித்தல்

1. விண்ணப்பதாரியின் பெயர் :.............................................................................................
2. முகவரி :...................................................................................................................
........................................................................................................................................
3. அலங்கரிப்பதற்காக அனுமதி பெறப்படும் பொது இடம் மற்றும் வீதி /வீதிகள் பெரு வீதிகளின் பெயர் :.................
........................................................................................................................................
4. அலங்கரிப்பதற்கு உபயோகிக்கும் பொருட்கள் பற்றிய விவரம் :.......................................................
........................................................................................................................................

5. அலங்காரத்திற்காக அனுமதி பெறப்படும் காலம் :......................................................................................

......................................................................................................................................................

6. (அ) அலங்காரம் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் நேரம் :........................................................................

(ஆ) அலங்காரம் அகற்றப்படும் திகதி மற்றும் நேரம் :..........................................................................

7. இவ்வனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுவது இதில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும் :-

(அ) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையில் மட்டுமே அலங்காரம் செய்யப்படல் வேண்டும்;

(ஆ) செய்யப்படும் எல்லா அலங்காரங்கள் பொது ஆதனங்களுக்கு அல்லது பிரத்தியேக ஆதனங்களுக்கு சேதமோ அல்லது இடையூறோ ஏற்படா விதத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(இ) செய்ய்படும் எல்லா அலங்காரங்கள், அலங்காரம் செய்யப்படும் வீதியில் அல்லது பாதையில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் அல்லது நபருக்கு எவ்வித இடையூறு ஏற்படாவண்ணம் செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) அனுமதிப்பத்திரத்தை பரீட்சிப்பதற்காக தவிசாளர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற அலுவலர் அல்லது பொலிஸ் அலுவலர் ஒருவர் கோரும் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உரிய இடத்தில் √ எனும் அடையாளமிடுக)

* மாவத்தையொன்றின் ஒருபக்கம்

* மாவத்தையொன்றின் இருபக்கங்கள்

* மாவத்தையொன்றின் குறுக்காக மேலே

ஆதனச் சூழலிற்குள் - மாவத்தையிற்கு அண்மையில்

.........................................................
அனுமதிப்பத்தினை விநியோகிக்கும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :.....................................................

பதவி முத்திரை :

சபையின் பெயரும், முகவரியும் .

## பகுதி 10

## கட்டாக்காலி மிருகங்கள்

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் மிருகங்களினால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக குறித்த மிருகங்களை தொழுவங்களில் அடைத்து வைத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட மற்றும் காரணிகள் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. கட்டாக்காலியாகத் திரியும் மிருகங்கள் தொடர்பாக துணைச் சட்டத்தின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்காக கட்டாலி மிருகங்களைப் பிடித்துக்கொண்டதன் பின்னர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள தொழுவத்தினுள் தற்காலிகமாக அடைத்து வைப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

3. அதிகாரம்பெற்ற ஒருவருக்கோ அல்லது காவலாளிக்கோ இத் துணைச் சட்டத்தின் மூலமாகவோ அல்லது தலைவரினாலோ அல்லது செயலாளரினாலோ யாராயினும் ஒருவரால் குறித்த கடமைகளைச் செய்வதற்கு இடையூறு விளைவித்தல், தடைசெய்தல் கடமையிலிருந்து நழுவச் செய்தலும் அல்லது அவர்களைப் பயமுறுத்தல் அச்சுறுத்தல் ஆகியன குற்றச் செயல்களாகும்.

4. அதிகாரம்பெற்ற ஒருவரினால் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் ஒரு மிருகத்தைப் பிடித்தல், அம் மிருகத்தைத் தனது பொறுப்பில் கொள்ளுதல் உகந்தது என தன்னால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தெருவின் ஊடாக தொழுவத்திற்குக் கொண்டு வருதல் சட்ட ரீதியானது ஆகும்.

5. அதிகாரம்பெற்ற ஒருவர் பிடித்துக்கொள்ளும் ஒவ்வொரு மிருகத்தையும் இயன்றளவு விரைவாக தொழுவத்திற்குக் கொண்டு வந்து காவலாளியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

6. அதிகாரம்பெற்ற நபரினால் பிடிக்கப்பட்ட ஒரு மிருகத்தை தொழுவத்தில் ஒப்படைக்கும் போது, மிருகம் பிடிக்கப்பட்ட திகதி, நேரம் இடம், மிருகத்தின் வகை, ஆண் - பெண் பற்றிய விவரம், நிறம், தோல் அடையாளம் மற்றும் வேறு விசேட விவரங்கலிருப்பின் அவற்றையும் பதிவேட்டில் குறிப்பிட்டதன் பின்னர், குறித்த மிருகத்தை காவலாளி பொறுப்பேற்றுக் கொண்டதாக காவலாளியின் ஒப்பம் பெறப்பட்டதன் பிறகு, அவ்வாறு ஒப்படைத்ததாக தானும் ஒப்பமிடுதல் வேண்டும். இந்தப் பதிவேட்டில் மிருகங்கள் பற்றி குறிப்பிடப்பட்டதைத் தொடர்ந்து வரும் அலுவலக நேரத்தினுள் பதிவேட்டை சபையின் செயலாளரது கவனத்துக்காக சமர்ப்பித்து ஒப்பம் பெறப்படல் வேண்டும்.

7. தொழுவத்தில் காவலாளியினால் பொறுப்பேற்கப்பட்ட மாடுகள் சம்பந்தமாக மேலே 6 ஆவது துணை விதியின் பிரகாரத்திலான விவரங்களும், செயலாளரின் விடுவிப்பதற்கான கட்டளை பெறப்பட்ட திகதியும் நேரமும், விடுவிக்கப்பட்ட நேரமும் அடங்கிய பதிவேடு ஒன்று காவலாளியினால் பேணப்படல் வேண்டியதுடன், அப்பிராணியை பெற்றுச் சென்றவரின் ஒப்பமும் பெறப்படல் வேண்டும்.

8. செயலாளர் வழங்கும் மிருகங்களை விடுவிப்பதற்கான கட்டளை இல்லாது எந்த ஒரு மிருகமும் விடுவிக்கப்படக்கூடாது என்பதுடன், கட்டளையில் குறிப்பிடப்பட்ட நபரிடம் மாத்திரமே மிருகம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. அடைக்கப்பட்டுள்ள ஒரு மிருகத்தை விடுவிப்பதற்காக செயலாளரினால் விடுவிப்பதற்கான கட்டளை வழங்குவதற்கு முன்னர் மிருகத்தைப் பிடிப்பதற்கான கட்டணம், உணவு, பாதுகாத்ததற்கான கட்டணம் என்ற வகையில் நிர்ணயிக்கப்படும் தொகையினையும் மிருகத்தின் உரிமையாளரினால் பிரதேச சபைக்குச் செலுத்தி ரசீது பெறப்பட்டுள்ளது எனவும் செயலாளர் ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூலமான தனிப்பட்ட சான்றுகளின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் திருப்பிப்படுத்தல் வேண்டும்.

10. அதிகாரம் பெற்ற ஒருவர் மிருகத்தை பிடித்த வேலையிலிருந்து தொழுவகத்திலிருந்து விடுவிக்கப்படும் சந்தர்ப்பம் வரையான காலத்தினுள் ஏதாவது ஒரு மிருகம் நோய்வாய்ப்படுதல், இறந்து போதல் சம்பந்தமாக பிரதேச சபையோ அல்லது அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் யாரும் வகை கூற கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதுடன், அத்தகைய ஒரு காரணத்துக்காக நட்டஈடு அல்லது நட்டத்தினை செலுத்துவதற்கு சபை உட்படமாட்டாது.

11. (அ) பிடிக்கப்படும் எவ்வவகையான ஒரு மிருகமாயினும் பிடிக்கப்படும் கட்டணமாக ஒரு மிருகத்திற்காக காலத்துக்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகைப் பணம் கட்டணமாக மிருகத்தின் உரிமையாளர் அல்லது பாதுகாவரினால் பிரதேச சபைக்குச் செலுத்தும் வரை எந்த ஒரு மிருகமும் விடுவிக்கப்படல் ஆகாது. அவ்வாறு தீர்மானிக்கப்படும் பணத்தில் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை அதிகாரம்பெற்ற நபருக்கும், காவலாளிக்கும் செலுத்திய பின் மிகுதி சபையின் நிதியத்தில் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

(ஆ) மிருகங்களைப் பிடிப்பதற்கான கட்டணம் மற்றும் உணவுக்காகவும் பாதுகாவலுக்காவுமான கட்டணம் காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் அரச வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. பிடிக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தையும் பாதுகாத்துக்கொள்வது, உணவு வழங்குவது உரிய சந்தர்ப்பங்களில் பரிகாரம் செய்தல் ஆகிய சகல காரியங்களும் பிரதேச சபையின் பொறுப்பாகும் என்பதுடன், அவற்றுக்கான செலவுகளை மிருகத்தின் உரிமையாளரிடமிருந்தோ அல்லது பாதுகாவலரிடமிருந்தோ அறவிடப்படுதல் சட்ட ரீதியானதாகும்.

13. உரிமையாளரோ அல்லது பாதுகாவலரோ முன்வராத, குறித்த கட்டணங்கள் செலுத்தபடாத, பிடிக்கப்பட்ட தினத்திலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு தொழுவத்தினுள் அடைத்து வைக்கப்பட்டிருந்த எந்த ஒரு மிருகத்தினதும் உரிமை அதன் காரணமாகவே சபைக்கு உரித்தாவதுடன் தலைவரினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அறிவித்தல் ஒன்று விடுவிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல், ஏலத்தில் விலை கொடுத்து வாங்கிய நபருக்கு மிருகத்தின் உரிமையை வழங்குதல், தேவையான வேறு காரியங்களையும் செய்தல் என்பன சட்ட ரீதியானதாகும்.

14. ஏலத்தில் பெறப்படும் பணத்தில் பிரதேச சபைக்கு அறவிடப்படவேண்டிய கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் மிருகத்தின் உண்மையான உரிமையாளர் கோருமிடத்து, மிகுதியாகவுள்ள பணத்தை அந்த நபருக்கு வழங்கப்படலாம். ஏலத்தில் விடப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலம் தாழ்த்திய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது. அவ்வாறான சமயங்களில் மிகுதிப் பணம் சபையின் பொது நிதியில் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

15. இத்துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு விதியினையாவது மீறுகின்ற ஒவ்வொரு நபரும் குற்றம் இழைக்கின்றார் என்பதுடன், அந்நபர் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் 750 ரூபாக்கு மேற்படாத தண்டத்துக்கு உட்படவேண்டியதுடன், அதே குற்றம் மேலும் தொடர்ந்து இழைக்கப்படுமாயின் அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தினத்திற்கும் இருநூற்று ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

16. சொற்பிரயோகம் தொடர்பில் மற்றுமொரு பொருள் தேவைப்பட்டால் அன்றி இத்துணைச் சட்டத்தில் -

(i) ''மிருகம்'' மிருகமொன்று'' ''மிருகங்கள்'' என்ற பிரயோகங்களுக்கு, மாடு, எருமை, குதிரை, கோவேறு கழுதை, செம்மறியாடு, ஆடு அல்லது பன்றி எனப் பொருள்படுவதுடன், குறித்த ஒவ்வொரு வகையினையும் சார்ந்த ஆண்-பெண் பிராணிகளும் உள்ளடங்கும், மேலும் ஒருமைச் சொல்லில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்சில இடங்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களுக்கான பொருள் கொள்ளுதலும் வேண்டும் ;

(ii) ''பொது இடம்'' என்பதற்கு, பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவது ஒரு பாதை, வாவிக்கரை, பொது பஸ் நிலையம், விளையாட்டுத் திடல், பூந்தோட்டம், பகிரங்கக் கட்டிடத் தொகுதி அல்லது பொதுமக்களுக்கு பொதுவில் உள்நுழையக்கூடிய வேறு இடம் என்று பொருள்படும்.

(iii) ''கட்டாக்காலி மிருகங்கள்'' என்ற பிரயோகத்தினால், பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் ஏதாவது பகிரங்க இடத்தில் திரிந்து மேய்கின்ற, தங்கியிருக்கின்ற, கட்டப்பட்டிருக்கின்ற அல்லது அவிழ்த்து விடப்பட்டுள்ள அல்லது வேறு எவ்வாறாகவெனினும் இருக்கின்ற பிராணிகள் கருதப்படுவதுடன், பொருட்களை ஏற்றுவதற்காக அல்லது இறக்குவதற்காக நிறுத்தப்பட்டுள்ள வண்டியில் கட்டப்பட்டுள்ள மாடுகளோ, எருமைகளோ அல்லது யாராயினும் ஒரு நபரினால் கயிற்றினால் கட்டப்பட்டுள்ள கொண்டு செல்லப்படும் எந்த மிருகமும் உட்பட மாட்டாது.

(iv) ''அதிகாரம்பெற்ற நபர்'' என்பதனால், பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் மிருகங்களைப் பிடித்து தனது பொறுப்பில் கொள்வதற்கும், தொழுவத்துக்குக் கொண்டு வருவதற்கும் தலைவரினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுவரும், அவ் அதிகாரம் செல்லுபடியாகும் தன்மையினைக் கொண்டவருமான ஒருவர் என கருதப்படுவார் ;

(v) ''தொழுவம்'' என்பதனால், கட்டாக்காலியாகத் திரிந்ததனால் பிடிக்கப்பட்ட மிருகங்களை அடைத்து வைப்பதற்காக பிரதேச சபையினால் இடைக்கிடை அமைக்கப்பட்டு பேணப்படுகின்ற மிருகங்களுக்கான தொழுவம் அல்லது தொழுவங்கள் என கருதப்படும்.

(vi) ''காவலாளி'' என்பதனால் தொழுவத்தை அல்லது அதனுள் அடைக்கப்பட்டுள்ள மிருகங்களை பாதுகாப்பது, நிர்வகிப்பது ஆகிய காரியங்களுக்காக தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும், அவ்வதிகாரம் செல்லுபடியாகும் தன்மையினைக் கொண்டவருமான ஒருவர் கருதப்படுவார்.

*பகுதி 11*

**கட்டிட நிர்மாணம் மற்றும் நடவடிக்கைகள்**

1. (i) பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிக்கும் இடங்களைத் தீர்மானித்தல் ;

(ii) உறுதித்தன்மையை ஏற்படுத்துதல், தீப்பிடித்தலைத் தவிர்த்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு அக்கட்டிடங்களைக் கட்டும் பொருட்களைக் கட்டுப்படுத்துல் ;

(iii) இடையூறின்றி காற்றோட்டம் இடம்பெறுவதற்கும், கழிவுகளை அகற்றுவதற்கும் இடமேற்படும் வகையில் கட்டிடங்களுக்கு இடையில் இடைவெளிகளைவிடல் ;

(iv) கதவு, யன்னல்களின் நீள் அகலம், தரையின் மட்டம், கூரையின் உயரம், பொதுவான காற்றோட்டம், மற்றும் நீர் அகற்றும் முறைகளை ஒழுங்கமைத்தல் ;

(v) புதிய கட்டிடங்களை நிர்மாணித்தலுக்காக அல்லது இருக்கும் கட்டிடங்களை மாற்றியமைத்தலுக்காக வரைபடங்களை (Plans) பரீசீலித்தல் மற்றும் கவனத்தில் கொள்ளல் என்வற்றுக்காக சேவைக் கட்டணங்கள் அறவிடுதல் ;

(vi) மலசலகூடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் அமைப்பு பற்றி தீர்மானித்தல் ;

(vii) கட்டிடங்களின் முகப்பு (வீதி) ரேகைகளை நிர்மாணியித்தல்
சம்பந்தமான துணைச் சட்டமாகும்.

2. இத்துணைச் சட்டமானது பிரதேச சபை எல்லைக்குள் பட்டியல் படுத்தப்பட்ட இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட ஒரு வீதியின் மத்தியிலிருந்து இரு புறமும் (குறித்தபட்டியலில்) நிர்ணயிக்கப்பட்ட மீற்றர் தூரம் கொண்ட எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக செல்லுபடியாகும்.

3. இத்துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுகின்ற போது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு இணங்கட்டிடங்களை நிர்மாணித்தல் வேண்டும்:-

(i) மேற்குறித்த எல்லைக்குள் எந்தவொரு கட்டிடத்தையும் நிர்மாணிப்பதற்கு முன்பு அதற்கான வரைபடம் மற்றும் உரிய ஆவணங்களை பிரதேச சபையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

(ii) கட்டிடங்களின் அத்திவாரங்களை இடுவதற்கு கொன்கிறீட் அல்லது கருங்கற்களுடன் சீமெந்துக் கலவை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும். இதற்காகப் பயன்படுத்தும் சீமெந்து கலவையில் சீமெந்து மற்றும் மணல் கலவை 1.5 என்ற விகிதம் அமைதல் வேண்டும் ;

(iii) சுவர்களைக் கட்டுவதற்கு சீமெந்து, செங்கள் அல்லது சுட்டசெங்கள் மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும் ;

(iv) கூரைகளுக்கு ஓடு, முலாம் பூசப்பட்ட கூரைத்தகடு (தகரம்) அல்லது அஸ்பெஸ்ட்டஸ் தகடு மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும் ;

4. இடையூறு இன்றி காற்றோட்டத்தைப் பெறுவதற்கான குடியிருப்புக்காக நிர்மாணிக்கப்படும் இரு கட்டிடங்களுக்கு இடையிலான இடைவெளி -

(i) குறைந்த பட்சம் 4 மீற்றர்கள் இருத்தல் வேண்டும் ;

(ii) கழிவுகள் முறையாக அகற்றப்படவேண்டியதுடன் நீர் வழிந்தோடுவதற்காக முறையான வடிகாலமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும் ;

(iii) கட்டிடத்தின் உள்ளே போதியளவு வெளிச்சமும், காற்றோட்டமும் கிடைக்கும் விதத்தில் கதவுகள், யன்னல்கள் மற்றும் கட்டிடத்தின் சுவர்களின் உயரம் அங்கீகரிக்கப்பட்ட தரத்திலானவையாதல் வேண்டும். கட்டிடத்தின் ஒவ்வொரு மாடியினதும் சுவர்களின் உயரம் குறைந்த பட்சம் 03 மீற்றர்கள் இருக்க வேண்டியதுடன் யன்னல்களின் மொத்தப் பரப்பளவு குடியிருத்தலுக்கான கட்டிடமாயின் தரையின் பரப்பளவில் ஆறில் ஒன்றுக்கும் வியாபார நடவடிக்கைகளுக்காயின் தரையின் பரப்பளவில் பதினைந்தில் ஒன்றுக்கு குறையாததாக அமைதல் வேண்டும் ;

5. கட்டிடத்தில் நடமாடும் ஆட்களுக்குப் போதிய அளவிலான மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும். பொது இடங்களில் 10 பேருக்கு ஒன்று வீதம் ஆண் - பெண் இருபாளருக்கும் வெவ்வேறாகவும், அதற்கு மேற்படும் ஒவ்வொரு 10 பேருக்கும் ஒன்று வீதம் ஆண் - பெண் இரு பாலாருக்கும் வெவ்வேறாகவும், இடம்பெறும் (வந்துபோகும்) ஒவ்வொரு 100 பேருக்கு ஒன்று வீதம் ஆண் - பெண் இரு சாரருக்கும் வெவ்வேறாகவும் இருத்தல் வேண்டும்.

6. கிணற்று நீர் பாவிக்கப்படுமேயானால் கிணறு அமைந்துள்ள இடத்துக்கும் மனிதக் கழிவும் அகற்றப்படும் இடத்துக்கும் இடையிலான குறைந்த பட்சம் தூரம் பதினைந்து மீற்றர் ஆதல் வேண்டும்.

7. பிரதான வீதியின் மத்திய ரேகையிலிருந்து வீதி ரேகை மற்றும் கட்டிடத்தின் எல்லை கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்

| | | கட்டிட எல்லை (மீற்றர்). |
|---|---|---|
| (i) | A தரத்திலான வீதிகள் | 16 |
| (ii) | B தரத்திலான வீதிகள் | 13 |
| (iii) | C. D தரத்திலான வீதிகள் | 10 |
| (iv) | ஏனைய வீதிகள் | 05 |

8. கட்டிடங்களின் அத்திவாரங்கள் களிமண் மற்றும் மண் ஆகியனவற்றினை பயன்படுத்தி இடப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

9. கூரைவேய்வதற்கு கிடுகு, வைக்கோல், மானாப்புல், பலகை, பொலிதீன் போன்ற தீப்பற்றக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துதல் கூடாது.

10. சுவர்களை எழுப்புவதற்காக பலகை, கற்களுடன் கூடிய களிமண் மற்றும் தகடு போன்றன பயன்படுத்துதல் கூடாது.

11. கழிவுப் பொருட்கள், கழிவு நீர் மற்றும் வேறுகுப்பை கூளங்களை அகற்றும் விதம் வரைபடத்தில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

12. நுளம்புகள், பூச்சிகள் மற்றும் நோய்க்காவி உயிரினங்கள் பரவுதலைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. தற்காலி கூடாரங்களை நிர்மாணிக்கும் வேளையில் திருமணம், மரணச் சடங்கு சமய நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்கள் நடைபெற்று முடிந்த 7 தினங்களுக்குள் அவற்றை அப்புறப்படுத்திவிடல் வேண்டும்.

14. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிர்மாணிக்கப்படும் கட்டிடம் அல்லது கட்டிடத் தொகுதியினுள் பிரவேசிப்பதற்கும், பரிசீலிப்பதற்கும், ஓர் அலுவலர் தேவையெனக் கருதும் விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தலைவருக்கோ அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அலுவலருக்கோ மு. ப. 6.00 மணி முதல், பி. ப. 6.00 மணி வரையான காலப் பகுதியினுள் அதிகாரம் உண்டு.

15. தற்காலிக நிர்மாணம் ஒன்றிற்காக கீழ்க்காணும் நிபந்தனைகள் வலுவுடையவனவாக இருக்கும்.

(i) தற்காலிகமாக நிர்மாணிக்கப்படுமானால் அத்திவாரம் இட்டு, சுவர் எழுப்புதலோ அல்லது நிரந்தரமான பொருட்களினால் கூரைவேயப்படுதல் ஆகாது ;

(ii) முறையாக கழிவுப் பொருடகள் அகற்றப்படுதல் வேண்டும் ;

(iii) அவ்விடத்தில் நடமாடும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு நீர், மலசல கூடங்கள் ஆகிய வசதிகள் போதியளவில் வழங்கப்படல் வேண்டும்.

16. நிரந்தரக் கட்டிடம் ஒன்றுக்காக வரைபடம் அங்கீகரிக்கும் போது சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் பரிசீலனைக் கட்டணம் மற்றும் விண்ணப்பப்படிவக் கட்டணம் ஆகியன சபைக்கு செலுத்தப்படல் வேண்டும். இக் கட்டணம் சபையினால் வருடாந்தம் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

17. (i) மாடிக் கட்டிடமானால் ஒவ்வொருமாடியினதும் சதுர அடிகளுக்கமைய இக்கட்டணம் தீர்மானிக்கப்படும் (ஒவ்வொரு கட்டிடத்துக்கும் வீட்டுப் பாவனைக்காக மின்சாரம் மற்றும் நீர் பெறப்படும் வீதம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

(ii) மூன்று மாடிகளுக்கு மேற்படுமிடத்து அவசரக் கதவுகள் பொருத்தப்பட்டு, தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். ஐந்து அல்லது அதற்கு அதிகமான மாடிகளைக் கொண்ட கட்டிடமாயின் மின்சார தூக்கியிறக்கும் இயந்திரம் (Lift)பொருத்தப்படல் வேண்டும்.

18. திருமணம், மரணச் சடங்கு மற்றும் புண்ணியகாரியங்களுக்காக நிர்மாணிக்கப்படும் தற்காலிக கட்டிடங்களுக்காக எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

19. இத்துணைச் சட்டத்தில் ஏதாயினும் ஒரு சட்டவிதி தொடர்பாக இடம்பெறும் சட்டமீறல் ஒரு குற்றச் செயலாகும் என்பதுடன் அக்குற்றத்திற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் சட்டத்தின் கீழ் 750 ரூபாவுக்குக் குறையாத தண்டம் மற்றும் அதே குற்றத்தை தொடர்ந்து இடையறாது செய்தால் முறையான அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் இது தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டால் அல்லது அச்சட்ட மீறலை கருத்திற்கொண்டு தலைவரினாலோ அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட வேறொர் அலுவலரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதன் பின்னர் சட்ட மீறலை தொடர்ந்தும் செய்யும் ஒவ்வொரு தினத்துக்கும் 250 ரூபாவுக்கு குறையாத மேலதிக தண்டத்திற்கும் உட்பட நேரிடும்.

20. இத்துணைச் சட்டத்தின் சொற் பிரயோகம் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டால் அன்றி,

(i) ''வியாபார நடவடிக்கை'' என்பதனால் கைத்தொழிலொன்று, வியாபாரம், ஓய்வு விடுதியொன்று, சுற்றுலா விடுதியொன்று, வைபவ மண்டபமொன்று தற்காலிக வாடகை விடுதியொன்று, தனியார் கல்வி நிலையமொன்று அல்லது பணம் வசூலித்துக் கொண்டு யாதாயினும் சேவை அல்லது வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடமொன்று எனக் கருதப்படும் ;

(ii) ''நிர்மானம்'' என்பதனால், புதிதாக நிர்மானிக்கப்படுதல், ஒரு பகுதியை புதிதாக சேர்த்தல் மாற்றியமைத்தல் நீடித்தல் இணைப்புச் செய்தல் போன்றன கருதப்படும்.

**அட்டவணை -01**

**4 ஆவது சரத்து**

| வீதியின் வகை | அனுமதி இன்றி கட்டிடக் கட்டப்பட முடியாத எல்லை வீதியின் மத்தியிலிருந்து இருபுறமும் (மீற்றர்) |
|---|---|
| A தரத்திலான வீதிகள் | 500 |
| B தரத்திலான வீதிகள் | 400 |
| C தரத்திலான வீதிகள் | 300 |
| ஏனைய வீதிகள் | 200 |

## பகுதி 12

## கழிவு (மலசலம்) அகற்றப்படுதல்

1. பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ள கழிவு அகற்றல் தொகுதியை நிர்வகித்தல் முறைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கான கட்டணங்களை அறவிடல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. இத்துணைச் சட்டத்தின் 1 ஆவதுஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்குள் தற்போதுள்ள மற்றும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடங்கள் தொடர்பில் இத்துணைச் சட்டம் செல்லுபடியாகும்.

3. கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படுவதற்கான கழிவு அகற்றல் தொகுதி எந்தவொரு கட்டிடத்திலிருந்து அல்லது அதன் பகுதியிலிருந்து புதிதாக நிறுவப்பட்டுள்ள பிரதான குழாய்த் தொகுதியுடன் இணைப்பு செய்யப்படல் வேண்டும்.

4. (i) சபையின் தலைவர் தற்போதுள்ள கட்டிடமொன்றின் கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படும் தொகுதி திருப்தியற்றதாகக் கருதினால் அல்லது அவருக்கு அவ்வாறானதொரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் அவரினால் எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட வேறோர் அதிகாரி அவருக்கு பதிலாக குறித்த இடத்தைப் பரிசீலனை செய்து எழுத்துமூலமான அறிக்கையை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) அவ் அறிக்கையினை நன்றாக பரிசீலித்ததன் பின்னர் தேவை பற்றி திருப்தி கொண்டால் தலைவரினால் 06 மாதங்களில் அல்லது அக்காலப் பகுதியினுள் அது ஒரு தொழில் நுட்பத் தேவையென உறுதிப்படுத்தி, பிரதான குழாய் தொகுதியுடன் இணைப்பு செய்வதற்கு இடமளிக்கப்படும். இது தொடர்பிலான இணைப்புக் கட்டணம் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானித்து அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறானதாக அமைதல் வேண்டும்.

5. (i) யாராயினுமொரு நபர் கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படும் தொகுதியை பிரதான குழாய்த் தொகுதியுடன் இணைப்பதற்கு விரும்பினால், அதற்காக துணைச் சட்டத்தின் 4 (ii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் விண்ணப்பப்படிவமொன்றினை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) தலைவருக்கு விண்ணப்பப்படிவம் கிடைத்த அவ்வேலையின் மதிப்பீட்டினையும் தேவையின் உண்மையான நிலையினையும் கருத்திற்கொண்டு திருப்தியுற்றால் அதனை பிரதான குழாய் தொகுதியுடன் இணைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படும்.

(iii) இச்சரத்தின் II ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு குழாய்த் தொகுதியினை இணைப்பது தொடர்பாக நிச்சயிக்கப்பட்டு, தன் அமைப்பின் பொருத்தப்பாட்டினையும் காரியத்துக்காக ஏற்றுக்கொள்ள வேண்டிய மதிப்பிடப்பட்ட செலவினை விண்ணப்பதாரிக்கு

விண்ணப்பித்த தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். குறித்த மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை விண்ணப்பதாரியினால் சபையில் செலுத்தப்படும் வரை அனுமதிப்பத்திரம் வழுங்கப்படமாட்டாது.

(iv) கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படுவதற்காக பிரதான கழிவகற்றல் குழாய்த் தொகுதியுடன் இணைப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அவ் இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்பட்ட வகையைச் சேர்ந்த குறித்த அளவான குழாய்களும் மற்றும் உதிரிப் பாகங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

6. (i) குழாய்த் தொகுதியினை இடுதல், மற்றும் பராமறித்தல் சம்பந்தமாக யாராயினுமொரு தகுதியான நபர் விரும்பினால், அவர் பிரதேச சபையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுச் செயற்குழுவினூடாக பதிவு செய்யப்பட்டு முறையான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட நபரினால் அதற்காக சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

7. துணைச் சட்டத்தின் 5 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டவாறு அதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள ஒருவரைத் தவிர வேறு யாரும் பிரதான குழாய் தொகுதியுடன் இணைந்ததாக குழாய்கள் இடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. (i) கழிவுகளை அகற்றுவதற்காக குழாய்கள் இடுவதனை முறைப்படுத்துவதற்கு ஏதோ ஒரு விதத்தில் அல்லது வேறாக்கப்பட்ட அல்லது நிலத்தின் கீழ் பதிக்கப்பட்ட கற்கள் அல்லது பாதுகாப்பு வீடு மற்று மறைக்கப்பட்ட வேறொரு காணி சம்பந்தமாக சபையினால் எழுத்துமூல அறிவித்தலொன்று பெற்றுத்தருவது உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் கழிவகற்றும் குழாய்களை பதியவைக்கும் போது உடைமைகளுக்கு ஏற்படக்கூடிய சேதத்தை அல்லது நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படும்.

(ii) இங்கு 8 (i) ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்காக குழாய்கள் இடும் போது ஏற்படும் நட்டத்தினை சபையினால் மதிப்பீடு செய்து பணம் செலுத்தப்படும்.

(iii) மேற்குறித்தவாறு யாராயினும் ஒரு நபருக்கு சேதம் அல்லது நட்டம் ஏற்பட்டிருப்பின் அவ் உரிமைக்காக நிகழ்வு இடம்பெற்று 14 நாட்களுக்குள் சபைக்கு கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

(iv) அவ்வாறான கோரிக்கை சம்பந்தமாக சபையின் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்க மாற்றம் செய்யக்கூடியவற்றை மாற்றியமைத்து கோரிக்கை தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டஈடு சபையினால் வழங்கப்படும்.

9. கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படுவதற்கான வசதிகளை செய்வதற்கு சபையினால் பொருத்தமான இடங்களில் சாதனங்கள் பொருத்தப்படும்.

10. தனியார் உடைமையொன்றின் ஊடாக குழாய் இடுதல் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் :-

(i) தேவைப்படுகின்ற வேளையில் சபையினால் கழிவுகள் மற்றும் அசுத்த நீர் அகற்றப்படுவதற்காக குழாய்கள் இடும் நடவடிக்கைகள் ஒரு தெருவின் அல்லது வீதியின் குறுக்கே அல்லது அதற்குக் கீழ் திட்டமிடப்பட்ட எந்தவொரு இடத்திலாயினும் அல்லது அவ்வாறு செய்யக் கருதப்படும் ஒரு வீதிக்கு அல்லது கட்டிடத்துக்கு அடியில் அல்லது ஒரு சுரங்கத்துக்கு ஊடாக அல்லது அண்மையில் உள்ள ஒரு காணியின் ஊடாக இடம்பெறலாம் ;

அவ்வாறான நடவடிக்கைகளின் போது காணிக்கான சேதம் அல்லது பாதிப்பு தொடர்பில் சபையின் நோக்கங்களைக் குறிப்பிட்டு இரு வாரங்களுக்கு முன் சபையினால் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அறிவிக்கப்படுவதுடன் அது சம்பந்தமாக ஏதாவது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால் அல்லது அதிருப்திகரமான நிலைமை தோன்றினால் சபையின் கட்டளைப்படி கழிவுகள் குறித்த காணியின் ஊடாக அல்லது காணிக்குக் கீழாக அகற்றப்படுவது பொருந்துமெனக் கருதப்பட்டால் அக்காணியின் உரிமையாளருக்கு எழுத்துமுலமாக அது குறித்து கட்டளை பிறப்பிக்க வேண்டும் ;

(ii) அவ்வாறான ஏதாவதொரு காரியம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான நட்டஈட்டுத் தொகை பாதிப்புக்குள்ளாகும் காணி உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு செலுத்தப்படல் வேண்டும் ;

(iii) செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படாத வேளையில் பாதிப்புக்கு உள்ளாகிய பகுதியினரால் அது குறித்த மேன்முறையீடு ஒன்று தலைவருக்கு அனுப்பப்பட இயலும் ;

(iv) அத்தகையதொரு மேன்முறையீடு தொடர்பாக தலைவரினால் ஒரு வாரத்திற்குள் அவரது தீர்மானம் அறிவிக்கப்படுவதுடன் தலைவரின் தீர்மானம் இறுதியானதாக கருதப்படும்.

*11.* (i) யாராயினும் ஒரு நபருக்கோ அல்லது உரிமையாளருக்கோ சொந்தமான காணியின் ஊடாக அல்லது கீழாக கழிவுகளை அகற்றுவதற்கு மிகவும் சரளமான முறை வடிகாலமைப்பு ஆயின் சபையினால் மேற்கூறிய காணி உரிமையாளருக்கு அவர் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன்? என்று கேட்டு, அதற்கான பதில் அல்லது காரணங்களை தெரிவிப்பதற்கு நியாயமான சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும் . அது குறித்து எதிர்ப்பு தோன்றுவதாக அல்லது அதிருப்தியான நிலைமை தோன்றுமானால் சபையின் கட்டளைப்படி காணியின் ஊடாக அல்லது அடியில் கழிவுகளை அகற்றுவது பொறுத்தமென அக்காணியின் உரிமையாளருக்கு எழுத்து மூலமான கட்டளை பிறப்பிக்க இயலும்.

(ii) யாரானும் ஒருவருக்கு அல்லது அவரினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிக்கு அக்காரியம் தொடர்பில் விநியோகிக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் செல்லுபடியாகும் அனுமதியாவதுடன், அவரது கருத்துப்படி அதனைச் செயற்படுத்துவதற்காக மு. ப. 6.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரை அவரது உதவியாளர்களும் ஊழியர்களும் குறித்த காணிக்குள் நுழைவதற்கு அனுமதியளிக்கப்படல் வேண்டும்.

(iii) இத்துணைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் காணியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் கழிவுகளை அகற்றும் காரியத்துக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரதிநிதி அல்லது அவரினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு நபர் காணி உரிமையாளருக்கு வழங்கப்பட்ட பின்னர் கழிவுகளை அகற்றுவதற்கு சட்டரீதியாக அமைக்கப்பட்ட வடிகால் அமைப்புத் தொகுதி நீதியானது என எழுத்து மூலமான அறிவித்ததலின் பின்னர் அதனைப் பழுதுபார்த்தல் மற்றும் சுத்திகரிக்கும் காரியத்துக்காக மு. ப. 6.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரை எச்சந்தர்ப்பத்திலும் அவரது உதவியாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் குறித்த காணிக்குள் பிரவேசிக்க இயலும் ;

(iv) இத்துணைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு காரியத்தினையும் நிறைவேற்றுவதற்காக சபையினால் குறித்த காணி தொடர்பில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்கு தேவைப்படும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், காணியின் உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் நன்மை கருதி கீழ்க் காணும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(i) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சூழலில் இடையூறுகள் தவிர்த்தல் ;

(ii) குறித்த நடவடிக்கையின் போது தோண்டப்பட்ட காணியை அவரது செலவில் மீண்டும் முன்னைய நிலைமைக்கே சீரமைத்தல்.

(iii) சந்தையில் நிலவும் பொருட்களின் விலையைக் கருத்தில் கொண்டு காணியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்ற வேளையில் அவரது காணிக்கு ஏற்படும் நட்டத்துக்காக குறித்த இடத்தை மீண்டும் முந்திய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான நட்ட ஈட்டுத் தொகையினை வழங்குதல் ;

(v) இத்துணைச் சட்டத்திற்கு அமைய எந்தவொரு காணியின் உரிமையாளரினால் ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கான தேவை ஏற்படும் போது நியாமான காரணத்தை சபையின் கவனத்துக்கு அறிவிக்காது அதனை மறுப்பது மற்றும் தடுப்பது இயலாது. பிரதேச சபைகள் சட்டத்தின் 94 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய அவ்வாறான ஒரு காரியத்தை மேற்கொள்வது ஒரு சட்ட மீறலாகும் ;

(vi) இத்துணைச் சட்டத்தின் கீழ் காணி உரிமையாளரால் அசுத்த நீரை காணியின் ஊடாக அல்லது காணிக்கடியில் அகற்றப்படுவதற்கு உடன்படுத்துவதுடன், அக்காணியில் ஒரு கட்டிடம் நிர்மாணிப்பது சம்பந்தமாக அவரது கருத்தினை சபைக்கு அறிவிக்கும் வேளையில் சபையினால் எழுத்துமூலமான அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

*12.* சபையினால் எழுத்து மூலமான கட்டளைப்படி அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் காணி உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அறிவித்ததன் பின்னர் எந்தவொரு தனியார் காணியினுள்ளும் அல்லது உடைமையினுள்ளும் குழாய்த் தொகுதியை பரிசீலிப்பதற்காக, பழுதுபார்ப்பதற்காக, சுத்திகரிப்பதற்காக அல்லது பராமரிப்பதற்காக காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை எந்த நேரத்திலும் உள்ளிட அதிகாரம் உண்டு

*13.* சபைக்குப் பதிலாக அதிகார வழங்கப்பட்ட யாரொரு அதிகாரியோ அல்லது ஊழியரோ கழிவுகள் மற்றும் அசுத்த நீர் அகற்றப்படும் குழாய்த் தொகுதி சம்பந்தமான சபையின் பராமரிப்பு நடவடிக்கைகள் தோண்டுதல் மண்ணை அப்புறப்படுத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு இடையூறு விளைவித்தல் இயலாது. பிரதேச சபைகள் சட்டத்தின் 94 ஆவது பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக அவ்வாறு இடையூறு விளைவித்தலானது சட்டத்தை மீறுகின்ற ஒரு காரியமாகும்.

*14.* இந்த செயற்றிட்டத்தின் குழாய்களுக்கு, இறைக்கும் இயந்திரங்களுக்கு (Pump house) அல்லது மேன் ஹோல் (Man - hole) களுக்கு எந்த ஒரு நபராலும் சேதம் ஏற்படுத்தலாகாது.

*15.* யாராயினும் ஒரு நபர் துணைச் சட்டத்தின் 13 ஆவது சரத்தினை மீறினால் குழாய்த்தொகுதியை அல்லது மேன் ஹோலை சீரமைப்பதற்கான செலவினை செலுத்த வேண்டியதுடன், அதைச் செய்யத் தவறினால் செலவுத் தொகையை செலுத்தி முடியும். வரை அந்த நபருக்கு வழங்கப்பட்டுள்ள கழிவகற்றும் சேவையினை தலைவரினால் இடைநிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

*16.* கழிவுகள் அசுத்த நீர் அகற்றப்படும் சேவைக்காக, கழிவுகள் மற்றும் அசுத்த நீர் அகற்றப்படும் செயற்றிட்ட அலுவலர்களின் மூலம் சேவை பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரிடமிருந்து பணம் வசூலிக்கப்படுவதுடன், அத்தொகை மாதாந்த ரசீதுடன் சேர்த்து கணிக்கப்படும். அத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும். பணம் செலுத்தத் தவறினால் அல்லது சுணக்கம்

ஏற்படுத்தினால் அதற்காக மேலதிக தண்டம் செலுத்துவதற்கு உட்பட வேண்டுவதுடன், பில் கிடைத்து 30 நாட்களுக்குள் அத்தொகையை செலுத்தாவிட்டால் சேவையைத் துண்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17. குழாய்த் தொகுதி அமைப்பின் மீது கீழ்க்காணும் பொருட்களைக் குவித்து வைப்பது, பாய விடுவது, கைவிடுவது வழிந்தோடவிடுவது மற்றும் நிலைகொள்ளச் செய்வது யாராலும் செய்யப்படக்கூடாது :-

(i) யாதாயினும் அடர்த்தியான நீர், கிருமிநாசினி, மழைநீர், அசுத்தமான மழை நீர் மற்றும் அசுத்த நீர், கழிவகற்றும் குழாய் தொகுதிக்குப் பொருத்தமற்ற இரசாயனப் பொருட்கள் அல்லது வேறு பொருட்கள் ;

(ii) வடிகால் அமைப்பின் ஊடாக இலகுவாக நீர் வழிந்தோடுவதற்கும், கழிவுகளை அகற்றுவதற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய அல்லது பாதிப்பு விளைவிக்கக்கூடிய சுடு நீர், நீராவி போன்றன.

(iii) குழாய் வழிகள் அடைபடக்கூடியதான மண், செங்கள் அல்லது செங்கற் தூள்கள் அல்லது குழாய்களை அடைக்கக் கூடியதுமான பொருட்கள் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட வேறொரு குழாய்த்தொகுதி ;

18. எந்த ஒரு நபரினாலும் சபையின் எழுத்து மூலமான அனுமதியின்றி குழாய் வழிகளை மாற்றுதல், பொருத்தப்பட்ட தன்மை, அமைப்பு அல்லது அகற்றுதல், இடையூறு செய்தல், மூடிவிடுதல், மீண்டும் ஸ்தாபித்தல் அல்லது ஏதாயினும் ஒரு வடிகாலை, கழிவுகளை வெளியேற்றும் குழாய் அல்லது வேறு ஏதாவது உபகரணங்களை அல்லது அதற்காகப் பொருத்தப்பட்டுள்ள வேறு பொருட்களை மாற்றுதல் ஆகியன செய்தலாகாது.

19. கழிவுகள் அகற்றப்படும் வடிகாலுக்கு சேதம் ஏற்படும் வகையில் குறித்த காணியில் கட்டிடங்களை எழுப்புதல், மீளமைப்பு செய்தல், மலசல கூடங்கள் அல்லது அது போன்ற கட்டிடங்களுக்காக வழங்கப்பட்ட பொருட்களைப் பாவித்து வேறு கட்டிடம் கட்டுதல் ஆகியன செய்தலாகாது.

20. (i) கழிவுகளை அகற்றும் தொகுதிகளுடன் ஏதாவது இணைப்பை ஏற்படுத்துதல் அல்லது அதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ii) ஏதாவது ஒரு உள்ளக குழாய்த் தொகுதியினை பழுதுபார்க்க ஏற்பாடு செய்தல் ;

(iii) பிரதான குழாய்த் தொகுதியிலிருந்து அல்லது இறைக்கும் இயந்திரத்திலிருந்து அல்லது மேன் ஹோல் (Man- hole) ஒன்றினை அப்புறப்படுத்துதல் சபையினால் விநியோகிக்கப்பட்ட எழுத்துமூலமான அனுமதியின்றி அல்லது அதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரினரால் அன்றி வேறு எவராலும் செய்யப்படுதல் கூடாது.

21. யாராயினும் ஒரு நபரினால் இத்துணைச் சட்டத்தின் 16, 17, 18, 19 ஆம் சரத்துகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளை மீறுதல் கூடாது. பிரதேச சபைகள் சட்டத்தின் 94 ஆவது சரத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் அவ்வாறான சட்ட மீறல் தொடர்பில் செல்லுபடியாகும்.

22. துணைச் சட்டத்தின் 23 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டவாறு, கழிவுகளை அகற்றும் தொகுதிக்கு யாராயினும் ஒரு நபரினால் பாதிப்பு உருவாக்கப்படுமானால், அவ்வாறான பாதிப்புகளுக்காக செலவு செய்யப்பட்ட பணம் அவரால் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும். பணம் செலுத்தத் தவறுதல் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கழிவுகள் கட்டணம் எனக் கருதப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23. (i) எந்த ஒரு நபரினாலும் சபையிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட எழுத்துமூலமான அனுமதியின்றி பொது கழிவகற்றல் குழாய்கள் (பிரதான குழாய்த் தொகுதி) மீது கட்டிடமொன்றைக் கட்டுதல் அல்லது அது போன்ற ஒன்றை ஏற்பாடு செய்தல் கூடாது. அது பிரதேச சபைகள் கூட்டத்தின் 94 ஆவது அதிகார சபையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் குறித்த சட்டங்களை மீறுதல் எனக் கருதப்படும்.

(ii) சபையின் அனுமதியின்றி ஏதாவது ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பது அல்லது கட்டி எழுப்புவது துணைச் சட்டத்தின் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் செய்யக்கூடாது என்பதுடன், அதன் மூலம் கூறப்பட்டுள்ளதன்படி அதனை உடைத்தெறிதல், மாற்றுதல் அல்லது ஏதாவது சேதம் விளைவித்தல் ஆகியவற்றில் ஒன்றையாவது செய்தால் அது புனரமைக்கப்படுவதற்கான செலவுத் தொகை, சபையின் அனுமதியின்றி அவ்வாறு செய்த நபரினால் செலுத்தப்படல் வேண்டும். பணம் செலுத்தத் தவறினால் அத்தொகையானது சபையினால் விதிக்கப்பட்ட கட்டணமாகக் கருதி அவரிடமிருந்து வசூலிக்கப்படும்.

24. (i) குழாய்த் தொகுதி தொடர்பாக ஏதாவது காரியத்தைச் செய்தல், கட்டி எழுப்புதல் பொருத்துதல், மாற்றுதல் அல்லது தனிப்பட்ட கழிவகற்றும் குழாய்களை இடுதல், அல்லது ஏதாவது உபகரணங்களைப் பொறுத்துதல், தனிப்பட்ட கழிவகற்றும் குழாய்களை பொது கழிவகற்றும் குழாய்களுடன் இணைத்தல் போன்றன. இத் துணைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் - செய்யவேண்டியதுடன் அதனை நடாத்திச் செல்ல இயலுமாவது சபையினால் அதிகாரம் அளிக்கப்பட்ட மற்றும் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ள காணிக்கு கழிவகற்றும் சேவை மற்றும் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிக்கு கழிவகற்றும் சேவை வழங்கப்பட்டுள்ள உரிமையாளரின் செலவில் மாத்திரமே செய்யப்படலாம்.

25. (i) கழிவுகளையும் அசுத்த நீரையும் அகற்றுவதற்காக குழாய்த் தொகுதியொன்று பொருத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக தலைவர் திருப்தியுற்றால் துணைச் சட்டங்களின் தன்மைகளுக்கு ஏற்ப அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

(ii) சபையின் சார்பில் வழங்கப்பட்ட ஓர் அதிகாரியினால் கழிவுகளும் நீரும் அகற்றப்படும் குழாய்த் தொகுதி சம்பந்தமாக சிபாரிசு செய்யப்பட்டு இத்துணைச் சட்டத்தில் அல்லது வேறு எழுத்து வடிவிலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தன்மைக்கு ஏற்ப, நிறைவேற்றப்படவேண்டிய விடயங்களுக்கு இணங்க திருப்தியுற்றால் அவ்வாறான சிபாரிசு பெறப்பட்டதன் பின்னர் தலைவரினால் அனுமதி வழங்கப்படும்.

26. இத்துணைச் சட்டத்தின் விதிகளை மீறுதல் குற்றச் செயலாவதுடன் அதிகாரம் கொண்டதொரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதனைத் தொடர்ந்து 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

27. சொற் பிரயோகம் தொடர்பில் மாற்றுக் கருத்து தேவைப்பட்டாலன்றி இத் துணைச் சட்டத்தில் -

"குழாய்" என்பதன் மூலம் கழிவுகளும் அசுத்த நீரும் அகற்றப்படும் குழாய் வழிகளும் ;

"பிரதான குழாய் வழி" என்பதனால் கழிவுகள் வழிந்தோடுவதற்கும் அசுத்த நீர் அகற்றப்படுவதற்காக சபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குழாய் வழிகளும் ;

"அசுத்த நீர்" என்ற பதத்தினால் யாதாயினும் ஓரிடத்தில் அமைந்துள்ள மலசலகூடம், குளியலறை, சமையலறை போன்றவற்றிலிருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாக்கப்படும் கழிவுகளும் கருதப்படும்.

1 ஆம் அட்டவணை (2 ஆம் சரத்து)

**துணைச் சட்டம் செல்லுபடியாகும் பிரதேசங்கள்**

1.
2.
3.

பகுதி 13

**குப்பை கூளங்களை துப்பரவு செய்தல்**

1. இது பிரதேச சபையினால் நிச்சயிக்கப்படும் பிரதேசங்களில் குப்பை கூளங்களை துப்புரவு செய்வதனை ஒழுங்குறுத்தல், நிர்வகித்தல் அது குறித்து கட்டணங்கள் அறவிடல் சம்பந்தமான துணைச் சட்டமாகும் .

2. பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்டதான இச்சட்டத்தின் 1 ஆவது பட்டியலில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களின் உடைமைகளின் உரிமையாளர்களினால் அல்லது அவற்றை பயன்படுத்துபவர்களினால் தொழிற்சாலைகள் மற்றும் குடியிருக்கும் வீடுகளுக்காக குப்பை கூளங்கள் சேகரிக்கும் கட்டணம் மற்றும் குப்பை கூடை என்பவற்றுக்கான செலவுத் தொகையை பிரதேச சபைக்கு மாதமொரு தடைவை செலுத்துதல் வேண்டும். செலுத்துவதற்கான காலம் மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் ஆகும். இந்த குப்பைக் கூடைகளுக்கான கட்டணம் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

3. 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அதிகார எல்லைக்குள் குடியிருப்பாளர்களினால் குப்பை கூளங்களை துப்பரவு செய்தல் தொடர்பாக கீழ்க்காணும் வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் :-

(i) பிரதேச சபையினால் வீதிகளின் இரு மருங்கிலும் கொக்கிகளுடன் கூடிய இரும்புத் தூண்கள் ஊன்றப்பட்டு அத்தூண்களில் செம் மஞ்சள் நிறம் பூசப்பட்டு இனங்காணும் பலகை பொருத்தப்பட்டிருக்கும். சபை ஏற்பாடு செய்துள்ள அவ்வாறான கூடைகளுள் குப்பைகளை இட்டு குறிப்பிடப்பட்ட தினங்களில் காலை 6.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிக்கு முன்பதாக குப்பைக் கூடைகளை குறிப்பிடப்பட்ட தூண்களில் தொங்கவிடப்படல் வேண்டும்.

குப்பை கூளங்களை உக்கிப்போகும் மற்றும் உக்கிப் போகாத என்ற வகையில் வேறுபடுத்தி இரு நிறங்களில் தரப்பட்டுள்ள கூடைகளில் போடப்பட வேண்டும். சிவப்பு நிறக் கூடையினுள் உக்கிப் போகாத குப்பை கூளங்களையும், கறுப்பு நிறக் கூடையினுள் உக்கிப் போகும் குப்பைக் கூளங்களையும் வேறுபடுத்தி இடப்படல் வேண்டும். கூடைகளினுள் போட முடியாத மரக்கிளைகள் போன்றவற்றை அடையாளமிட்டுக் காட்டியுள்ள இடங்களில் கொண்டு வந்து போடப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதி சபையினால் அமைக்கப்பட்டுள்ள இரும்புத் தூண்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதத்திலானதாதல் வேண்டும்.

(ii) குப்பை கூடைகள் வீதிகளுக்கு அல்லது பிரஜைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தூண்களிலுள்ள கொக்கிகளில் தொங்க விடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) இரும்புத் தூண்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள குறித்த நேரங்களுக்கு முன்பதாக குறித்த திகதிகளில் குப்பைக் கூளங்களைக் கொண்டு வந்து பிராணிகளினால் ஏற்படக்கூடிய தீங்குகள் தவிர்க்கப்படும் வகையில் காட்டப்பட்டுள்ள இடங்களிலேயே தொங்க விட வேண்டும்.

(iv) குப்பை கூளங்கள் எச்சந்தர்பத்திலும் பகிரங்க இடங்களில் வடிகால்களில் அல்லது வீதிகளில் போடப்படல் கூடாது.

(v) குப்பைக் கூளங்களை முறைக்கேடாக கண்ட இடங்களில் போடுவதனால் ஏற்படும் சூழல் மாசடைதல் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட இயலும்.

(vi) பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலைகள், காரியாலயங்கள், வைத்தியசாலைகள், பஸ் நிலையங்கள், வாரச் சந்தைகள், பொதுச் சந்தைகள் ஆகிய இடங்களிலும் பாஞ்சாலைகள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் மற்றும் கோவில்கள் போன்ற வணக்க ஸ்தலங்களிலும் குப்பைக் கூளங்களைப் போடுவதற்காக சீமெந்து தொட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், வியாபார நிலையங்களிலும் போசனசாலைகளிலும் குப்பை கூடைகள் வைக்கப்பட்டுள்ளபடியால் குப்பைக் கூளங்களை தரப்பட்டுள்ள பாத்திரங்களிலேயே போடப்படல் வேண்டும். தொழிற்சாலைகளில் குப்பைக் கூளங்களுக்காக அவ்விடங்களில் காட்டப்பட்டுள்ள பாரிய அளவிலான சீமெந்துத் தொட்டிகளில் கழிவுகள் அனைத்தும் இடப்படல் வேண்டும்.

(vii) மேற்படி காரியத்தினை பரிசீலனை செய்வதற்காக அதிகாரம் வழங்கப்படும் நபர் பிரதேச சபையின் தலைவர் அல்லது அக் காரியத்துக்காக பொதுவாக அல்லது விசேடமாக எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்படும் யாராயினும் அலுவலர் ஒருவராவதுடன் எந்தவொரு நாளிலாவது கடிகார நேரத்தின்படி காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையான காலப் பகுதியினுள் பரிசீலனைக்காக வீடுகளுக்கு அவர் வரலாம். கீழ்க்காணும் விடயங்கள் அவ்வாறு பரிசீலிக்கப்படும்:-

(1) ஒவ்வொரு குடியிருப்பாளரினாலும் துணைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நியதிகள் கடைபிடிக்கப்பட்டுள்ளனவா ;
(2) உரிய இடங்களில் குப்பைக் கூளங்கள் முறையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனவா,
(3) வீட்டுத் தோட்டங்களில் ஒழுங்கற்ற வகையில் பொலித்தீன் , சிரட்டைகள், டயர், (டின்கள்) குவளைகள், யோகட், கோப்பைகள் மற்றும் வெறும் குப்பைக் கூளங்கள் போடப்பட்டுள்ளனவா ;
(4) நீர் நிறையும் வகையில் குவளைகள், யோகட் கோப்பைகள், டயர் அல்லது வேறு பொருட்கள் கண்ட இடங்களில் போடப்பட்டுள்ளனவா, போன்ற விடயங்கள் பரிசீலிக்கப்படும்.

(viii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனைகளின் போதுகுடியிருப்பவர்களால் துணை யாப்பில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளை கைவிடப்பட்டிருப்பின் இத் துணை யாப்பினை மீறப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

(ix) இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏதவது விதிமுறைகளை மீறு கின்ற ஒவ்வொரு நபரும் குற்றம் இழைக்கிறார் என்பதுடன் அந்நபர் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தின் முன்னால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் சரத்திலுள்ளவாறான தண்டனைகளுக்கு ஆளாவார்.

## பகுதி 14

### வடிகாலமைப்புத் தொகுதிகள்

1. இது, பிரதேச சபையினால் இதன் 1 ஆவது பட்டியலில் காணப்படுகின்றவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களுக்குரிய அதிகார எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள வீதிகள் மற்றும் பெருந்தெருக்களுக்கு அண்மையிலுள்ள அனைத்து பொது நீர் விநியோக வடிகாலமைப்புத் தொகுதிகளைப் பரிசீலித்தல் , நிர்வகித்தல் மற்றும் அவை சம்பந்தமாக விதிமுறைகள் ஆக்குதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

*2.* மேற்கூறிய 1 ஆம் சரத்தின் மூலம் கூறப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள சகல பொது வடிகாலமைப்புத் தொகுதிகள் சம்பந்தமாகவும் அதிகார பிரதேசத்தின் உடைமைகளின் உரிமையாளர்கள், உடைமைகளைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் வர்த்தகர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் கீழ்க்காணும் விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும் :-

(i) பொதுவடிகாலமைப்புத் தொகுதி தொடர்பான எந்தவொரு நீர் விநியோக வடிகாலோ அல்லது மழை நீரை வெளியேற்றும் வடிகாலோ பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்படல் கூடாது ;

(ii) மேற்கூறிய 1 ஆம் சரத்தின்படி அனுமதிபெறுவதற்காக கட்டிட விண்ணப்பப்படிவமொன்றினை சமர்ப்பித்து சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வருடாந்தம் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டணங்களை செலுத்துவதன் மூலம் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

*3.* கழிவுகள் அகற்றப்படும் வடிகால்களின் ஊடாக வழிந்தோடும் அசுத்த நீர் நேரடியாக பொதுவடிகாலமைப்புத் தொகுதிக்கு ஒரு போதும் அனுப்பப்படுதல் கூடாது. இந்த நீரானது தரையில் உறிஞ்சிக்கொள்ளக் கூடிய விதத்தில் குழிகள் வெட்டப்பட்டு சுத்திகரிக்கப்பட்டதன் பின்னர் பிரதான மழை நீர் வடிகாலமைப்புத் தொகுதிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

*4.* யாதாயினும் ஒரு காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் விழுகின்ற மழை நீரைத் தவிர வேறு எவ்விதத்திலும் குறித்த காணியில் அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது கட்டிடத் தொகுதியில் இருந்து பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் அசுத்த நீர், கழிவுகளை உறிஞ்சிக் கொள்ளும் ஒரு குழிக்கு வழிந்தோடுவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டியதுடன், பிரதேச சபைக்குரிய ஒரு வீதிக்கோ அல்லது வீதியிலுள்ள வடிகாலுக்கோ அனுப்பப்படல் கூடாது.

*5.* அதே போன்று குறித்த நீரை உறிஞ்சிக் கொள்ளும் குழி மூடப்படாது திறந்து வைக்கப்பட்டிருத்தல் ஆகாது. அண்மையில் உள்ள பொது வடிகாலமைப்பிலிருந்து அல்லது நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணற்றில் இருந்து 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். மேலும் யாதாயினும் ஒரு தொழிற்சாலையில் பாவிக்கப்பட்டதன் பின்னர் வெளியேற்றப்படும் அசுத்த நீரை ஒருபோதும் பொது நீர் வடிகாலுக்கோ அல்லது மழை நீர் வடிகாலமைப்புத் தொகுதிக்கோ அனுப்பப்படுதல் கூடாது.

*6.* நிர்மாணிக்கப்படும் வடிகாலை பொதுவடிகாலமைப்புத் தொகுதியுடன் இணைக்கப்படும் போது முறையான சரிவினை உடையதாக தகுந்த முறையில் கொங்கிறீட் வடிகால் அல்லது கொங்கிறீற் குழாய்கள் இடப்பட்டு இணைக்கப்படுதல் வேண்டும்.

*7.* வடிகாலமைப்புத் தொகுதியினுள் கீழே குறிப்பிடப்பட்டவற்றைபோடுதல் கூடாது:-

(i) மலசலக் கழிவுகள் ;
(ii) குப்பைக் கூளங்கள் ;
(iii) உயிரினக் கழிவுகள் ;
(iv) பொலித்தீன் ;
(v) பிளாஸ்டிக் பொருட்கள் ;
(vi) கண்ணாடி;
(vii) உற்பத்திகளுக்கான மூலப்பொருட்கள்.

இக்கழிவுப் பொருட்களை மழை நீர் வடிகாலமைப்புத் தொகுதியினுள் போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

*8.* மேலும், குறித்த வடிகாலமைப்புத் தொகுதி அமைந்துள்ள இடத்தின் மீது மோட்டார் வாகனங்கள் நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அன்றி, வாகனங்களை வடிகாலமைப்புத் தொகுதியின் எந்தவொரு பகுதியிலும் எக்காரணம் கொண்டு நிறுத்தி வைத்தல் ஆகாது.

*9.* வடிகாலமைப்பு தொகுதிக்கு அண்மையில் கால்நடைகளைக் கட்டிவைத்தல், அடைத்து வைத்தல் ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

*10.* வடிகால்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் கட்டிடப் பொருட்களை சேகரித்து வைப்பது கூடாது.

*11.* பிரதேச சபை மூலம் நிர்மாணிக்கப்பட்ட எந்தவொரு வடிகால்களுக்கும் மேலாக தற்காலிகமான அல்லது நிரந்தரமான கட்டிடங்களையோ அல்லது வேறு நிர்மானங்களையோ அமைத்தல் ஆகாது.

*12.* இத்துணைச் சட்டத்தின் விதிகளை மீறுகின்ற எந்த ஒரு நபரும் குற்றம் புரிகிறார் என்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட (காரியம் அல்லது நடத்தை) நிர்மானங்களை சபை உடைத்தெறியவோ, மாற்றவோ, மீளமைப்பதற்கோ அல்லது பிரதேச சபை உசிதமெனக் கருதும் வகையில் வேறெந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கலாம். மேலும், பிரதேச சபையினால் அதற்காக செலவிடப்பட்ட முழுத் தொகையும் குற்றவாளியாக்கப்பட்ட நபரினால் செலுத்தப்படல் வேண்டும்.

*13.* இத்துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு விதியினையாவது மீறுகின்ற அனைவரும் குற்றம் புரிகின்றார்கள் என்பதுடன், குறித்த நபர் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 750 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு

உட்பட வேண்டியதுடன் அக்குற்றத்தை மென்மேலும் புரிந்தால் அவ்வாறு குற்றமிழைக்கப்படும் ஒவ்வொரு தினத்திற்கும் 250 ரூபா வீதமான மேலதிக தண்டமும் செலுத்துவதற்கு உட்படல் வேண்டும்.

*1 ஆம் அட்டவணை (1 ஆவது சரத்து)*

*துணைச் சட்டங்கள் செல்லுபடியாகும் விருத்தி செய்யப்பட்ட கிராமப் புறங்கள்*

1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.

**பகுதி 15**

**பொது மற்றும் தனியார் வர்த்தக சந்தை**

1. பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் உள்ள பொது அல்லது தனியார் வர்த்தகச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ளவற்றை பராமரித்தல், நிர்வாகம் செய்தல், கடைகளின் வியாபார தட்டுகளையும் காணிபூமிகளையும் ஒதுக்கிக்கொடுத்தல் அல்லது கட்டிடங்களையும் சூழலில் உள்ள எந்தவொரு பிரிவையும் பயன்படுத்துவதற்கான கட்டணங்களையும் வாடகையையும் தீர்மானித்தலும் அறவிடுதலும் தனியார் வர்த்தகச் சந்தைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கள், அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் அனுமதிப்பத்திர கட்டணங்களை தீர்மானித்தல் மற்றும் மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்குமான ஏற்பாடுகளை தயாரித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு பொது வர்த்தகச் சந்தை தொடர்பாகவும் இத்துணைச் சட்டத்தின்படி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை பின்பற்றுதல் பிரதேச சபையின் கடமையாகும். அதாவது, அப்பொதுச் சந்தையில் -

(i) நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் செங்கற்களினால், சீமெந்து கற்களினால் அல்லது செந்நிற களிமண் கற்களினால் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், சுவர்களில் உயரமானது குறைந்தபட்சம் தரைமட்டத்தில் இருந்து 03 மீற்றர் உயரம் வரை இருக்க வேண்டும் ;

(ii) கூரையானது ஏதாவது ஒரு நிரந்தரமான பொருட்களினால் அமைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) உட்புறத்தில் உள்ள கடைகளின் கூரைகளுக்கு உட்கூரை பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் அந்த உட்கூரை தரையிலிருந்து 2.85 மீற்றர் உயரத்திற்கு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) கட்டிடத்தின் உட்புறத்தில் கடைகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் விராந்தையானது குறைந்த பட்சம் 2.5 மீற்றருக்கு கீழ் இருக்க வேண்டுமே தவிர அனைத்து கடைகளிலும் விராந்தைகள் இணையும் இடத்தில் மடித்து வைக்கக்கூடிய வகையிலான கதவுகள் அல்லது பாதி பாதியாக கழற்றி திறந்து வைக்கக்கூடிய வகையிலான கதவுகளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) கடைகளுடனான கட்டிட சுவர்களில் வெளிப்புற எல்லையும் விராந்தையின் வெளிப்புற எல்லையும் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலத்திலான மேடைகள் மற்றும் மலசல நீர் வழிந்தோடிச் செல்லக் கூடிய வகையிலான வடிகால்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) கட்டிடத்தில் கடைகள் உள்ள பிரிவிற்கு வெளிப்புறமாக தற்காலிக வியாபாரிகளுக்கு வியாபார தட்டுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vii) உட்புறத்தில் நிர்மாணிக்கப்படும் அனைத்து வியாபார பரண்களும் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது செந்நிற களிமண் கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சுவர்களின் மேல் கொங்கிரிட் தட்டுகளினால்

அல்லது துருப்பிடிக்காத உலோக தட்டுகளினாலான தட்டுகளால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எப்படியானாலும் கொங்கிரிட் தட்டுகளினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தட்டுகள் என்றால் சீமெந்து பூசி மேற்பரப்பு காரைபடுத்தப்பட்டிருத்தல் அல்லது பீங்கான் ஓடுகளினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான வியாபார தட்டுகள் அமைக்க முடியாத சந்தர்ப்பத்தில், தரையின் மேல் சம அளவான இடப்பரப்பை அமைத்திருக்க வேண்டியதோடு அதன் பிரிவுகளை செங்கற்களினால், சீமெந்து கற்களினால் அல்லது செந்நிற களிமண் கற்களினால் பூர்த்தி செய்து சீமெந்து பூசி மேற்பரப்பு மென்மைப்படுத்தியிருக்க வேண்டியதுடன், ஒவ்வொரு பகுதியையும் பிரிப்பதற்கான கோடுகளை வெள்ளை நிறத்தால் வர்ணமிட்டு அடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) அனைத்து வியாபார பரண்களும் குறைந்த பட்சம் 2 சதுர மீற்றர்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(ix) அனைத்து வியாபார பரண்களும் செங்கற்களினால் அல்லது சீமெந்து கற்களினால் அல்லது செந்நிற களிமண் கற்களினால் அல்லது முழாம் பூசப்பட்ட இரும்புக் குழாய்களினால் அல்லது வலுவூட்டப்பட்ட அலுமினிய குழாய்களினால் ஆன தூன்களின் மேல் குறைந்தளவு தரையில் இருந்து 2.25 மீற்றர் உயரத்திற்கு கூரை அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அதன் பின்புறமானது தரையிலிருந்து 2.1 மீற்றர் உயரத்திற்கு இருத்தல் வேண்டும். அத் தூன் செங்கற்களில் அல்லது சீமெந்து கற்களில் அல்லது செந்நிற களிமண் கற்களினால் அமைக்கப்பட்டிருந்தால் அதனை காரை பூசி பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும். முழாம் பூசப்பட்ட இரும்பினால் செய்யப்பட்டிருந்தால் அத்தூண்களுக்கும் பூச்சுப் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(x) அனைத்து கூரைகளும் நிரந்தரமான பொருட்களினால் அமைத்திருக்க வேண்டியதுடன், மழைநீர் குழாய் அல்லது மழை நீர் குழாய்களில் சேகரிக்கப்படும் நீர் கீழே வழிந்தோடக் கூடிய போதியளவிலான வகையில் குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xi) அனைத்து வியாபார பரண்களை சுற்றி தரையிலிருந்து குறைந்த பட்சம் ஒரு மீற்றர் அகலத்திலான மேடை அமைத்திருத்தல் வேண்டியதோடு மழை நீர் வழிந்தோடக்கூடிய வகையிலான கால்வாய்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xii) பாவனைக்கு எடுக்கும் நீரானது மனித பயன்பாட்டிற்காக உகந்ததென தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர்வடிகால் அமைப்பு சபையினால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் உள்ளடங்கிய சான்றிதழ் இருந்தால் மாத்திரம் அன்றி குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இந் நிபந்தனை சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர்வடிகால் சபையினால் வழங்கப்படும் நீரை பயன்படுத்துவதென்றால் அந் நிபந்தனை சான்றிதல் கிடைக்கப்பெற்றது என கருத வேண்டும் ;

(xiii) நிலையத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்தும் நீரை களஞ்சியப்படுத்தி வைப்பதென்றால் அக் களஞ்சியப்படுத்தப்பட்ட நீர் அசுத்தமடையாமல் இருப்பதற்கு பாதுகாப்பு ஒழுங்கு முறைகளை செய்ய வேண்டும் ;

(xiv) ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் வேறுவேறாக மலசலகூடம் போதியளவிலாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ் அனைத்து மலசல கூடமும் குறைந்த பட்சம் தரையிலிருந்து இருந்து 2 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் சுவருக்கு பீங்கான் ஓடுகள் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xv) அனைத்து கடைகளுக்கும், வியாபார தட்டுகள் அருகிலும், மலசலகூடத்தினுள் அல்லது விறாந்தைக்கு உட்பட அனைத்து பொது பிரிவுகளின் உட்புறத்திலும் போதுமான மின்வெளிச்சம் வழங்கப்பட்டிருக்கவேண்டியதுடன் அனைத்து மின் இடைவெளிகள் மின் சுற்றுகளும் மின்கடத்திகளினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xvi) அனைத்து கடைகளுக்கும் ஒவ்வொரு மின் மானி (meter) பொறுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் பொது நிலையங்களில் மின் வெளிச்சத்திற்காக செலவாகும் மின்சாரத்தின் அலகுகளை அளவிடுவதற்காக வேறு வேறாக மானி (meter) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xvii) சூழலில் பொதுவான நீர்க் குழாய் ஒன்று பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xviii) மரக்கறிகள் அல்லது பழங்கள் கழுவுவதற்காக தனியான இடமொன்றை ஒதுக்கியிருத்தல் வேண்டும் ;

(xix) வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்ப அனைத்து கடைகளுக்கும் பாவனைக்கு தேவையான நீர் இணைப்புகள் ஒவ்வொன்று வீதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்ஒவ்வொரு நீர் இணைப்புகளுக்கும் வெவ்வேறான நீர் அலகு (meter) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டியதுடன் நீர் குழாய்கள், மற்றும் மரக்கறிகள் மற்றும் பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலும் நீர் பாவனையின் அளவினை அளப்பதற்காகவும் நீர்மானி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xx) உட்புறத்திற்கு நேரடியாக அல்லது கூரையின் மேல் விழும் நீர் மரக்கறியும் பழங்களும் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து அகற்றப்படும் நீரையும் உகந்த முறையில் வழிந்தோடக் கூடிய வகையிலான வடிகால் முறைமையை அமைத்திருக்க வேண்டியதுடன் அதில் இருந்து வெளியாகும் கழிவு நீரை தடையின்றி வழிந்தோடுவதற்குரிய ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும் ;

(xxi) உட்புறத்தில் தீவிபத்திற்கு போதியளவிலான பாதுகாப்பு திட்டத்தை தயாரித்திருக்க வேண்டியதுடன் மின்சாரத்தினால் ஏற்படுகின்ற தீ, எரிபொருள் மூலம் ஏற்படும் தீ மற்றும் ஏனைய வகையில் ஏற்படும் தீயினை கட்டுப்படுத்துவதற்கு தேவையான வகையில் வெவ்வேறான தீயணைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xxii) நுகர்வோரினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் நிறைகளை உறுதிப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பொதுவான தராசு ஒன்று அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தெளிவாக தெரியக்கூடிய வகையில் வைக்க வேண்டும்;

(xxiii) பொது வர்த்தகச் சந்தையில் கடைகளின் அமைப்பின் கவனத்தில் கொண்டு பிரதேச சபையினால் இறைச்சி, மீன், பழங்கள், மரக்கறிகள் பலசரக்குகள் மற்றும் ஏனைய வியாபார பொருட்கள் விற்பனைக்கும் வர்த்தக சந்தையில் ஒவ்வொரு பிரிவுகளாக பிரித்து ஒதுக்குதலும் அம்முறைப்படி வியாபார தட்டுகள் ஒவ்வொரு பிரிவுகளாக பிரிப்பதும் பிரதேச சபையின் கடமையாகும்.

(xxiv) சுற்றாடலில் உருவாகும் கழிவுப் பொருட்கள் :-

(i) உயிரினக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிகள் ;
(iii) கடதாசிகள் அல்லது கடதாசிகளை சார்ந்த பொருட்கள் ;
(iv) பொலிதின் அல்லது பிளாஸ்டிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக்கை சார்ந்த பொருட்கள் மற்றும் ரிஜிபோம் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்களினால் ஆன அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக கலப்பினால் ஆன பகுதிகள் ;
(vi) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

குப்பைகளை வெவ்வேறாக சேகரிக்கக்கூடிய வகையில் குப்பைத் தொட்டிகள் அல்லது பாத்திரங்கள் அல்லது தாங்கிகள் அல்லது அதற்காக பொது வர்த்தகச் சந்தையில் வேறான ஒரு இடம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன் உயிரினக் கழிவுப்பொருட்கள் போடுவதற்காக அமைக்கப்பட்ட தொட்டில்கள் அல்லது பாத்திரங்கள் அல்லது தாங்கிகளில் எலிகளுக்கு, ஈக்களுக்கு, ஏனைய பூச்சிகளுக்கு அல்லது ஏதேனுமொரு பறவைகளுக்கு உள்நுழைய முடியாதபடி நன்றாக மூடக்கூடிய வகையிலான மூடிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xxv) மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கில் நிறுத்துவதற்கான இடமொன்றை அமைத்திருத்தல் வேண்டும் ;

(xxvi) வர்த்தகச் சந்தைக்கு வரும் நுகர்வோருக்கு மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு போதியளவிலான இடமொன்றை ஒதுக்கி வைத்திருத்தல் வேண்டும் ;

3. (i)பொது வர்த்தக சந்தையில் உள்ள எந்தவொரு கடை அறையின் வாடகையாளரோ அல்லது எந்தவொரு வியாபார பரண்களையும் பயன்படுத்துவதற்கும் அல்லது உபயோகிப்பதற்காக பற்றுச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொண்ட ஏதேனுமொரு நபரினாலும் அல்லது வியாபாரத்தில் ஈடுபடும் கடைகளிலிருந்து அல்லது அதற்கருகில் வியாபார பரண்களின் மீது அல்லது அதனருகில் உருவாகும் அனைத்து கழிவுப்பொருட்கள் –

(i) உயிரினக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிகள் ;
(iii) கடதாசிகள் அல்லது கடதாசிகளை சார்ந்த பொருட்கள் ;
(iv) பொலிதின் அல்லது பிளாஸ்ரிக் அல்லது பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக்கை சார்ந்த பொருட்கள் மற்றும் ரிஜிபோம் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்களினால் ஆன அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக கலப்பினால் ஆன பகுதிகள் ;
(vi) ஆபத்தான கழிவுப் பொருட்கள் ;

மேற்கூறப்பட்டுள்ள வகைகளின் கீழ் வகைப்படுத்தி அவ் ஒவ்வொரு வகையான கழிவுப்பொருட்களையும் போடுவதற்காக பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள வெவ்வேறான தொட்டிகளுக்கு அல்லது பாத்திரங்களுக்கு அல்லது தாங்கிகளுக்கு போடுதல் அதன் வாடகையாளர்களின் அல்லது அவ் வியாபார பரண்களுக்காக பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட நபர்களின் கடமையாகும்.

(ii) பொது வர்த்தக சந்தைக்கு வருபவர்களினால் அகற்றப்படும் கழிவுபொருட்களை (I) ஆம் பந்தியின் கீழ் வகைப்படுத்தப்படும் கழிவுப்பொருட்கள் இலகுவாக அப்புறப்படுத்துவதற்கு சிறிய அளவிலான பாத்திரங்களை பொது வர்த்தகச் சந்தையில் உகந்த இடத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தல் தலைவர் அவர்களின் கடமையாவதுடன் அப்பாத்திரங்களை உகந்த காலத்திலேயே (I) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை உரிய தொட்டிகளுக்கு அல்லது பாத்திரங்களுக்கு அல்லது தாங்கிகளுக்கு போடுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் ;

(iii) பொது வர்த்தகச் சந்தையில் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் ஏதேனுமொரு பாத்திரம் தொட்டி அல்லது தாங்கி போன்றவற்றில் வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் தவிர ஏனைய வகையிலான கழிவுப்பொருட்களை அப்பாத்திரத்தில் அல்லது தொட்டியில் அல்லது தாங்கியில் போடுதல் எந்தவொரு நபராலும் செய்யக்கூடாது ;

(iv) 2 ஆம் சரத்தின் xxivஆம் பந்தியில் நியமங்களின் கீழ் உயிரினக் கழிவுப்பொருட்கள் போடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள தொட்டி அல்லது பாத்திரம் அல்லது தாங்கி போன்றவற்றில் கழிவுப்பொருட்களை போடும் சந்தர்ப்பத்தில் அல்லது கழிவுப்பொருட்களை அதில் இருந்து வெளியில் எடுக்கும் சந்தர்ப்பத்தை தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பத்திலும் அதன் தொட்டிகள் அல்லது பாத்திரங்கள் அல்லது தாங்கிகள் போன்றவற்றின் மூடிகளை நன்றாக மூடப்பட்டிருத்தல் வேண்டும் ;

4. (i) எந்தவொரு பொது வர்த்தகச் சந்தையிலும் வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் என்பது :-

(அ) கடைகளாகும் போது அக்கடைகளின் பிற்புற சுவர்களிலிருந்து 2 ஆம் சரத்தில் (IV) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு பொருத்தப்பட்டுள்ள வரையரையிலான பிரிவும் ;

(ஆ) வியாபார பரண்கள் எனும் போது - அவ் வியாபார பரண்களில் மேற்புற சதுர அளவும் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு இருப்பதற்கு உள்ள அவ் வியாபார பரண்களின் பிற்புற அளவும் கருத வேண்டும் ;

(ii) விற்பனைக்காக பொது வர்த்தகச் சந்தைக்கு கொண்டுவரப்படும் எந்தவொரு பொருட்களும் அல்லது வியாபாரத்திற்காக பயன்படுத்தும் உபகரணங்களும் அல்லது ஏனைய எந்தபொரு பொருட்களும் வர்த்தக சந்தைக்கு எடுத்துவரும் சந்தர்ப்பத்தில் அல்லது வெளியில் கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தை தவிர ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு விறாந்தைகளை தவிர மேடைகளில் அல்லது தடுத்து வைத்தல் அல்லது அப்படி செய்வதற்கு இடமளிக்காமல் இருத்தல் வேண்டும் ;

(iii) பொது வர்த்தகச் சந்தையில் எந்தவொரு விறாந்தை மற்றும் மேடைகளின் மேல் அல்லது எந்தவொரு வகையிலுமான வியாபாரமும் செய்யக்கூடாது என்பதுடன், அவ் விறாந்தையில் அல்லது மேடைகளில் செல்லும் எந்தவொரு நபருக்கும் தடை ஏற்படும் வகையிலும் செயல்படக் கூடாது.

பொது வர்த்தகச் சந்தையில் அமைந்துள்ள ஹோட்டல், சாப்பாட்டுக் கடை, உணவகம் அல்லது தேநீர், அல்லது கோப்பி கடை தவிர ஏனைய எந்தவொரு இடத்திலும் எந்தவொரு நபரினாலும் சமையலில் ஈடுபடக்கூடாது.

பிரதேச சபைக்கு உரிய எந்தவொரு பொது வர்த்தகச் சந்தையிலும் -

(i) உட்புறத்தில் ஒழுக்கக்கேடாக நடந்துகொள்ளல் அல்லது சண்டைபோடுதல் அல்லது தகாத சொற்களில் பேசுதல் அல்லது பிச்சை எடுத்தல் ;

(ii) நாளாந்தம் வேலைகள் நிறைவுபெற்ற பின்னர் வியாபார நிலையத்தை மூடிய பின்னர் அச்சூழலில் இருத்தல் ;

(iii) எந்தவொரு கட்டிடங்களுக்கும், நிர்மாணிப்புகளுக்கு பொருத்தப்பட்டுள்ளவற்றிற்கும் அல்லது அழகிற்காக வளர்க்கப்பட்டுள்ள எந்தவொரு பூச்செடிகளுக்கும் அல்லது பெயர் பலகைகளுக்கும் அல்லது ஏனைய பொருட்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு அல்லது நட்டம் ஏற்படுத்துவதற்கு அல்லது விகாரப்படுத்துவற்கு;

(iv) பாவனைக்கான நீரை அசுத்தம் செய்தல் அல்லது விரயமாக்குதல் அல்லது விரயமாவதற்கு இடமளித்தல் அல்லது ஏதேனுமொரு வகையில் விரயமாக்கல் அல்லது அந் நீரில் நீராடுதல் அல்லது ஆடைகள் அல்லது மிருகங்களை கழுவுதல் அல்லது பழங்கள் அல்லது மரக்கறிகள் கழுவுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை தவிர ஏனைய ஏதேனுமொரு இடத்திலும் மரக்கறிகளை அல்லது பழங்களை கழுவுதல் ;

(v) தலைவரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் தவிர தனது கடையின் விளம்பர பலகை தவிர ஏனைய எந்தவொரு விளம்பரங்களையும் பொருத்துதல், பதாகை அல்லது ஏனைய ஏதேனுமொரு வகையிலான விளம்பரங்களை செய்தல் ;

(vi) மின் இணைப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பிரதான சாவிப்பலகை அருகில் செல்வதற்கு தடை ஏற்படும் வகையில் பொருட்களை வைத்தல் அல்லது பிரதான சாவிபலகைக்கு பாதிப்பை ஏற்படுத்தல் ;

(vii) மின் இணைப்பினை பெற்றுக்கொடுப்பதற்காக கட்டிடத்திற்குள் இலுக்கப்பட்டுள்ள பிரதான மின் கம்பிகள் மூலம் அல்லது ஏனைய எந்தவொரு மின் கம்பிகளின் மூலமாக வஞ்சனையாக அல்லது அனுமதியின்றி மின் இணைப்புகளை பெற்றுக்கொள்ளுதல் ;

(viii)நீர் இணைப்பினை வழங்குவதற்காக கட்டிடத்தினூடான பிரதான நீர் குழாய்களில் அல்லது ஏனைய ஏதேனுமொரு நீர் குழாய்களில் வஞ்சனையாக அல்லது அனுமதியின்றி நீர் இணைப்பினை பெற்றுக்கொள்ளுதல் ;

(ix) கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்களுக்கு அருகில் செல்வதற்கு தடை ஏற்படும் வகையில் பொருட்களை வைத்தல் அல்லது அவ் உபகரணங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் ;

(x) ஒவ்வொரு பணிகளுக்காக ஒதுக்கிய இடம் தவிர வேறு ஏதேனுமொரு வகையிலான மரக்கறிகள், இறைச்சிகள் அல்லது மீன்கள் விற்பனை செய்வதற்கு அல்லது காட்சிக்கு வைப்பதற்கு அல்லது அப்படி செய்வதற்கு ஏற்பாடு செய்தல் ;

(xi) சூழலில் மிதி வண்டிகளை அல்லது மோட்டார் வண்டிகளை கொண்டு வருதல் அல்லது அவ்வாறு கொண்டு வருவதற்கு இடமளித்தல் ;

(xii) எந்தவொரு கடைகளிலிருந்தும் அகற்றப்படும் கழிவுப்பொருட்கள் மூன்றாவது துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு அமைவாக பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகள் அல்லது தாங்கிகள் தவிர பொது வர்த்தக சந்தைக்கு உட்பிரவேசிக்கும் எந்தவொரு இடத்திலும் போடுதல் ;

எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

7. (i) ஏதேனுமொரு தொற்று நோய் அல்லது பரவும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்து அல்லது சமீபத்தில் அப்படியான நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்த எவரேனுமொரு நபர் அல்லது அப்படியான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் எவரேனுமொருவருக்கு சமீபத்தில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனுமொரு நபர் அந்நோய் காவிகளுக்கான காலம் கடந்திருந்தாலே தவிர பொது வர்த்தகச் சந்தையில் ஏதேனுமொரு வகையில் வியாபாரத்தில் அல்லது வியாபாரம் செய்பவர்களுக்கு உதவி செய்யும் ரீதியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடச் செய்தல் அல்லது ஏதேனும் பணிகளை செய்வதற்கு இடமளித்தல் கூடாது.

(ii) நன்றாக கழுவி சுத்தப்படுத்திய ஆடைகள் அணிந்திருந்தால் தவிர எந்தவொரு நபரினாலும் பொது வர்த்தகச் சந்தையில் ஏதேனுமொரு வகையில் வியாபாரம் செய்தல் அல்லது வியாபாரம் செய்வதற்கு இடமளிக்க கூடாது.

8. அனைத்து வர்த்தகச் சந்தையில் ஏதேனும் கடைகள் அல்லது வியாபார பரண்களை பயன்படுத்தும் அல்லது உபயோகப்படுத்தும் அனைவரும் நாளாந்தம் வேலைகள் ஆரம்பிக்கும் போதும் மற்றும் வேலைகள் நிறைவு பெறும் போதும் தேவையென்றால் அதற்கிடையிலான சந்தர்ப்பத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் கடைகளின் உட்புறத்திலும் மற்றும் அதன் முன்னால் உள்ள விறாந்தை மற்றும் கடைக்கு முன்னால் உள்ள மேடை இல்லாவிட்டால் வியாபார பரண்கள் மீது மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் கூட்டி துப்பரவு செய்தல் மற்றும் கூட்டிய பிறகு சேகரிக்கப்படும் குப்பைகளை மூன்றாம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில் அல்லது தாங்கியில் போடுதல் அல்லது போடுவதற்கு ஏற்பாடு செய்தல் அனைத்து கடை வாடகையாளர்களினதும் மற்றும் வியாபார பரண்களை பயன்படுத்துவோர்களின் அல்லது உபயோகிப்பவர்களின் கடமையாகும்.

9. பொது வர்த்தகச் சந்தையில் மரக்கறிகள், பழங்கள், இறைச்சிகள், மீன்கள் அல்லது ஏனைய உணவுகள் அல்லது குடிபான வகைகள் விற்பனை செய்வதற்கு அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைக்கும் அனைத்து கடைகளும் மற்றும் வியாபார பரண்களும் மற்றும் அனைத்து ஹோட்டல்கள், சாப்பாடு கடைகள், உணவு மண்டபம் உட்பட அனைத்து தேநீர் அல்லது கோப்பி கடைகள் நாளாந்தம் வேலை நிறைவின் போது அவ்வியாபார நிலையங்களில் பொருட்கள் விற்பதற்காக காட்சிக்கு வைக்கப்படும் அனைத்து கடைகளும், மேசை, வாங்கு, பொருட்கள் வைக்கும் பலகை, அலுமாரிகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் கழுவி அல்லது சுரண்டி சுத்தம் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் நிலையத்தின் வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்களின் கடமையாகும்.

10. ஏதேனுமொரு வர்த்தக சந்தையில் உள்ள கடை அல்லது வியாபார பரண்களை நீக்கப்பட வேண்டும். எந்த வகையிலான பொருட்கள் அல்லது பொருட்கள் விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்த வகையிலான பொருட்கள் அல்லது பொருட்களை தவிர ஏனைய ஏதேனுமொரு விதத்தில் பொருட்களை அல்லது பொருட்களை விற்பனை செய்வதற்கு அல்லது விற்பதற்காக காட்சிக்கு வைத்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

11. வர்த்தக சந்தையில் கடைகளுக்கு புறம்பாக நிர்மாணிக்கப்படும் எந்தவொரு வியாபார பரண்களும் நாளாந்தம் வேலை நிறைவின் போது பொருட்கள் அல்லது பண்டங்களை அல்லது கழிவு பொருட்களை சேர்த்து வைத்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

12. மிருககொலை கட்டளைச் சட்டத்தின் நியமங்களுக்கு கீழ் முறையான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள அல்லது மாடு வெட்டும் இடத்தில் வெட்டப்படும் எந்தவொரு மிருகங்களின் இறைச்சிகளும் தவிர பொது சந்தையில் இறைச்சி விற்பனை நிலையங்களில் விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்வதற்காக காட்சிக்கு வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

13. எந்தவொரு மிருககொலை நடைபெறும் இடத்தினுள்ளும் இறைச்சிக்காக மிருகங்கள் வெட்டுதலை தடை செய்யப்பட்டு அல்லது மிருக கொலை கட்டளைச் சட்டத்தில் 17 ஆம் சரத்தின் அதிகாரங்களின் பிரகாரம் உரிய அதிகார சபைகளின் நியமங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், பொதுச் சந்தையின் உட்புறத்தில் நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு இறைச்சி கடையும் வியாபாரத்திற்காக இறைச்சிகளை காட்சிக்கு வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்தக் கூடாது.

14. எந்தவொரு நபரினாலும் பொதுச் சந்தை சுற்றாடலின் உட்புறத்தில் நாய்கள் அல்லது பூனைகள் அல்லது ஏனைய எந்தவொரு மிருகங்கள் அல்லது பறவைகள் கொண்டு வருதல் அல்லது கொண்டு வருவதற்கு இடமளித்தல் கூடாது. இந் நியமங்கள் ஏதாவதொரு பரிசோதனைகளுக்காக ஒரு பொலிசாரினால் பொலிஸ் உத்தியோகபூர்வ நாய் பொது சந்தைக்குள் கொண்டு வருவதை தடுக்கும் ஒரு நியதி என கருதப்படல் கூடாது.

15. வர்த்தகச் சந்தையில் வியாபாரம் நிறைவு பெற்றதன் பின்னர் பொது வர்த்தகச் சந்தையை பூரணமாக மூடும் சந்தர்ப்பத்தில் மற்றும் பொது சந்தையில் ஏதாவதொரு கடையையும் மூடிவிட்டு வெளியில் செல்லும் அனைத்து சந்தர்ப்பத்திலும் அக்கடை அறைகளின் அனைத்து மின் விளக்குகளையும், மின் விசிறிகள் மற்றும் ஏனைய மின் உபகரணங்கள் செயழிலக்கச் செய்ய வேண்டியதுடன் எண்ணெய் விளக்குகளை அனைப்பதற்கு ஏற்பாடு செய்தல் குத்தகைக்காரரின் கடமையாகும். உணவு அல்லது குடிபானங்களை நீண்டகாலம் வைத்து பாதுகாப்பதற்காக உள்ள குளிரூட்டி அல்லது மேலதிகமான குளிரூட்டி இதற்கு கீழ் உள்ளடக்கப்படுதல் ஆகாது. மேலும் பொது சந்தையின் பாதுகாப்பிற்காக அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடிய ஏதாவதொரு வகையில் தீப் பந்தங்களை கொழுத்துதல் அல்லது கொழுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது பொது சந்தைச் சூழலிற்குள் அல்லது நிலையத்தில் வெடிகளை கொழுத்துதல் அல்லது கொழுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

16. ஏதாவதொரு வர்த்தகச் சந்தை பூமிக்கு வெளியில் உள்ள இடத்தில் இருக்கும் எந்தவொரு கழிவுப்பொருட்களும் அப்பொது வர்த்தகச் சந்தையில் உருவாக்ககூடிய கழிவுப் பொருட்களை போடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில், பாத்திரங்களில், அல்லது தாங்கியில் போடுதல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

17. பொது வர்த்தகச் சந்தையில் உள்ள அனைத்து மலசல கூடங்களும் குறைந்தது ஒரு தினத்திற்கு மூன்று முறையாவது கிருமிநாசினிகளை பயன்படுத்தி சுத்தம் செய்வதற்கும் நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்து வடிகால்களையும் குறைந்தது ஒரு தினத்திற்கு இரண்டு முறை கழுவி சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் தலைவர் அவர்களின் கடமையாகும்.

18. 2 ஆம் சரத்தின் XXIV ஆம் பந்தியின் நியமங்களில் உள்ள வகையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து தொட்டிகள், பாத்திரங்கள் அல்லது தாங்கிகளில் சேர்க்கப்படும் கழிவுகளை குறைந்தது ஒரு தினத்திற்கு ஒரு முறை அல்லது தேவைப்படுமென்றால் அதற்கு கூடுதலான தடவைகளில் அவ் இடத்தில் இருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் தலைவரின் கடமையாகும். இக் கழிவுப்பொருட்கள் அவ் இடத்தில் இருந்து அகற்றும் போது கழிவுப் பொருட்களை ஏற்றப்பட்ட பகுதியானது முழுமையாக மூடப்பட்ட வாகனமொன்றில் ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

19. மரக்கறிகள் அல்லது பழங்கள் கழுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சேரும் மண் அல்லது மணல் ஏனைய பொருட்களை குறைந்தது ஒரு தினத்திற்கு ஒரு முறையாவது அகற்றுவதற்கும் அவ்விடத்தில் நீர் வழிந்தோடும் போது தடைகள் ஏற்படா வண்ணம் இருப்பதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டியது தலைவர் அவர்களின் கடமையாகும்.

20. பொது வர்த்தகச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு கருவிகளின் செயல்முறைகள் சிறந்த முறையில் இருக்கின்றதா என்பதை குறைந்தது ஆறு மாத்திற்கு ஒரு முறையாவது பரிசோதித்து பார்ப்பதற்கும் செயலிழந்துள்ள தீயணைப்பு கருவிகளுக்கு பதிலாக புதிய கருவிகளை பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்தல் தலைவர் அவர்களின் கடமையாகும்.

21. பொது வர்த்தகச் சந்தையில் -

(அ) கடைகளின் உட்புற சுவரை தவிர மிகுதி சுவர்கள், அனைத்து வியாபார பரண்களும் சீமெந்து பூசப்பட்டு மென்மைபடுத்திய பிரிவு, முழாம் பூசப்பட்ட இரும்பு கம்பிகளினாலான நிர்மானிப்புகள் மற்றும் கடைகளின் உட்புறத்தில் உள்ள உட்கூரை தவிர்ந்த ஏனைய மிகுதி பிரிவுகளை குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறை வர்ணம் பூசுவதற்கு ஏற்பாடு செய்தல் தலைவர் அவர்களின் கடமையாகும் ;

(ஆ) கடைகளின் உட்புற சுவர்களை தவிர மிகுதி சுவர், கடைகளின் உட்புறத்தில் முழாம் பூசப்பட்ட இரும்பு கம்பிகளினால் அமைக்கப்பட்ட நிர்மானிப்புகள் மற்றும் கடைகள் உட்புறத்தில் உள்ள உட்கூரை குறைந்த பட்சம் ஒருவருடத்திற்கு ஒரு முறையாவது வர்ணம் பூசுதல் அக்கடை குத்தகையாளர்களின் கடமையாகும்.

*22.* பொது சந்தையில் ஏதாவது வியாபார பரண்களை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு 27 ஆம் சரத்தின் கீழ் ரசிது பெற்றுக்கொண்ட அல்லது ஒரு நபரினால் ரசிதை இன்னொருவருக்கு கைமாற்றல் அல்லது அவ் ரசிது வழங்கப்பட்ட இடத்திலன்றி வேறு ஏதாவதொரு இடத்தில் வியாபாரம் செய்யக்கூடாததுடன் அல்லது ஒரு நபரினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றது என தலைவர் அவர்கள் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் அவர் உத்தேசிக்கப்பட்ட இடத்தில் வியாபாரத்தில் ஈடுபடுவதை இல்லாவிட்டால் அத்தினத்தின் வியாபாரத்தை நிறுத்துவதற்கு, சந்தையில் இருந்து அகற்றுவதற்கு அல்லது அவரிற்கு வழங்கப்பட்ட ரசிதை இரத்துச் செய்வற்கு தலைவர் அவர்களுக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

*23.* ஏதாவதொரு பொது சந்தையின் கடைகளை குத்தகைக்கு பெற்ற எந்தவொரு நபரினாலும் அல்லது ஏதாவதொரு வியாபார பரண்களை பாவனைக்கு அல்லது உபயோகத்திற்காக ரசிது ஒன்றை பெற்ற ஏதாவதொரு நபரினால் தன்னுடைய வியாபார அலுவல்களுக்கு ஒதுக்கிக் கொண்ட அக்கடைகள் அல்லது வியாபார பரண்களில் இடவசதி இல்லாவிட்டால் அதில் ஏதாவது ஒரு பிரிவு, ஏதாவதொரு பண்டங்கள் அல்லது பொருட்கள் வியாபாரம் செய்வதற்கு அல்லது வியாபாரத்திற்காக காட்சிக்கு வைத்தல் அல்லது ஏனைய ஏதாவதொரு பணிகளுக்கு ஏனைய ஒரு நபரிற்கு இடமாளிக்காமல் இருத்தல் வேண்டும்.

*24.* பிரதேச சபைகளில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தால் தவிர ஏதாவதொரு நபரினால் பொது சந்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைகளை மாற்றம் செய்வதற்கு அல்லது அதன் திட்ட வரைவிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு நிர்மாணிப்புக்கும் அல்லது பொருத்தப்பட்டுள்ளவற்றிற்கு மாற்றத்தை ஏற்படுத்தல் அல்லது மறைப்பு ஏற்படுத்தல் கூடாது.

*25.* பிரதேச சபையினால் முன்னர் தீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் தவிர எந்தவொரு நபரினாலும் பொதுச் சந்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைகளை மாற்றம் செய்வதற்கு அல்லது அதன் திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு நிர்மாணிப்புக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவொரு நிர்மானிப்புகளும் அல்லது பொருத்தப்பட்டுள்ளவற்றிற்கு மாற்றம் ஏற்படுத்தல் மற்றும் சந்தையினுல் ஏதாவதொரு இடத்தில் வியாபார பரண்களை நிர்மாணித்தல் மறைப்பு ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும்.

*26.* பிரதேச சபையினால் நடாத்தப்பட்டு வரும் ஏதாவது ஒரு பொதுச் சந்தையை திறக்கும் தினங்கள் நேரங்கள் காலத்திற்கு காலம் பிரதேச சபையினால் தீர்மானிக்க முடியும். பிரதேச சபையினால் தீர்மானித்ததன்படி பொதுச் சந்தையை திறந்து வைக்கும் தினம் மற்றும் நேரம் எப்போது என்பதை மும்மொழிகளிலும் விளம்பரம் அல்லது அறிவித்தல் தெரியும் வகையில் பொதுச் சந்தையின் உட்பிரவேசிக்கும் கதவிற்கு அருகில் காட்சிக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்தல் தலைவர் அவர்களின் கடமையாகும்.

*27.* (i) பொது வர்த்தகச் சந்தையில் உள்ள கடைகளுக்கு புறம்பாக உள்ள பிரிவில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு வியாபார பரண்களை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு தேவையான அனைத்து நபர்களும் இப்பிரிவின் துணைச் சட்டத்தின் நியமங்களின் கீழ் பிரதேச சபையின் அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்டு செல்லுபடியாகும் ரசிதினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) (i) ஆம் பந்தியின் நியமங்களின் கீழ் வழங்கப்படும் ரசிதுகளை இங்கு முதலாம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிபடிவத்தின் சாராம்சத்தின்படி தயாரிக்க வேண்டும்.

*28.* 27 ஆம் சரத்தின் நியமங்களின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் ரசிதினை வைத்திருக்கும் அல்லது அவரின் பணியாளர் அல்லது பிரதிநிதி என்றால் மற்றும் இப் பிரிவின் துணை யாப்பின் நியமங்களுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கும் என்றால் அன்றி பொது வர்த்தகச் சந்தையின் கட்டிடத்தில் உள்ள கடைகள் உள்ள பிரிவிற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள வியாபார பரண்களை உபயோகித்தல் மற்றும் பயன்படுத்தல் கூடாது.

*29.* 27 ஆம் பிரமாணத்தின் நியமங்களின் கீழ் பொதுச் சந்தை கட்டிடத்தில் கடைகள் உள்ள பிரிவிற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள சந்தையில் இதற்காக செலுத்த வேண்டிய கட்டணம் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் நிர்ணயிக்க முடியும். அவ்விதத்திலேயே அக்கட்டணத்தின் அளவை பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் மாற்றங்களை அல்லது திருத்தங்களை செய்ய முடியும்.

*30.* இப்பிரிவில் உள்ள துணை சட்டத்தின் நியமங்களின் கீழ் பிரதேச சபையுடன் கையொப்பம் இட்டு வாடகை ஒப்பந்தத்திற்கு முன்வரும் நபருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது பிரதிநிதிக்கு என்றால் இப்பிரிவில் உள்ள துணையாப்பு மற்றும் அக் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு இணங்குவதென்றால் அன்றி ஏதேனுமொரு கடையை அல்லது கடை அறையை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு முடியாது.

*31.* (i) பொதுச் சந்தை கட்டிடத்தில் இறைச்சி கடை அல்லாமல் எந்தவொரு கடைகளையும் பயன்படுத்துவதற்கு உபயோகத்திற்கு குத்தகையாளரை தெரிவு செய்து அக் கடைகளை தெரிவு செய்தல் குத்தகையாளருக்கு குத்தகைக்கு விடுவதற்கான காரியங்களின் விலை மனு கோரலின் மூலமாக நடாத்துவது பிரதேச சபையின் கடமையாகும்.

(ii) மேற்படி I ஆம் பந்தியின் கீழ் எந்தவொரு கடைகளும் குத்தகைக்கு கொடுப்பதற்காக விலை மனு கோரலின் போது அக் கடைகளுக்காக செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை தீர்மானித்தல் பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி செயல்பட வேண்டும்.

(iii) மேற்படி I ஆம் பந்தியின் கீழ் வாடகையாளரை தெரிவு செய்வதற்கு விலை மனுகோரும் சந்தர்ப்பத்தில் –

(அ) குத்தகையாளரின் சுயவிருப்பத்தின்படி குத்தகை ஒப்பந்தத்தை நிராகரித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அல்லது ;

(ஆ) இப்பிரிவின் துணைச்சட்டத்தின் நியமங்களை மீறுதல் அல்லது குத்தகை ஒப்பந்த நிபந்தனைகளை மீறல் காரணமாக குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்த அல்லது இரத்துச் செய்யப்பட்டதாக கருதும் சந்தர்ப்பங்களில் அல்லது

(இ) ஏதாவதொரு குத்தகையாளரின் மனைவி அல்லது பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் குத்தகையாளர் மரணமடையும் சந்தர்ப்பத்தில் ; அல்லது

(ஈ) புதிதாக சபையினால் பொது விற்பனை நிலையம் நிர்மாணித்திருக்கும் சந்தர்ப்பத்தில்.

கவனிக்க வேண்டியதுடன் 35 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு குத்தகையாளரினால் ஏதேனும் எதிர்வரும் வருடத்திற்காக அக் குத்தகை ஒப்பந்ததை அங்கீகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தால் அல்லது அச் செல்லுபடியாக்குவதை தெரிந்தே விட்டுவிட்டால் பிரதேச சபை மற்றும் அக் குத்தகையாளர் ஒத்துழைப்பு வழங்கி கையொப்பம் இட்ட குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது எனக் கருத வேண்டும்.

32. 31 ஆம் சரத்தின் நியமனங்களின் கீழ் விலைமனு கோரலின் மூலம் ஏதேனும் ஒரு கடையை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குத்தகையாளர், பிரதேச சபை உடன் ஒப்பந்தத்திற்கு உட்பட வேண்டும்.

33. 31 ஆம் துணைச் சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்ததோ இப்பிரிவின் துணை சட்டத்தின் அதிகாரத்திற்கு வரும் பிரதேச சபைக்கு உரிமையாக இருக்கும் ஏதேனுமொரு பொதுச் சந்தையின் ஒவ்வொரு கடை தொடர்பாகவும் பிரதேச சபையுடன் இறுதியில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகையாளர் அவ் அதிகாரத்திற்கு வரும் தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 31 ஆம் துணைச் சட்டத்தின் கீழ் அக்கடைகள் பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட குத்தகையாளர் என்ற ரீதியில் கருதுவது சட்டரீதியானதாகும். அப்படி மேலும் இத்துணைச்சட்டத்திற்கு உரிய குத்தகையாளர்களுக்கு இத் துணைச் சட்டத்தின் அதிகாரத்திற்கு வரும் தினத்திலிருந்து 03 மாதத்திற்கு உட்பட்ட 32 ஆம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் அடிப்படையில் புதிய குத்தகைய ஒப்பந்தங்களுக்கு உட்பட வேண்டும்.

34. (i) 32 மற்றும் 33 ஆம் துணைச் சட்டத்தின் நியமங்களின் கீழ், பிரதேச சபையுடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஒருவருட காலத்திற்காக மட்டும் செல்லுபடியாவதோடு அவ்வருடம் முடிவடைவதற்கு முன் அடுத்த வருடத்திற்காக பிரதேச சபையுடன் புதிய ஒப்பந்தத்திற்கு முன்வந்த பின்னர் மேலும் ஒரு வருட காலத்திற்காக அக்கடையின் வாடகை காலத்தை செல்லுபடியாக்கிக் கொண்டு அக்கடையை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகத்திற்கான குத்தகையாளருக்கு உரிமை இருக்க வேண்டும்.

(ii) மேற்படி I ஆம் பந்தியின் கீழ் ஏதேனுமொரு வாடகையாளரினால் தொடர் வருடத்திற்கான வாடகை காலத்தை அங்கீகரித்துக் கொண்டு அக்கடையை பயன்படுத்தும் அல்லது உபயோகிப்பதற்காக அடுத்துவரும் காலத்திற்காக செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டை அல்லது உள்ளூராட்சி சேவையில் மதிப்பீட்டாளர் ஒருவரின் மதிப்பீட்டின்படி தீர்மானித்தல் தலைவர் அவர்களின் கடமையாகும்.

(iii) ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அல்லது சபையினால் தீர்மானிக்கும் ஐந்து வருடத்திற்கு குறைந்த காலத்திற்கு ஒருமுறை மதிப்பீட்டு நிதியானது அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தம் செய்ய வேண்டும்.

35. ஏதேனும் கடைகளின் வாடகை காலம் முடிவடையும் தினத்திலிருந்து ஒரு மாத காலம் செல்லும் வரை 34 ஆம் துணைச் சட்டத்தின் கீழ் எதிர்வரும் வருடத்திற்கான வாடகை காலத்தை அங்கீகரித்திருந்தால் அன்றி எந்தவொரு வாடகையாளருக்கு பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கான உரிமை இருக்காது.

36. பொதுச் சந்தையில் ஏதேனுமொரு கடைகளை இடைக்கால வாடகைக்கு பெற்றுக்கொள்ளுதல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது. ஏதேனும் ஒரு நபரினால் ஒரு கடையை இடைக்கால வாடகை பெற்றதன் காரணமாக அக்கடை வாடகையாளருடன் பிரதேச சபையின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யப்படும் காரணத்தினால் மற்றும் அக்கடையை மீண்டும் பிரதேச சபைக்கு பொறுப்பேற்கும் காரணத்தினால் அவ் இடைக்கால குத்தகையாளருக்கு ஏற்படும் ஏதேனும் நட்டம் அல்லது பாதிப்பு போன்றன இடைக்கால குத்தகையாளருக்கு உரித்தாகும் என்பதுடன் பிரதேச சபை அல்லது தலைவர் அவர்கள் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அது தொடர்பான பொறுப்புகளுக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

37. பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் ஏதேனும் பொதுச் சந்தையில் ஏதேனுமொரு கடை குத்தகையாளரினால் அக்கடையை இடைக்கால குத்தகையாளருக்கும் வாடகைக்கு கொடுத்தலும் செய்யக்கூடாது என்பதுடன் ஏதேனும் குத்தகையாளரினால் கடைகளின் இடைக்கால வாடகைக்கு கொடுப்பதற்கு உள்ளடக்கப்பட்டுள்ளன என அல்லது இப்பிரிவின் துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு அல்லது அக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கு உரிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் அல்லது கடைகள் மீறப்பட்டுள்ளதாக திருப்தியடையும் வகையில் போதுமானதான காரணங்கள் உள்ளது என தலைவர் அவர்கள் கருதும் போது உரிய குத்தகையாளர் அது தொடர்பாக கடிதமூலமான காரணங்களை காட்டி அவ் இடைகால குத்தகை கொடுப்பதற்கு அல்லது கூலிக்கு கொடுத்தலை நிறுத்துமாறு என தெரிவிப்பதற்கான கடமை தலைவர் அவர்களினதாகும்.

38. 37 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அறிவித்தல் கிடைத்த எந்தவொரு நபரும் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பு அல்லது எதிர்ப்பை முன்வைப்பதற்கான காரணங்கள் தங்களிடம் இருப்பின் அவ் அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து 14 தினத்திற்குள், அவ் எதிர்ப்பு தொடர்பாக தனக்கு முன்வைப்பதற்கு இருக்கும் விடயங்களை கடிதமூலம் குறிப்பிட்டு தலைவர் அவர்களுக்கு மேன்முறையீடு ஒன்றை முன்வைப்பதற்கு குத்தகையாளருக்கு உரிமை உண்டு. அவ்வாறு அக்குத்தகையாளரினால் கடிதமூலம் எதிர்ப்பிற்கான காரணத்தை குறிப்பிட்டு அனுப்பும் கடிதம் தலைவர் அவர்களுக்கு கிடைத்த தினத்தில் இருந்து 14 தினங்களுக்குள் அவ் எதிர்ப்பு தொடர்பான பரிசீலனை நடாத்துதல் தலைவர் அவர்களின் கடமையாகும்.

39. 38 ஆம் சரத்தின் பிரகாரம் தலைவர் அவர்களினால் நடாத்தப்படும் எதிர்ப்பிற்கான பரிசீலனையில் 37 ஆம் துணைச் சட்டத்தின் நியமங்களின்படி தலைவர் அவர்களினால் அனுப்பப்பட்ட கடிதங்களில் உள்ள விடயங்கள் உண்மையானது என உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அவ் எதிர்ப்பினை பரிசோதனை செய்யப்படும் திகதி வரையிலும் அவ் இடைகாலத்திற்கான குத்தகைய விடுதலை அல்லது கூலிக்கு கொடுத்ததினை திருத்திக் கொள்வதற்கு குத்தகையாளர் தவறியுள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச சபையுடன் அக் குத்தகையாளர் கையொப்பம் இடப்பட்டுள்ள வாடகை ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என கருத வேண்டுமே தவிர அவ் எதிர்ப்பிற்கான பரிசோதனை நடாத்தப்பட்ட தினத்தில் இருந்து 7 தினங்களுக்குள் அக்கடையை பிரதேச சபைக்கு பொறுப்பேற்றல் தலைவர் அவர்களின் கடமையாகும். அதேபோன்று மீண்டும் பொறுப்பேற்கப்பட்ட எந்தவொரு கடையையும் மீண்டும் வாடகைக்கு கொடுக்கும் போது தலைவர் அவர்களினால் 31 ஆம் சரத்தின் நியமங்களை பின்பற்ற வேண்டும்.

40. 36 இருந்து 39 ஆம் சரத்தின் வரையிலான துணைச் சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதன்படி பிரதேச சபைக்கு உரிமையான எந்தவொரு கடைகளும் குத்தகையாளரின் கோரலில் அடிப்படையில் அல்லது குத்தகையாளர் மரணமடைந்த சந்தர்ப்பத்தில் அல்லது அந்த குத்தகை செலுத்துபவரின் வாழ்க்கை துணை அல்லது பிள்ளைக்கு அந்த கடைக்கான குத்தகை உரிமைகளை ஒப்படைப்பதற்கு அத் துணை சட்டத்தில் தடையாக இருக்கக் கூடாது. அப்படி பொறுப்பேற்ற நபர் சபையுடன் புதிய குத்தகை ஒப்பந்தங்களுக்கு இணங்க வேண்டும்.

40. (i) பிரதேச சபை மூலம் நடாத்தப்படுகின்ற ஏதாவது பொது வர்த்தகச் சந்தையில் கடை அறையொன்றை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு விலைமனு கோரலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து குத்தகையாளர்களும் –

(அ) குத்தகையாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான விலை மனுகோரும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபை மூலம் தீர்மானிக்கப்படும் பெறுமதியுடன் மற்றும் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியுமான வகையிலான பிணைத்தொகை ;

(ஆ) 32 ஆவது சரத்தின் அல்லது 33 ஆவது சரத்தின் நியமங்களின் கீழ் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகையின் மும்மடங்கிற்கு சமமான வைப்புத் தொகை ;

(இ) சபையின் தீர்மானத்திற்கு இணங்க ஒரே நேரத்தில் நிகழும் மீள செலுத்தப்படாத கட்டணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தின்படி விலை மனு கோருமிடத்து விலை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு முறையும் நிகழும் கட்டணங்களுக்கு உரிய தொகையை சபைக்கு செலுத்துதல் வேண்டும் ;

(ii) மேலே I (அ) மற்றும் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் அதே முறைப்படி பூரணப்படுத்தப்பட்டு இருந்தாலன்றி யாதேனும் ஒரு நபருக்கு பிரதேச சபை மூலம் நடாத்தப்படுகின்ற ஏதாவது பொது வர்த்தகச் சந்தை கடையொன்றினை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு இடமளித்தல் ஆகாது ;

(iii) பழைய வர்த்தகச் சந்தை கட்டிடத்தை அகற்றிவிட்டு அந்த இடத்திலேயே புதிய விற்பனை நிலையங்களை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பழைய வியாபார நிலையங்களின் குத்தகையாளர்கள் மூலம் புதிய வியாபார நிலையங்களில் உள்ள கடை அறைகளை கேட்குமிடத்து ஒரே முறையில் செலுத்தும் தொகை மற்றும் 31 (II) ஆம் சரத்தின் கீழ் குறிபிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை போன்று மும்மடங்கிற்கு சமமான தொகையை சபையினால் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு முன் சபைக்கு செலுத்தி 32 ஆவது சரத்தின்படி ஒப்பந்தத்திற்கு முன்வரும் சந்தர்ப்பத்தில் விலைமனு கோரப்படாமல் கடையின் குத்தகை உரிமையை ஒப்படைக்க முடியும் ;

(iv) 33 ஆவது சரத்திற்கு உரிய யாதேனுமொரு குத்தகையாளர் அத் துணைச்சட்டத்தின் பிரதேச சபையுடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட திகதியில் இருந்து 06 மாத காலம் செல்லும் முன்னர் இதனகத்து மேலே 1 (அ) மற்றும் (ஆ) பந்தியின் நியமங்களை பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி அம் மும்மாத காலங்கள் முடிவடைந்த பின் அக்கடை அறையை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு சட்டரீதியாக முடியாமல் போய்விடும்.

42. (i) பொது வர்த்தகச் சந்தையில் ஏதாவதொரு கடைக்காக குத்தகையாளரினால் பிரதேச சபைக்கு செலுத்தவேண்டிய மாதாந்த குத்தகை செலுத்த வேண்டிய திகதி அந்த கடை வாடகைக்கு கொடுப்பதற்கு உரிய ஒப்பந்தத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் தவிர அத்தினத்திற்குள் அல்லது அத்தினத்திற்கு முன் அந்த குத்தகையை பிரதேச சபைக்கு செலுத்துதல் குத்தகை செலுத்துபவர்களின் கடமையாகும்.

(ii) எந்தவொரு குத்தகையாளரின் மூலமும் 42 (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முறையிலே கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இணக்கம் தெரிவித்த திகதி அல்லது அதன் முன் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு தவறுமிடத்து குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து செலுத்தப்படவிருக்கின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் பிரிவிற்காக குறிப்பிடப்பட்ட மாதத்திற்கும் அல்லது அதன் பிரிவிற்காக குறிப்பிடப்பட்ட மாதாந்த கூலியன் 10% த்தை தாமத கட்டணமாக செலுத்துவதற்கு குத்தகை செலுத்துபவர் கீழ்படிய வேண்டும் என்பதுடன் தவிர இந்த நியமங்கள் சம்பந்தமுடைய ஒப்பந்தத்திலே உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஏதேனுமொரு குத்தகை செலுத்துபவர் மூலம் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டியிருக்கின்ற மாதாந்த குத்தகை செலுத்தப்படாமல் இருத்தல் மற்றும் அதன் மிகுதி குத்தகைமூன்று மாதத்திற்கு மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் இங்கு (iv) பந்தி மற்றும் (v) பந்தியிலே குறிப்பிடப்பட்டுள்ள தீய விளைவுகள் குறிப்பிடப்பட்டு அந்த மிகுதி தொகை மற்றும் (ii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாமத கட்டணத்தை செலுத்துமாறு குத்தகை செலுத்துபவருக்கு கடிதமூலம் அறிவுறுத்தல் வழங்குவது செயலாளரின் கடமையாகும். அதன்படி இந்த அறிவுறுத்தலின்படி மிகுதி தொகை மற்றும் தாமத கட்டணத்தை செலுத்த மேலும் தவறும் பட்சத்தில் கடையை முத்திரையிட்டு கடைக்குள் குத்தகையாளருக்கு சொந்தமான யாதேனுமொரு சொத்தை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எதிர்வரும் தினங்களில் எந்த தினம் என்பதனை அந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) மேலே III ஆம் பந்தியின் கீழ் உள்ள அறிவுறுத்தலொன்று கிடைத்தவுடன் அல்லது குத்தகை செலுத்துபவரின் மூலம் தனக்கு அந்த அறிவித்தல் கிடைத்த திகதியில் இருந்து 7 நாட்களுக்குள் அந்த மிகுதி நிலுவை குத்தகை தொகையும் தாமத கட்டணத்தையும் பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு தவறுமிடத்து குறிப்பிட்ட கடைக்கான முத்திரையிடுதல் செயலாளரின் கடமையாகும் ;

(v) மேலே IV ஆம் பந்தியின் நியமங்களின் கீழே செயல்பட்டு ஒரு தினம் காலம் கடந்த பின்னால் மற்றும் 7 தினங்கள் காலதாமதமாகும் முன் குறிப்பிடப்பட்ட அந்த குத்தகை நிலுவை செலுத்துபவர் அல்லது அவரின் ஆவணத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் வேறு யாரேனும் ஒரு பிரதிநிதியொருவர் அந்த இடத்திற்கு சமுகமளித்திருந்தால் அவர் முன்னிலையிலே குத்தகை செலுத்துபவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கவில்லை என்றால் பிரதேச சபையின் வேறு யாரேனும் உத்தியோகத்தர்கள் இருவர் முன்னிலையில் அந்த கடை அறையின் கதவுகளுக்கு அல்லது கதவுகளுக்கு வைக்கப்பட்டுள்ள முத்திரையை உடைத்து கதவுகளை திறந்து அந்த கடைகள் உள்ளே இருக்கின்ற குத்தகை செலுத்துபவருக்கு சொந்தமான யாதேனும் சொத்தை பிரசித்தமாக விற்பனை செய்து அதில் குறிப்பிடப்பட்ட குத்தகை கட்டணம் மற்றும் கடை அறையை முத்திரையிடல் மற்றும் குத்தகை செலுத்துபவருக்கு சொந்தமான யாதேனும் சொத்தை விற்பனை செய்வதற்கு விரயமாகிய தொகையை அறவிட்டுக் கொண்டு பிரதேச சபையின் நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு செயலாளருக்கு உரிமை உண்டு என்பதுடன் அப்படி செய்வது சட்ட ரீதியானதாகும் ;

(vi) மேலே IV ஆம் பந்தி மற்றும் V பந்தியில் எது சம்பந்தமாக இருந்ததோ அப்பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கு தயாரான நிலையில் உள்ள ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அல்லது அந்த சந்தர்ப்பங்கள் 2க்கும் இடையில் ஈடுபடும் ஏதாவது சந்தர்ப்பத்திலேயே அந்த நிலுவை குத்தகை தொகை தாமத கட்டணம் மற்றும் அப்படி செயல்படுத்துவதற்காக அத்தருணத்தில் பிரதேச சபைக்கு பொறுப்பேற்க ஏற்பட்ட செலவினங்களை பிரதேச சபைக்கு செலுத்துவதன் மூலம் IV ஆம் பந்தியில் அல்லது V ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு முறைப்படி நடவடிக்கை எடுப்பதை நிறுத்துவதற்கு குத்தகை செலுத்துபவருக்கு உரிமை இருக்க வேண்டும் என்பதுடன் குறித்த தொகையை பூரணமாக அறவிட்டதன்பின் செயல்படுத்துவதை தவிர்த்துக் கொள்வது செயலாளரின் செயலாகும் ;

(vii) இந்த சரத்தில் மேலே (III) ஆம் பந்தியில் இருந்து (VI) பந்தி வரையுள்ள ஏதாவது பந்தியின் கீழே அல்லது பந்திகள் அனைத்திற்கு கீழ் அல்லது செயல்பட்டதன் காரணமாக அக்கடையை குத்தகைக்கு கொடுப்பதற்கு உரிய ஒப்பந்தம் இரத்துச் செய்வதற்கு ஏற்பட்டுள்ளது என கருதக்கூடாது ;

(viii) மேலே (IV) ஆம் பந்தியில் எது குறிப்பிடப்பட்டு இருந்தாலும், ஏதாவதொரு குத்தகை செலுத்துபவரால் யாதேனும் கடை அறையொன்றிற்கு குத்தகை தொகை செலுத்த தவறும் காரணத்தினால் ஒரு வருடத்திற்கு மேல் (IV) ஆம் பந்தியிலே தீர்மானிக்கப்பட்டுள்ளதன்படி அந்த கடை அறையை முத்திரையிடுவதற்கான சந்தர்ப்பங்கள் இரண்டிற்கு பின்னும் மேலும் குத்தகை தொகை செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில், செயலாளர் மூலம் அது சம்பந்தமாக தெரிவித்து குத்தகையாளருக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட வேண்டியதுடன் அவ் அறிவித்தல் குத்தகை செலுத்துபவருக்கு கிடைத்த திகதியிலிருந்து பிரதேச சபையுடன் குத்தகையாளர் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

43. பொது வர்த்தச் சந்தையில் உள்ளே உள்ள அனைத்து கடைகளுக்காகவும் நீர் இணைப்புகளையும் மின்சார இணைப்புகளையும் பெற்றுக்கொண்ட அனைத்து குத்தகையாளரினாலும் பயன்படுத்தப்படும் நீர் அலகின் அளவிற்கும் மின்சார அலகின் அளவிற்கும் மாதாந்தம் செலுத்தவேண்டிய ரசிது கட்டணச் செலவுகளை அவ்குத்தகை செலுத்துபவர்களினால் பொறுப்பேற்க வேண்டும்.

44. பொது வர்த்தகச் சந்தை சுற்றாடலில் பொதுவான பாவனைக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஏதாவதொரு மின்சார சுற்றில் அல்லது பொது நீர் கராம்புகளில் ஏதேனுமொரு கடைகளுக்கு மின் விநியோகம் அல்லது நீர் விநியோகம் பெற்றுக்கொள்ளல் அல்லது அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு இடமளித்தல் கூடாது.

45. பொது வர்த்தகச் சந்தையில் கடைகள் தவிர வியாபார தட்டுகளை பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்கு தேவையான நபருக்கு ரசிது வழங்குவதற்கும் அவ் ரசிதிற்கான நிதி அறவிடுவதற்கும் செயலாளர் அவர்களின் அனுமதிபெற்ற ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். அதேபோன்று ஒரு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தினால் அவ் ரசிதை வழங்கி நாளாந்தம் கிடைக்கும் நிதியை அத்தினத்தில் பி. ப. 3.00 மணிக்கு முன் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வைப்பு செய்த பின்னர், பொது சந்தையில் ரசிது வழங்கப்படுவதனால் கிடைக்கும் நிதி என்றால் அதை அடுத்துவரும் வேலை நாளில் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு வைப்பிட வேண்டும்.

*46.* பொது வர்த்தகச் சந்தையில் கடைகளை தவிர எந்தவொரு நபரினாலும் வியாபார தட்டுகளை பயன்படுத்துவதற்காகவும் அல்லது உபயோகிப்பதற்காகவும் ரசிது வழங்குதல் மற்றும் அதற்கான நிதியை சேகரித்தல், 45 ஆம் சரத்தின் நியமங்களில் உள்ள விதத்தில் செயலாளரினால் அதிகாரம்பெற்ற ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்த முடியாதென்றால் அவ் அலுவல்களை பிரசித்தமான விலை மனு மூலம் தெரிவு செய்யப்படும் (இங்கு இதனகத்து "கட்டணம் சேகரிப்பவர்" என குறிப்பிடப்படும்) நபரிடம் ஒப்படைப்பதற்கான அதிகாரம் பிரதேச சபைக்கு இருக்க வேண்டும்.

*47. 46* ஆம் சரத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் கட்டணம் சேகரிப்பவருக்கு அப்பணிகளுக்காக ஒரு வருடத்திற்கு மாத்திரம் செல்லுபடியாவதோடு தொடர் வருடத்திற்காக மீண்டும் விலைமனு கோரலின் மூலம் கட்டணம் சேகரிப்பவரை தெரிவு செய்ய வேண்டும். அப்படியானால் கடந்த வருடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட ஏதேனுமொரு கட்டணம் சேகரிப்பவருக்கு தொடர்ச்சியான வருடத்திற்காக விலைமனுவிற்கான விண்ணப்பப்படிவம் முன்வைப்பதற்கும் மற்றும் அவ் விலைமனுவிற்கான விண்ணப்பப்பத்திரத்தை ஏற்றுக்கொள்வதற்கு சபை தீர்மானிக்கும் என்றால் அவர் தொடர்ச்சியான வருடங்களுக்காக கட்டணம் சேகரிப்பவர் ரீதியில் தெரிவு செய்வதற்கும் இத்துணைச் சட்டத்தின் நியமங்கள் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது என கருதக் கூடாது.

*48.* (i) 45 ஆம் சரத்தின் நியமங்களின் கீழ் கட்டணம் சேகரிப்பவர் தெரிவு செய்யப்பட்ட போது அவரினால் -

(அ) அத்தெரிவு செய்வதற்காக விலை மனு கோரும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி பெறுமதியான அல்லது மீண்டும் செலுத்த முடியுமான ஒரு பிணை வைப்பு நிதியை பிரதேச சபையில் வைப்பிடுவதற்கும் ;

(ஆ) அவ் ரசிதினை வழங்குதல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பாக பிரதேச சபையுடன் ஒப்பந்ததிற்கு முன்வருதலும் ;

(இ) மேற்படி I ஆம் பந்தியின் நியமங்களுக்கு கீழ் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்ட வருடாந்த கட்டணத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கு சமமான அல்லது அதற்கு மேலதிகமான வைப்பு நிதியை பிரதேச சபையில் வைப்பிடுவதற்கும் ;

(ii) மேலே I ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் அவ்வாறே பூர்த்தி செய்திருந்தாலே அன்றி எந்தவொரு நபருக்கும் பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற யாதேனுமொரு வர்த்தக நிலையத்தின் வியாபார பரணை பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு ரசிதுகளை விநியோகிப்பதற்கும் அல்லது அவற்றுக்காக பணம் சேகரிப்பதற்கும் அதிகாரம் இருத்தலாகாது.

*49. 29* ஆம் சரத்தின் நியமங்களின் கீழ் ஏதேனுமொரு பொது சந்தையில் வியாபார தட்டுகளை பயன்படுத்தல் அல்லது உபயோகிப்பதற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்களை விட அதிகமாக கட்டணம் அல்லது கட்டணம் அறவிடுதல் அல்லது கட்டணங்களை சேகரிப்பவரால் செய்யக்கூடாது.

*50. 48* ஆவது சரத்தின் I (ஆ) பந்தியின் நியமங்களின்படி ஏதேனுமொரு கட்டணம் சேகரிப்பவருடன் பிரதேச சபை கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் -

(அ) வியாபார தட்டின் பாவனைக்கு அல்லது உபயோகத்திற்கான ரசிதை வழங்க வேண்டிய வீதம் ;

(ஆ) அவ் ரசிதிற்கான நிதி அறவிடப்படும் விதம் மற்றும் அறவிட முடியுமான உச்ச நிதியின் அளவு ;

(இ) கட்டணம் அறவிடுபவரினால், உடன்பட்ட வருடத்திற்காக பிரதேச சபையில் செலுத்த வேண்டிய மொத்த நிதி ;

(ஈ) அவ் வருடத்திற்கான நிதியை 12 தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் அத் தவணையின் பெறுமதி ;

(உ) நிர்ணயிக்கப்பட்ட தினத்தின் மாதாந்த நிதியை செலுத்த தவறும் பட்சத்தில் அந்நிதியின் அளவில் 10% அளவிற்கு சமமான நிதியை தாமதம் கட்டணம் ரீதியில் பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு கட்டணம் அறவிடுபவரிற்கு ஆட்பட்டது ஆகும் ;

(ஊ) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் 3 மாத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் 51 ஆவது துணைச் சட்டத்தின் நியமங்களின்படி ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு கீழ்பட வேண்டும். மற்றும் அவ் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என செயலாளரின் கடிதங்களுடனான அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து அச் சந்தையில் வியாபார தட்டை பாவிப்பதற்கு அல்லது உபயோகிக்கும் நபருக்கு ரசிது வழங்குதல் மற்றும் அவ் ரசிதிற்காக நிதி அறவிடுவதற்கு கட்டணம் சேகரிப்பவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் முடிவுறும் என்பதும் ;

உடன்பட்ட ஒப்பந்தம் ரீதியில் உட்படுத்தல் பிரதேச சபையின் கடமையாகும்.

*51.* (i) கட்டணம் சேகரிப்பவரால் பிரதேச சபைக்கு மாதாந்தம் கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் மற்றும் அந்நிலுவை கட்டணமானது 3 மாத கட்டணங்களைவிட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிலுவை நிதி மற்றும் தாமத கட்டணமாக கட்டணம் சேரிப்பவருக்கு எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்றை கொடுத்தல் செயலாளர் அவர்களின கடமையாகும் .

(ii) மேற்படி (I) ஆம் பந்தியின் கீழ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஏதேனும் ஒரு நபரினால் தனக்கு அறிவித்தல் கிடைத்த 7 தினங்களுக்குள் அந் நிலுவை நிதியை மற்றும் தாமத கட்டணத்தை பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு இயலாவிட்டால், அவ் அறிவித்தல் அவருக்கு கிடைத்தத்தில் இருந்து 7 தினங்கள் கழிந்த தினத்தில் இருந்து அக்கட்டணம் சேகரிப்பவருடன் பிரதேச சபை கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதுடன் அவ் இரத்துச் செய்தலானது சட்டப்படியாகும். அப்படியானாலும் அவ் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது என கருதும் தினத்திலேயே அக் கட்டணம் சேகரிப்பவரிடம் அது தொடர்பாக கடிதமூலம் தெரிவித்தல் செயலாளர் அவர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

(iii) மேற்படி II ஆம் பந்தியின் நியமங்களுக்கு கீழ் ஏதேனுமொரு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட தினத்தின் பின்னர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவ் ஒப்பந்தத்தின் ஒரு சாராரான சார்ந்தவரான கட்டணம் சேகரிப்பவரினால் அப் பொது சந்தையில் வியாபார தட்டை பாவனை செய்தல் அல்லது உபயோகிப்பதற்கு எந்தவொரு நபருக்கும் ரசிது வழங்குதல் அல்லது அவ் ரசிதை வழங்கியதற்கான நிதியை சேகரிக்க கூடாது.

(iv) மேற்படி II ஆம் பந்தியின் நியமங்களின் கீழ் எந்தவொரு ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்யப்பட்ட தினத்தின் பின்னர் வரும் தினத்திலிருந்து அத் தினத்தின் பொது சந்தையில் வியாபார தட்டை பாவனை செய்வதற்கு அல்லது உபயோகிப்பதற்கு ரசிது வழங்குதல் மற்றும் அவ் ரசிதிற்காக நிதி சேரிப்பதற்கும் பிரதேச சபையின் ஏதேனுமொரு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரை கொண்டு அவ் அலுவல்களை மேலும் செய்து கொண்டு செல்வதற்கு முடியாது என செயலாளர் அவர்கள் எண்ணும் போது 46 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் செயல்படுத்துவதற்காக தன்னுடைய கருத்தினை தலைவரினூடாக பிரதேச சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி செயலாளர் கருத்து பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள 46 ஆம் துணை சட்டத்தின் பிரகாரம் செயல்படுவதற்கும் சபையினால் தீர்மானிக்க முடியும்.

(v) மேற்படி IV ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 46 ஆம் துணைச் சட்டத்தின் பிரகாரம் செயல்படுவதற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், அவ் விலைமனு அழைப்பின் பிரகாரம் விலைமனுவிற்கான விண்ணப்பப்படிவம் முன்வைப்பதற்கு இரத்துச் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியினரான கட்டணம் சேகரிப்பவருக்கு உரிமையை இருத்தலாகாது.

52. தலைவர், அவர்களினால் அவ் அலுவல்களுக்காக வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இருக்குமென்றால் ஏதேனுமொரு நபரினால் பிரதேச சபை பிரதேசத்திற்குள் தனியார் சந்தையொன்றை நடாத்தக்கூடாது.

53. (i) இப்பிரிவின் துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து அனுமதிப்பத்திரங்களும், ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டிருந்தால் அவ் அனுமதிபத்திரம் வழங்கப்பட்டது குறித்த வருடத்திற்காக, அவ் வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முடிவடைய வேண்டும்.

(ii) மேற்படி 52 ஆம் சரத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் கோரும் அனைத்து நபர்களும் பிரதேச சபையினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வருடாந்த அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டணங்களை சபைக்கு செலுத்த வேண்டும்.

54. 2 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சந்தைக்கு உரிய நியமங்கள் அவ் விதத்திலேயே பூரணப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி தலைவர் அவர்களினால் ஏதேனும் ஒரு தனியார் சந்தைக்கு அனுமதிப்பத்திரம் வழங்ககூடாது.

55. ஏதேனுமொரு தனியார் சந்தையினுள் கடைகள் மற்றும் வியாபார தட்டுகளில் வியாபாரத்தில் ஈடுபடும் அனைவரும் 57 ஆம் சரத்தின் பிரகாரங்களின் கீழ் உள்ள மாற்றங்களுடன் 2 ஆம் சரத்திலிருந்து 21 ஆம் சரத்து வரையான சரத்துக்களின் கட்டளைகளை பின்பற்ற வேண்டியதுடன் அந் நபரினால் அந் நியமங்களை பின்பற்றுவதை பொறுப்பு கூறவேண்டியது அச்சந்தையின் அனுமதிப்பத்திர பெறுநரின் கடமையாகும்.

56. 57 ஆம் சரத்தின் நியமங்களின் கீழ் உள்ள மாற்றங்களுடன் 2 முதல் 21 ஆம் சரத்துகளின் நியமங்களை பின்பற்றுதல் அனைத்து தனியார் சந்தையின் அனுமதிப்பத்திரமுள்ளவர்களின் கடமையாகும்.

57. ஏதேனும் தனியார் சந்தைக்கு உரிய 55 ஆம் சரத்தின் அலுவல்களுக்காக 2 முதல் 21 ஆம் சரத்து வரையான துணை சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள :-

(அ) ''பொது வர்த்தகச் சந்தை'' என்பதற்கு பதிலாக அத் தனியார் வர்த்தக சந்தையும் என்பதும் ;

(ஆ) ''குத்தகையாளர்'' என்பதற்கு பதிலாக தனியார் வர்த்தக சந்தையின் ஏதேனுமொரு கடையில் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர் அல்லது அவரின் பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் அக்கடைகளை நிர்வாகம் தொடர்பாக பொறுப்பாக உள்ள ஏதேனுமொரு நபரும் ;

(இ) ''தலைவர் அவர்கள்'' அல்லது ''பிரதேச சபை'' என்பதற்கு பதிலாக அத்தனியார் வர்த்தக சந்தையின் அனுமதிப்பத்திரம் பெறுபவர் என கருத வேண்டியதுடன் அவரின் பிரதிநிதி அல்லது அச்சந்தர்ப்பத்தில் தனியார் வர்த்தக சந்தையின் அனுமதிப்பத்திரமுள்ளவரின் பணிகள் அல்லது செயலுக்கு பொறுப்பாக உள்ள ஏதேனும் ஒரு நபரையும், கருத வேண்டும் ;

58. ஏதேனுமொரு தனியார் வர்த்தகச் சந்தையை திறந்து வைக்கும் தினங்களும் நேரங்களும் எவையென மும்மொழிகளிலும் அறிவித்தலின் மூலம் பிரசித்தமாக தெரியும் வகையில் அத்தனியார் வர்த்தக சந்தையின் உள்நுழையும் வாயிலுக்கு அருகில் காட்சிக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் அலுவலாக இருத்தல் வேண்டும்.

59. தலைவர் அவர்களினால் அதிகாரம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தரினால் பொது வர்த்தக சந்தைக்கு அல்லது தனியார் வர்த்தக சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்காக காட்சிக்கு வைத்துள்ள அல்லது களஞ்சியப்படுத்தியுள்ள ஏதேனுமொரு உணவு பொருட்களின் மாதிரிகளை, அங்கு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளுதல் சட்டபடியானதாக இருக்க வேண்டியதே தவிர ஏதேனுமொரு நபரினால் அக்கொள்வனவை எதிர்க்கும் அல்லது அதற்கு இடையூறு செய்யாமல் இருத்தல் வேண்டும்.

60. இப்பிரிவின் துணைச்சட்டத்தின் நியமங்களை பரிசோதனை செய்வதற்காக தலைவர் அவர்களினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் கிடைக்கும் ''உகந்த காலம்'' என்பதற்கு ஏதேனுமொரு வர்த்தக சந்தையில் அல்லது தனியார் வர்த்தக சந்தையில் வியாபாரங்களுக்காக திறந்து வைக்கப்படும் எந்தவெரு சந்தர்ப்படும் கருதப்படும்.

61. இப்பிரிவின் துணைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தனியார் வர்த்தக சந்தையை நடாத்தி செல்வதற்கான நிலையம் 57 ஆம் சரத்துடன் ஒப்புநோக்கி பார்க்க வேண்டிய ஏதேனுமொரு நியமத்திற்கு இணங்க நடைபெறுதல் முடிவுற்றால் அல்லது இத்துணைச் சட்டத்தின் ஏனைய ஏதேனும் துணைச் சட்டத்தின் நியமங்களுக்கு முரணாக இருக்கும் சந்தர்ப்பங்களில், உறுதியாக குறிப்பிடப்படும் தினத்திற்கு முன் அந் நிலையத்தில் அந் நியமத்துக்கு அல்லது நியமங்களுக்கு அமைவான நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெறுபவர் நிர்ணயிக்கப்படும் அறிவித்தலொன்று தலைவர் அவரினால் அவ் அனுமதிப்பத்திரம் பெறுபவரிடம் பொறுப்பளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

62. 61 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைத்த எந்தவொரு அனுமதிபத்திரம் பெறுபவரினால் விளம்பரத்தின் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன் அவ் விளம்பரத்தின் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதத்தில் செயல்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விடயங்களை கடிதமூலம் முன்வைத்துள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவ் விளம்பரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தலைவர் அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்விதத்தில் நீடிக்கப்படும் காலமானது 14 தினங்களுக்கு மேற்படக்கூடாது.

63. 62 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறுபவரினாலும் அவ் அறிவித்தல் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் இல்லாவிட்டால் நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன் அவ் அறிவித்தலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதத்தில் செயல்படுவது தவறும் சந்தர்ப்பத்தில் அந் நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தலைவர் அவர்களினால் இரத்துச் செய்யப்படுதல் சட்டபடியானதாக இருத்தல் வேண்டும்.

64. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தம் தேவைப்படும் பட்சத்தில் அன்றி இப்பிரிவின் துணைச் சட்டங்களில் -

(i) ''வாழ்க்கைத் துணை'' எனப்படுவது, ஏதேனுமொரு வாடகையாளரின் சட்டப்படியான மனைவி அல்லது கணவன் ;

(ii) ''பொது வர்த்தகச் சந்தை'' எனப்படுவது வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கடைகள் மற்றும் தத்தமது வீட்டு தோட்டத்தில் அல்லது வீட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் அல்லது பழங்கள் உட்பட ஏனைய பொருட்கள் அல்லது பண்டங்கள் விற்பனை செய்வதற்காக உண்டாக்கப்பட்டுள்ள பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படும் ஏதேனும் ஒரு இடம் என பொருள்படுவதுடன் ஏதேனுமொரு உற்பத்திகளை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கிடைக்கும் இடமும் இதற்கு உள்ளடங்க வேண்டும் ;

(iii) ''தனியார் வர்த்தகச் சந்தை'' எனப்படுவது பிரதேச சபை அல்லாத அதன் நிர்வாகத்திற்கு உட்படாத வேறு ஏதாவதொரு நபரினால் அல்லது நபர்களின் சபைகளினால் பொது வர்த்தக சந்தையின் அலுவல்களுக்கு சமமான அலுவல்களை நடாத்திச் செல்லப்படும் ஏதேனும் ஒரு இடம் என்று கருதப்படும் ;

(iv) ''பிரதம மதிப்பீட்டாளர்'' எனப்படுவது மதிப்பீட்டு திணைக்களத்தில் பிரதான மதிப்பீட்டாளர் என கருதப்படுவதுடன் பிரதேச சபைக்கு உட்படும் நிர்வாக மாவட்டத்திற்காக அத்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தரும் அதற்கு உள்ளடங்க வேண்டும் ;

(v) ''குத்தகையாளர்'' எனப்படுவது பிரதேச சபையுடன் எற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்துடன் ஏதேனுமொரு பொது வர்த்தக சந்தையில் ஒரு கடையை நடாத்திச் செல்லும் நபர் எனக் கருதப்பட வேண்டும் ;

(vi) ''வியாபார பரண்'' எனப்படுவது, ஏதேனும் பொது வர்த்தக சந்தை கடைகளில் ஒதுக்கப்பட்ட அப் பொது சந்தையினுள் தினந்தோறும் வியாபாரம் செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வாங்கு அல்லது பலகை அல்லது பெட்டி என கருதுவதுடன், அப்பொது வர்த்தக சந்தையின் பூமியானது கோடுகள் போட்டு அடையாளமிட்டு வியாபார அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு இடம் அதற்கு உள்ளடக்கப்பட வேண்டும் ;

**முதலாம் அட்டவணை**

*27 ஆம் சரத்து*

**(துண்டு பிரசுரம் புத்தக ரீதியில் தயாரித்துக்கொள்ள வேண்டும்)**

.................................... சபை ........................ பொது வர்த்தகச் சந்தை வியாபார பரண் ஒன்றை பாவித்தல் அல்லது பயன்படுத்துவதற்கான ரசிது

ரதிது பெறுநர்களின் பெயர் :.............................................................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :...................................................................................................................

ஒதுக்கப்பட்ட வியாபார பரண்/கோடிடப்பட்ட பகுதியின் இலக்கம் ::...........................................................................

வழங்கப்பட்ட காலம் : 20....................................... ஆந் திகதியிலிருந்து ...................... ஆந் திகதி வரை

ஒதுக்கப்பட்ட நாட்கள் : 01 தினம்/07 தினம்/ ஒரு மாதம்

அறவிடப்பட்ட கட்டணம் : ரூபா ..............................................................................................

வழங்கப்பட்ட திகதி :.....................................................................................................................

தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும். கட்டணம் சேகரிப்பவரின் கையொப்பம் -----.

**இரண்டாம் அட்டவணை**

*29 ஆம் சரத்து*

**பொது வர்த்தக சந்தையில் வியாபார பரண்களை பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்கு அறவிடப்படும் கட்டணங்கள்**

| வியாபார பரணின் தன்மை | 01 தினத்திற்கான கட்டணம் ரூபா | 07 தினத்திற்கான கட்டணம் ரூபா | மாதத்திற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| தரைக்கும் மேல் நிர்மாணிக்கப்பட்ட வியாபார பரண் | ................................... | .................................. | ................................... |
| தரையில் கோடிட்டு ஒதுக்கப்பட்ட பகுதி | ................................... | ................................... | .................................... |

**பகுதி 16**

**முடிவெட்டும் இடங்களும் பாபர் சாப்புகளும்**

1. பிரதேச சபை எல்லை பிரதேசத்தில் முடிவெட்டும் இடங்கள் மற்றும் முக அலங்காரங்கள் தொடர்பான சிகை அலங்கார நிலையங்களின் ஒழுங்குபடுத்தல் காணிப்பீடு, பரிசோதித்தல் மற்றும் நிர்வாகம் பற்றிய துணை யாப்பு.

2. தலைவரினால் சம்பந்தப்பட்ட கடமைகளுக்காக வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருப்பின். தவிர அல்லது நபரொருவரினால் பிரதேச சபை எல்லைக்குள் சிகை அலங்கார நிலையமொன்று அல்லது பாபர் நிலையமொன்றை அல்லது சலூன் ஒன்றை அல்லது அழகுபடுத்தும் நிலையமொன்றை நடாத்திச் செல்லல் தகாதவிடயமாகும்.

3. இத்துணை யாப்பின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தையும் ஏற்கனவே நிராகரிக்கப்படாவிடின் தவிர எந்த ஆண்டிற்காக வெளியிடப்பட்டதோ அவ் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவு பெறல் வேண்டும்.

4.(i) இப்பிரிவின் கீழ் II மற்றும் III ஆம் பந்திகளில் குறிப்பிடப்படும் விதிமுறைகளை பூர்த்தி செய்திருப்பின் தவிர தலைவரினால் ஏதேனும் சிகையலங்கார நிலையமொன்றை அல்லது பாபர் சாப்பு ஒன்றை, அல்லது சலூன் ஒன்றை அல்லது அழகுபடுத்தும் நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றை வெளியிடுதல் தகாது:-

(ii) முடிவெட்டும் இடமொன்றை அல்லது பாபர் சாப்பு ஒன்றை அல்லது சலூன் ஒன்று அல்லது அழகுபடுத்தும் நிலையமொனிறை நடாத்திச் செல்வதாக கருதப்படும் கட்டிடம் அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதியை.

(அ) உறுதியாக கட்டி முடித்திருக்க வேண்டியதுடன் ஒரு வாடிக்கையாளருக்காக சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்படும் இடத்தின் அளவு குறைந்தபட்சம் 1.5 சதுர மீற்றருக்கும் குறையாதவாறு ஒரே முறை சேவை வழங்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதியவிலாக இடவதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) சேவையை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்போடு வருகை தருகின்ற எவரேனும் வாடிக்கையாளர் ஒருவருக்கு சேவையை பெற்றுக்கொள்கின்ற வாடிக்கையாளரை நிலைப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து குறைந்த பட்சம் 1.5 மீற்றர் வித்தியாசத்தில் இலகுவாக அமர்ந்திருக்க கூடியவாறு இடவசதிகளை செய்து கொடுத்திருத்தல் வேண்டும் ;

(இ) நுழைவாயில் அருகில் உள்ள சுவர் உறுதியான பொருட்களினால் அமைந்திருக்க வேண்டியதுடன் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் கூரையை மரப் பலகைகளால் அல்லது வேறு உறுதியான பொருட்களால் அமைந்திருத்தல் வேண்டுமே தவிர குறைந்த பட்சம் தர மட்டத்திலிருந்து 2.25 மீற்றர் உயரத்தில் உட்கூரை இருத்தல் வேண்டும். உட்கூரை வெள்ளை நிற சாயம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(உ) உட்புற தரையை சீமெந்து மூலமாக அல்லது பீங்கான் கற்கள் (மாபில்) பதித்து தயாரித்திருக்க வேண்டியதோடு சுவரையும், தலையையும் இணைக்கின்ற இடம் வட்ட வடிவம் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) உட்புறமாக குளிரூட்டப்படாத கட்டிடமாயின் பூமியின் சதுர அளவில் பதினைந்தில் ஒன்றுக்கு குறையாத வகையில் காற்றுவரக்கூடிய வகையில் போதியளவிற்கு வெளிச்சம் இருத்தல் வேண்டும் ;

(எ) உட்புறம் குளிரூட்டப்பட்டிருக்கும் கட்டிடமாயின் போதியளவிற்கு மின் வெளிச்சம் கிடைத்திருத்தல் வேண்டும் ;

(ஏ) வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் போது, அவற்றை கழுவி தூய்மைப்படுத்துவதற்காக தண்ணீரை பயன்படுத்துவதாயின், அதற்காக பேசன்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டியதுடன் உபயோகித்த நீரை அகற்றக்கூடிய வகையில் குழாய்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(i) உள்ளே உபயோகித்து அப்புறப்படுத்தப்படும் அசுத்த நீரை உறிந்தெடுக்கக்கூடிய வகையில் குழியொன்றில் கொட்டக்கூடிய வகையிலான ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டியதுடன், பொது நீரகற்றும் வழியுடன் சென்று சேர்வதற்கு இடமளித்தல் தகாது ;

(ஒ) உட்புறமாக அல்லது வெளிபுறமாக தண்ணீர் முத்திரைகொண்ட மலசலகூட வசதிகள் செய்து கொடுத்திருத்தல் வேண்டும் ;

உட்புறமாக வீட்டுக் கடமைகளுக்கு பயன்படுத்தக் கூடாததுடன், வீட்டுக் கடமைகளுக்காக பயன்படுத்தப்படும் பிரிவை சுவரொன்றில் வேறுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) சிகை அலங்கார நிலையங்கள் மற்றும் பாபர் சாப்பு மற்றும் சலூன்களுக்குள் அல்லது அழகுபடுத்தும் நிலையங்களுக்குள்.

(அ) வாடிக்கையாளர்களுக்காக திறந்து வைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் போதியளவிலான நீர் வழங்கள்;

(ஆ) நடாத்திச் செல்லும் போது பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மற்றும் ஏனைய பொருட்களும் தொற்று நீக்குவதற்கான போதியளவில் நீரை கொதிக்க வைக்கும் முறையொன்றை அல்லது தொற்று நீக்குவதற்கான பாத்திரங்கள் போதியளவில் இருத்தல் வேண்டும் ;

(இ) உட்புற சேவை பெருநர்களுக்கு அவர்களுடைய பணியாற்றும் போது கரங்களை கழுவுவதற்கான வசதிகளுடன் பேசன்கள், சவர்க்காரம், சவர்க்கார திரவங்கள் இருத்தல் வேண்டும் ;

(ஈ) வாடிக்கையாளர்களின் பாவனைக்கு என வெள்ளை நிறம் அல்லது வேறொரு நிறத்தினால் தயாரிக்கப்பட்ட துடைப்பான்களும், மேலாடைகளும் இருத்தல் வேண்டும். வெட்டப்பட்ட முடியையும் கழிவுப் பொருட்களையும் இடுவதற்காக அங்கும் இங்கும் எடுத்துச் செல்லக்கூடிய மூடியுடனான பாத்திரமொன்று இருத்தல் வேண்டும் ;

(உ) உட்புறமாக மின்சாரத்தினால் செயற்படுத்தப்படும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுமாயின், ஒரு வாடிக்கையாளரின் மேசையின் மீது குறைந்த பட்சம் ஒரு மின் அலுத்தி (Switch) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் விதிக்கப்படுகின்ற வகையில் போதியளவிலான முதலுதவி உபகரணங்கள் மற்றும் ஔடதங்களுடனான முதலுதவி பெட்டியொன்றை வைத்திருத்தல் வேண்டும் ;

5. இத்துணை யாப்புகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை பெற்ற ஒவ்வொரு இடத்திலும், சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு நபருக்காவும் பிரதேச சபையால் சிபாரிசு செய்யப்படும் அளவிலான முதலுதவி வழங்குவது பற்றிய பயிற்சியொன்றையும் குறைந்த பட்சம் ஓராண்டிற்கு ஒரு முறை பெற்றுக்கொடுக்க வேண்டியதுடன் குறைந்தபட்சம் ஓராண்டிற்கு ஒரு முறை முதலுதவி வழங்குவது பற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும் .

6. இத்துணை யாப்பின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு நபரினாலும் 4 ஆம் பிரிவில் I ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தை வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கும் போது குறைந்தபட்சம் இரு முறை விகிதம் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

7. இத்துணை யாப்பின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு நபரினாலும் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தின் தரையை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கிருமி நாசினிகளிட்டு தூய்மைப்படுத்தல் வேண்டும்.

8. இத்துணை யாப்பின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றதொரு இடத்தில் பகல் வேளையில் அல்லது இரவில் உறங்குவதற்கான இடமாகவோ உணவு உட்கொள்வதற்கான இடமாகவோ பயன்படுத்த கூடாததுடன் வேறொருவரால் அவ்வாறு பயன்படுத்துவதற்கு இடம் வழங்கக் கூடாது.

9. இத்துணை யாப்பின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்திற்குள் சமைத்தல் அல்லது உணவு விற்பனை அல்லது விற்பனைக்கான உணவை காட்சிக்குவிடல் தகாது.

10. (i) ஏதேனும் நோய்கள் அல்லது தோல் வியாதியாளர் பீடிக்கப்பட்டிருக்கின்ற அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்படும் ஒருவரை பராமரிப்பில் ஈடுபடுகின்ற ஒருவர், அந்நோய் நிலைமை மற்றும் நோய் பரவுவதற்கான காலவரையறை நிறைவுபெற்றிருப்பின் தவிர அனுமதிப்பத்திரம் பெற்றதொரு இடத்தில் அல்லது அவ்வாறான பணிகளில் ஈடுபடுகின்ற ஒருவராக அல்லது ஏதேனும் பணிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்க கூடாது.

(ii) நன்றாக கழுவி தூய்மைப்படுத்தப்பட்ட ஆடைகள் அணியப்பட்டிருக்குமாயின் தவிர எவரேனும் ஒருவரால் அனுமதிப்பத்திரம் பெற்றதொரு இடத்தில் அல்லது ஏதேனும் கடமைகளில் ஈடுபடுவதற்காக இடமளித்தல் தகாது.

(iii) அனுமதிப்பத்திரம் பெற்றதொரு இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் குறைந்த பட்சம் வருடம் ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அனுமதிப்பத்திரதாரரின் கடமையாதல் வேண்டும்.

11. ஏதேனும் ஒரு முறையில் அல்லது தோல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வாறான நோயாளரை அண்மைக் காலம் முதல் பராமரித்த வாடிக்கையாளர் ஒருவருக்கு சேவை வழங்கக் கூடாது.

(i) அவ்வாறு சேவை வழங்கிய நபர் ஏதேனும் கிருமி நாசனிகளிட்டு தனது கரங்களை தூயப்படுத்திக் கொண்டிருந்தால் தவிர வேறு வாடிக்கையாளர் ஒருவருக்கு சேவை வழங்கள் தகாது ;

(ii) அவ்வாடிக்கையாளர் பயன்படுத்திய ஏதேனும் ஒரு உபகரணத்தை தொற்று நீக்கம் செய்யப்பட்டாலன்றி பாவிக்கப்பட்ட துடைப்புகள் மற்றும் மேலாடைகளை கிருமி நாசினிகளிட்டு அல்லது சவர்க்காரமிட்டு கழுவப்பட்டிருந்தால் தவிர எவரேனும் வாடிக்கையாளர் ஒருவர் சார்பாக பயன்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளிக்கக்கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்றதொரு இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு சேவையாளரும்.

(i) நாளாந்தம் நீராடிய பின்பு அல்லது உடம்பை கழுவிக்கொண்ட பின்பு மாத்திரம் சேவையில் ஈடுபடுதல் வேண்டும் ;

(ii) அணியும் ஆடைகள் மற்றும் பாதணிகள் என்பனவற்றை தூய்மையாகவும் சுகாதார பாதுகாப்புடனும் வைத்துக்கொள்ள வேண்டும் ;

(iii) நகம் வெட்டப்பட்டு தூய்மையாக இருத்தல் வேுண்டும் ;

(iv) ஒவ்வொரு வாடிக்கையாளருக்காகவும் சேவையாற்ற முன்பு சவர்க்காரமிட்டு கரங்களை கழுவிக்கொள்வதற்காக உறுதி செய்து கொள்ள வேண்டியது அனுமதிப்பத்திரகாரரின் கடமையாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பாவணைக்கு எடுக்கப்படும் ;

(i) உபகரணங்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தடவையும் பின்னரும் தொற்று நீக்கம் செய்யப்படுதல் ;

(ii) தூரிகைளை மற்றும் சீப்புகள் போன்ற உபகரணங்களை பாவிப்பதற்கு முன்பு நன்கு கழுவி தொற்று நீக்கம் செய்யப்படுதல் ;

(iii) அனைத்து பாத்திரங்களையும் சலவை தூலிட்டு பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு தவணையில் கொதி நீரில் மூழ்கடித்து கழுவுதல் ஆகியன நடைபெறுகிறதென உறுதிபடுத்திக் கொள்வது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் பொறுப்பாகும்.

14. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையை பெற்றுக்கொள்கின்ற வாடிக்கையாளர்களுடைய–

(i) தலைமயிர் வெட்டிய பின்பு அல்லது முகம் சவரம் செய்த பின்பு அகற்றப்படும் தலைமயிர் உட்பட வேறு அழுக்குகளை சேகரித்து அல்லது மின் மூலமாக குப்பை சேகரிக்கும் இயந்திரமொன்றினால் சேகரித்து அவற்றை வேறுபடுத்தப்பட்ட பாத்திரமொன்றில் இடுவதற்காகவும் ;

(ii) தலைமையிர் அல்லது முகம் சவரம் செய்த பின்பு அதற்கான உபகரணங்களை மாற்றப்படுவதாக அனுமதிப்பத்திரதாரர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் .

15. நாளாந்த கடமைகள் நிறைவுபெற்ற பின்பு அல்லது தேவை ஏற்படும் பட்சத்தில் அகற்றப்படும் தலைமயிர் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் உள்ள கழிவுப் பொருட்களை குறைந்த பட்சம் தரையிலிருந்து ஒரு மீற்றருக்கு குறையாத ஆழத்தில் புதைப்பதற்கு ஏற்பாடு செய்தல் அனுமதிப்பத்திர தராரின் கடமையாகும். அதே போன்று அகற்றப்படும் தலைமயிர் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் காற்றில் அடித்துச் செல்லாத வகையில், அல்லது சுற்றுப்புறத்தில் பரவிச் செல்வதை தவிர்க்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அனுமதிப்பத்திரதாரரின் கடமையாகும்.

16. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேகரிக்கப்படுகின்ற தலைமயிர் அல்லது வேறு கழிவுப் பொருட்களை 15 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அப்புறப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் பிரதேச சபையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவரையில் பிரதேச சபையில் குப்பை சேகரிப்பு வாகனத்தில் பொறுப்பளித்தல் வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பயன்படுத்தப்படும் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் பாத்திரத்திலிருந்து கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்ட பின்பு அதனை சுத்தம் செய்து கிருமிநாசினிகளிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது அனுமதிப்பத்திரதாரின் கடமையாகும்.

18. ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் -

(i) ஏதேனும் ஒரு வகையிலான இரத்த ஓட்டத்தை நிறுத்துகின்ற பென்சில்கள் அல்லது பவுடர் அல்லது வேறொரு பொருளை அல்லது ;

(ii) இரத்தம் வெளியாகுமாயின் அதனை நிறுத்துவதற்காக, சீனக்காரம் அல்லது வேறொரு பொருள் தூலாக அல்லது திரவமாக இருக்குமாயின் தவிர எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் பாவனைக்காக வழங்கக் கூடாது. பயன்படுத்த தகாத எந்த ஒரு துடைப்பையும் ஏதேனும் ஒரு வடிக்கையாளருடைய பாவனைக்காக எடுத்தல் தகாது.

20. இத்துணையாப்பின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கடமைகளை தவிர வேறு ஏதேனும் கடமைகளுக்காக தலைவரின் எழுத்துமூலமான அனுமதி கிடைக்குமாயின் தவிர நடைமுறைப்படுத்தல் தகாது.

21. இப்பகுதி துணை யாப்புகளின் விதிமுறைகளை பரிசோதிப்பதற்கான வாய்ப்பு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரால் பரிசோதிப்பதற்கான அதிகாரம் கிடைக்கின்ற அவ்விடத்தில் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தை உரிய காலமென கருதப்படும்.

22. இப்பிரிவின் துணை யாப்பின் கீழ் அனுமதிபத்திரமொன்றை வெளியிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு இடத்தை 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனும் விதிகளுக்கு ஒத்திசைவாக நடைமுறை நிறைவுபெற்றால் இப்பிரிவு யாப்புகளில் வேறு ஏதேனும் துணை யாப்பின் விதிமுறைகளுக்கு முரணான சந்தர்ப்பங்களில் உறுதியாக குறிப்பிடப்படும் தினத்திற்கு முன்பு அவ்விடத்தை அவ்விதிக்கு ஒத்திசைவான நிலைக்கு கொண்டு வர தேவையான அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதற்கான எழுத்துமூல கட்டளையொன்றை அனுமதிப்பத்திரதாரரிடம் பொறுப்பளித்தல் வேண்டும்.

23. 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கட்டளையிடப்பட்ட எவரேனும் அனுமதிப்பத்திரதாரரால் அக்கட்டளைகளில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பு அக்கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ள எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அக்கட்டளையில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பாற்கான அதிகாரம் தலைவருக்கு இருத்தல் வேண்டும்.அவ்வாறாயினும் நீடிக்கப்படும் காலம் 14 நாட்களைவிட அதிகரித்தல் தகாது.

24. 23 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையிலான கட்டளையொன்று கிடைத்த எவரேனும் ஒரு அனுமதிப்பத்திரதாரால், சம்பந்தப்பட்ட கட்டளையில் உறுதியாக விதிக்கப்பட்டுள்ள திகதியை அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்பு அக்கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவிர்க்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்காக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தலைவரால் ரத்துச் செய்தல் வேண்டியது சட்டபூர்வமாதல் வேண்டும்.

25. இத்துணை யாப்பின் ஏதேனும் கட்டளையொன்றை கைவிடுதல், செயற்படுத்தாதிருத்தல் என்பன குற்றங்களாவதுடன், அதற்காக உரிய அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றினால், குற்றவாளியாக்கப்பட்ட பின்பு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

26. சொற்கள் தொடர்பாக வேறொரு அர்த்தம் தேவைப்பட்டால், தவிர இப்பகுதிகள் துணையாப்புகளில் -

"மேலாடை" என அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் சேவையை பெற்றுக்கொள்கின்ற எவரேனும் வாடிக்கையாளருடைய உடம்பில் மேற்பாகத்தை மறைப்பதற்காக பயன்படுத்தும் ஒருவகை துணியாகும்.

"தலைமயிர் வெட்டும் இடங்கள்" அல்லது பாபர் சாப்புகள் என பெண்களுடைய, ஆண்களுடைய தலைமயிர் வெட்டுதல், ஆண்களுக்கு முகச்சவரம் செய்தல், தாடி, மீசை அல்லது தலைமயிரை சீரமைத்தல், தலை சீவுதல், முகம் மற்றும் முடியை சீர்செய்தல் போன்ற அழகுபடுத்தல் செய்கின்ற ஒவ்வொரு இடமும் இவ்வாறு கருதப்படுகின்றது.

## பகுதி 17

## விளம்பர அறிவித்தல்

1. பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் ஏதேனுமொரு பாதையில் அல்லது பொது இடத்தில் தெரியக்கூடிய வகையில் காட்சி படுத்தப்பட்டுள்ள அல்லது எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்படுத்தி காட்டப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அது தொடர்பான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைச்சட்டமாகும்.

2. பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பதற்காக வழங்கப்படும் பிரதேசம் எது என்பதை பிரதேச சபை காலத்திற்கு காலம் தீர்மானிக்க முடியும். விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு இடமளிக்கும் பிரதேச சபை தொடர்பாக காலத்திற்கு காலம் பிரதேச சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பான அறிவித்தல்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்தல் பிரதேச சபையின் தலைவர் அவர்களின் கடமையாவதோடு, அவ் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகும் தினத்தில் அல்லது அதில் உத்தேசிக்கப்படும் ஏதேனுமொரு எதிர்வரும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. பிரதேச சபையின் தலைவர் அவர்களினால் வெளியிடப்படும் குறிப்பிட்ட கடமைகளுக்காக இங்கு முதலாம் பட்டியலில் காட்டப்பட்டுள்ள முன்மாதிரிக்கு உண்மையாக தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இருந்தால் அன்றி எந்தவொரு நபரினாலும் சபை அதிகார பிரதேசத்திற்குள் உள்ள தெருக்கள் அல்லது பொது இடங்களிலிருந்து பார்க்கும் போது விளங்கக்கூடிய வகையில் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்தல் அல்லது விளம்பரப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யக் கூடாது.

4. விளம்பரப்படுத்துவதற்கு செல்லுபடியான அனுமதிபத்திரம் இருக்கும் எந்தவொரு விளம்பர அறிவித்தலும் அனுமதிப்பத்திரத்தில் உத்தேசிக்கப்பட்ட இடங்கள் அன்றி ஏதேனுமொரு பாதையில் அல்லது பொது இடத்திலிருந்து பார்க்கும் போது தெரியக்கூடிய வகையில் ஏனைய ஏதேனுமொரு இடத்தில் காட்சிப்படுத்தல் அல்லது அப்படி செய்வதற்கு ஏற்பாடு செய்யாமல் இருத்தல் வேண்டும்.

5. இப்பகுதியின் துணைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டிருந்தால் அன்றி அவ் அனுமதிப்பத்திரத்தில் நிச்சயமாக குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்காக மாத்திரம் செல்லுபடியாக வேண்டும்.

6. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக அனுமதிப்பத்திரம் தேவைப்படும் அனைத்து நபர்களினாலும் ஆகக் குறைந்தது அவ் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு கருதும் சந்தர்ப்பத்தில் இரண்டாம் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மாதிரிக்கு உகந்ததாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை வேலை நாட்களில் 7 நாட்களுக்கு முன்னர் இதில் இரண்டாம் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மாதிரிக்கு உகந்ததாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை பிரதேச சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.

7. இத்துணை சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் ரீதியில் விண்ணப்பதாரிகளினால் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி தலைவர் அவர்களினால் ஏதேனுமொரு வகையிலான விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்காதிருக்க வேண்டும் :-

(i) இரண்டாம் துணை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்ட வலயத்திற்குள் குறித்த இடத்தில் காட்சிப்படுத்துவதற்கான கோரலாக இருத்தல் வேண்டும் ;

(ii) விளம்பரம் காட்சிக்கு வைப்பதற்காக கோரப்படும் இடத்திற்காக வேறு ஒரு நபருக்கு முன்னரே வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தில் செல்லுபடியான காலவரையரையாவது முடிவடைந்திருக்க வேண்டும். அப்படியென்றாலும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் முன் வழங்கப்பட்டிருந்த மேலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு விளம்பர பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரத்தின் காட்சிக்கு தடை ஏற்படாத வகையில் அதற்கு அருகில் உள்ள விளம்பர பலகையிலேயே காட்சிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு இவ்பொழுங்கு விதிமுறைகளில் தடையாகாது ;

(iii) விளம்பர அனுமதிப்பத்திரம் கோரும் விளம்பரங்களாவது தகாத வகையில் அல்லது வெறுப்பூட்டுவதுடன் அல்லது நல்லொழுக்கமற்ற அல்லது ஏதேனும் கலாசாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் அல்லது ஏதேனும் சமயத்திற்கு அல்லது மக்கள் வர்க்கத்திற்கு அல்லது மக்கள் பிரிவிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் அல்லது அப்படியான நிலமை ஏற்படுவதற்கு இடமிருக்கும் வகையிலான காட்சிகள் உட்படும் வகையில் விளம்பரங்களாக இருத்தல் ஆகாது ;

(iv) ஏதேனுமொரு எழுத்துமூலமான சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட அல்லது வரையரைப்படுத்தப்பட்டுள்ள வீதத்திலான விளம்பரங்கள் காட்சிப்படுத்தல் ஆகாது ;

(v) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களுடனும் 210 X 297 மில்லி மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவின்படி தயாரிக்கப்பட்ட விளம்பர முன்மாதிரியொன்றும் விளம்பர அறிவித்தலை விளம்பரப்படுத்துவற்கு கருதும் இடத்தில் அல்லது இடங்களில் 210X 297 மில்லி மீற்றர் அளவிலான கடதாசியில் 1: 1000 அளவின்படி வரையப்படும் பூமி அமைப்பின் திட்ட நிழற்படமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன் விளம்பர அறிவித்தலின் உறுதியான நீளம், மற்றும் அகலம் அதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) விளம்பர அறிவித்தல்கள் காட்சிக்கு வைக்கும் இடம் :-

விண்ணப்பதாரர் அன்றி வேறொரு நபருக்கோ அல்லது ஒரு அதிகார சபைக்கு உரிய இடத்தில் விளம்பரம் காட்சிக்கு வைக்கும் போது அந்நபர் அல்லது அவ் அதிகார சபையினால் அவ் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் கடிதமூலமான காட்சியை சமர்ப்பித்திருத்தல் வேண்டும்.

8. விளம்பர அறிவித்தலின் அருகில் நடமாடும் எந்தவொரு நபருக்கும் அல்லது வாகனத்திற்கும் தடை ஏற்படும் வகையில் அல்லது விபத்து ஏற்படும் வகையில் எந்தவொரு நபரினாலும் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பொருத்தப்படாமல் இருத்தல் வேண்டும். அதேபோன்று வாகனங்களை ஓட்டிச் செல்லும் எந்தவொரு சாரதியினதும் அவதானத்தை மாற்றக்கூடிய வகையில் அவர்களின் காட்சிக்கு தடையேற்படும் வகையில் மின் வெளிச்சங்களை பொருத்துதல் அல்லது எதிர்ஒளி ஏற்படும் வகையில் பொருத்தப்படாமல் இருத்தல் வேண்டும்.

9. சமர்ப்பித்துள்ள ஏதெனுமொரு விண்ணப்பப்பத்திரத்திற்கு இவ் பகுதியின் துணைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு தேவையான நியமங்களை பூரணப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான அறிவித்தலை தலைவர் அவர்களினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு அவ் அறிவித்தல் கிடைத்த பின்னர் அவரினால் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் II ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப்பணம் இச்சபைக்கு செலுத்திய பின்னர் குறித்த அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தலைவர் அவர்களின் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

10. (i) இத் துணைச் சட்டத்தின் கீழ் அனைத்து அனுமதிப்பத்திரங்களுக்குமாக சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணமானது பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டணங்களாக இருத்தல் வேண்டும்.

(ii) ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் காலம் முடிவடைந்த பின்னரும் அவ் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மேலதிக காலத்திற்கு அவ்விளம்பரம் காட்சிக்கு வைப்பதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iii) இத்துணைச் சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் சமய அலுவல்கள், அரசியல் பொதுக்கூட்டம் அல்லது நிதி அறவிடாமல் நடாத்தப்படும் ஏதேனுமொரு கலாசார அலுவல்கள் தொடர்பாக விளம்பர அறிவித்தல் தேறிய நிதியளவில் புண்ணிய அலுவல்களுக்காக ஈடுபடும் ஏதேனும் விழாவிற்கான அறிவித்தல்களுக்கான அனுமதிப்பத்திர கட்டணத்தில் விடுவிக்க வேண்டும். அப்படியான விளம்பர அறிவித்தலுக்காக இப்பகுதியின் துணைச் சட்டத்தில் ஏனைய ஒழுங்குவிதிகள் அம்முறையின்படி உரியதாக வேண்டும்.

11. (i) விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துதற்கு சமர்ப்பிக்கும் எவரேனுமொரு விண்ணப்பதாரருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சந்தர்ப்பங்களில் , இச்சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் பிணை பணத்தை விண்ணப்பதாரால் இச்சபைக்கு வைப்புச் செய்யும் வரை தலைவர் அவர்களினால் அவ் விண்ணப்பப்படிவத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடாது.

(ii) ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலின் காட்சிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன் இச்சபைக்கு வைப்புச் செய்ய வேண்டிய பிணை நிதியின் அளவு தொடர்பாக இச்சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தல் தலைவர் அவர்களின் கடமையாக வேண்டும்.

12. காட்சிக்கு வைப்பதற்காக அனைத்து விளம்பரங்களுக்கும் வழங்கப்படும் அனுமதிப்பத்திர இலக்கத்தை விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதற்கு முன் ஒவ்வொரு விளம்பரங்களிலும் வலதுபக்க கீழ் மூலையில் அவ் இலக்கத்தை குறிப்பிடுதல் அனுமதிப்பத்திரம் பெறுநர்களின் கடமையாக வேண்டும்.

13. (i) ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் பொருத்துவத்றகாக ஈடுபடுத்தப்படும் ஏதேனுமொரு விளம்பரப்பலகை, தாங்கிகள், நிர்மாணிப்பு அல்லது பொருத்துதல் மூலம் சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அல்லது ஏதேனுமொரு சொத்திற்கு ஆபத்து அல்லது பாதிப்பு ஏற்படும் வகையில் அமையும் சந்தர்ப்பத்தில் அது உத்தேசிக்கப்பட்ட காலத்திற்குள் முன்னர் இருந்த நிலமைக்கு கொண்டுவருவதற்கு அறிவித்தல் மூலம் அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு தெரிவிப்பதற்கு தலைவர் அவர்கள் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(ii) மேற்படி I ஆம் பந்தியின் கீழ் உள்ள அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனுமொரு நபர் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின்படி செயல்படுவதை தவிர்க்கும் பட்சத்தில் தலைவர் அவர்களினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் அவ் விளம்பர அறிவித்தலுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் மற்றும் அவ்விளம்பர அறிவித்தலை கழற்றி அப்புறப்படுத்தல் சட்டரீதியாதல் வேண்டும்.

(iii) மேற்படி II ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ் விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைப்பதற்காக இச்சபைக்கு வைப்பு செய்யப்பட்டுள்ள பிணைப்பணமானது இச்சபைக்கு உரித்தானதாவதுடன் அப்பிணைப் பணத்தை கேட்பதற்கு எந்தவொரு நபருக்கும் உரிமை இல்லை.

14. காட்சிக்காக செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டு காட்சிப்படுத்தப்படும் எந்தவொரு அறிவித்தலுக்கும் ஏற்படும் பாதிப்பு அல்லது விகாரமாக்கப்பட்டவைகள் அல்லது அகற்றப்பட்டவைகள் தொடர்பாக இச்சபை எந்தவொரு வகையிலும் பொறுப்பிற்கு உட்படுத்தல் ஆகாது.

15. இப்பகுதியின் துணைச் சட்டத்தின் ஏதேனுமொரு நியமங்கள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், மீறல் தொடர்பாக கவனத்தை முன்வைக்கும் அறிவித்தலுடன் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு தலைவர் அவர்களுக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

16. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலுக்காக இப்பகுதியின் துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மூலம் அவ்விளம்பர அறிவித்தலுக்கான அர்த்தத்தை அல்லது கூற்றை முன்வைப்பதற்காக வழங்கப்பட்ட சட்டரீதியிலான அனுமதி உட்படுத்தப்பட்டுள்ளது என கருத கூடாததுடன் அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

17. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் நிர்மாணித்தலுக்காக பாவிக்கப்படும் ஏதேனுமொரு நிர்மாணிப்பின் தாங்கிகள், பொருத்துதல்கள் அல்லது அதற்காக பாவிக்கப்படும் வேறு ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலில் கூறப்பட்டுள்ள வேறு அர்த்தம் அல்லது அர்த்தமாகக் கொள்ளக்கூடிய காரணத்தினால் ஏதேனுமொரு சாராருக்கு ஏற்படும் அல்லது ஏற்படுவதற்கு இருக்கும் ஏதேனும் நட்டங்கள் அல்லது பாதிப்புகள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெறுநர் பொறுப்பேற்க வேண்டும்.

18. இப்பகுதியின் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்பட்ட விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல் செய்யப்படும் இறுதி திகதிக்குபின்னர் நாற்பத்தியெட்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் அவ்விளம்பர அறிவித்தல் மற்றும் அதற்கு ஈடுபடுத்தப்பட்ட அனைத்து பொருட்களும் அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர்களினால் ஏற்பாடு செய்ய வேண்டும்.

19. (i) 18 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயல்பட்ட பின்னர் தலைவர் அவர்களுக்கு கடிதம் மூலம் செய்யப்படும் கோரலுக்கு சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன் சபைக்கு வைப்புச் செய்யப்படும் நிதியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு முடியும்.

(ii) மேற்படி I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கடிதம் மூலமான கோரல் கிடைத்த பின்னர் அதன் வைப்புப் பணத்தை அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு விடுவிப்பதற்கு முன்–

(அ) 18 ஆம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் அனுமதிப்பத்திரம் பெறுநர்களினால் உரிய முறையில் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் பெறுநர்களினால் 18 ஆம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயல்பட்டுள்ளதாக மற்றும் இச்சபையின் விளம்பர பலகைக்கு பாதிப்பு ஏற்படவில்லை என தலைவர் அவர்கள் திருப்தியடையும் பட்சத்தில் அன்றி அதன் வைப்புப் பணம் அனுமதிப்பத்திர பெறுநர்களுக்கு பூரணமாக விடுவிக்கக்கூடாது. ஏதேனுமொரு அனுமதிப்பத்திரம் பெறுநர்களினால் 17 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயல்படுவதை மீறும் சந்தர்ப்பத்தில் அல்லது இச்சபையின் விளம்பரப்பலகைக்கு பாதிப்பு ஏற்படும் போது, அச்சந்தர்ப்பத்திற்கேற்ப அச்செயலை செய்வதற்கு அல்லது விளம்பர பலகையை புதுப்பித்தல் அல்லது அவ்விடயங்கள் இரண்டிற்கும் இச்சபையினால் பொறுப்பேற்கப்படும் சந்தர்ப்பத்தில் அச்செலவுகளுக்கான நிதியினை வைப்பு நிதியிலிருந்து குறைத்துக்கொள்ள வேண்டியதுடன், ஏதேனும் பணம் மிகுந்திருந்தால் அப்பணத்தை மாத்திரம் அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு மீண்டும் செலுத்த முடியும்.

(இ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயல்படும்போது இச் சபைக்கு அறவிட வேண்டிய நிதியானது வைப்பு செய்யப்பட்டுள்ள பிணைப் பணத்தைவிட மேற்படும் சந்தர்ப்பத்தில் மேலும் அறவிடவேண்டிய நிதியை அனுமதிப்பத்திரம் பெறுநர்களினால் இச்சபைக்கு செலுத்த வேண்டும்.

21. இச்சபையின் அதிகார பிரதேசத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு வியாபார நிலையத்திலும் அல்லது தொழிற்சாலைகளின் பெயர், முகவரி மற்றும் அவ் வியாபார நிலையத்தில் செய்யப்படும் வியாபாரத்தின் தன்மை அல்லது தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் உற்பத்திகளின் தன்மை அல்லது அறிவித்தல் பலகையில் காட்டப்பட்டுள்ள ஒன்றை மாத்திரம் அவ் வியாபார நிலையத்தில் அல்லது தொழிற்சாலையின் முன்னால் காட்சிப்படுத்தல், ஏதேனுமொரு இசை நிகழ்ச்சி நடாத்தப்படும் இடத்தில் அவ் இசை நிகழ்ச்சிக்கு உரிய விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படும் போது, இல்லத்திற்கான பெயர் பலகை, உத்தியோகபூர்வ பெயர் பலகை மற்றும் ஏதேனும் ஒரு சொத்துக்களை வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது கூலிக்கு கொடுப்பதற்கு அச் சொத்துக்கள் மீது காட்சிக்கு வைக்கப்படும் “குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ளது” அல்லது “விற்பனைக்கு” உள்ளது அல்லது “வாடகைக்கு கொடுப்பதற்கு உள்ளது” என்று குறிப்பிடப்படும் விளம்பர அறிவித்தல் ஒன்றிற்கு மாத்திரம் இப் பகுதியின் துணைச் சட்டங்களின் ஏற்பாடுகள் சம்பந்தப்படாமல் இருத்தல் வேண்டும். அப்படியானாலும் அவ் வகையில் அறிவித்தல் பலகை ஒன்றிற்கு மேற்பட்டளவு காட்சிக்கு வைக்கப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் மேலதிகமான அனைத்து விளம்பர பலகைகளுக்கும் இப் பகுதியின் துணைச்சட்டத்தின் விதிகள் செல்லுபடியாதல் வேண்டும்.

22. அரச அல்லது மாகாண சபை அல்லது இச் சபையினால் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பர அறிவித்தல் தொடர்பாக இப்பகுதியின் துணைச்சட்டத்தின் ஏற்பாடுகள் செல்லுபடியாகமாட்டாது.

23. ஏதேனுமொரு வியாபார நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும் முகவரியுடன் ஏனைய ஏதேனுமொரு வியாபார பொருட்கள் அல்லது பணிகளுக்காக விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் ஏதேனும் இடத்தில் ஏதேனுமொரு வகையில் வியாபார பொருட்கள் அல்லது பணிகளுக்கான விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ் விளம்பர அறிவித்தல் இப் பகுதியின் துணைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட வேண்டும். இத் துணைச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நபர் என்பவர் அவ் வியாபார நிலையத்தில் அல்லது இல்லத்தின் உரிமையாளர், முகாமையாளர் அச் சந்தர்ப்பத்தில் அதன் நிர்வாகத்தின் பொறுப்பாக உள்ள எவரேனுமொருவர் நபர் என கருத வேண்டும்.

24. எவரேனுமொரு நபரினால் -

(i) ஏதேனும் வகையில் வீதியில் அல்லது ஒற்றையடி பாதையில் வாகன பாதைக்கு மேல் அல்லது ஊடாக இருக்கும் வகையில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தல் அல்லது,

(ii) தரையிலிருந்து 12 மீற்றர் மேற்படும் உயரத்தில் ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தல் அல்லது,

(iii) ஏதேனும் வீதியில் அல்லது பாதையை பார்த்து அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது விற்பனை நிலையத்தின் பெயர்ப் பலகை அல்லது அக்கட்டிட முகப்பின் வரையறை மீறிச் செல்லும் வகையிலான நீளத்தில் உள்ள விளம்பர அறிவித்தல் பொருத்தப்பட்டிருத்தல் அல்லது தொங்கவிடுதல்.

(iv) ஆகாய பெயர் பலகையொன்றின் வடிவத்திலான விளம்பர அறிவித்தல் பிரதேச சபையின் முன் அனுமதியை பெற்றுக்கொள்ளாது ஏதேனுமொரு வகையில் வைத்தல் அல்லது நிர்மாணித்தல் கூடாது.

25. எந்தவொரு நபரினாலும் தனியார் அல்லது பொது கட்டிடங்களுக்கு பொது வணக்கஸ்தலங்களுக்கு, பொது பூங்காவிற்கு அல்லது ஏதேனும் பாலத்திற்கு அல்லது வீதியின் குறுக்கே உள்ள பாலத்தில், தொலைபேசி மின்சாரக்கம்ப தூண்களில், பக்க மதில்களில், வாங்கிகளில், குளத்தில், போக்குகளில், பாறைகளில், வரம்புகளில் அல்லது மரங்களில் விளம்பர அறிவித்தல்கள் காட்சிப்படுத்தக் கூடாது.

26. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளது என்பதைக் காட்டும் விளம்பர அறிவித்தலில் பிரதேச சபையினால் உட்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு சின்னங்கள், அடையாளங்கள், சொற்கள், வசனங்கள் அல்லது இலக்கங்களை ஏதேனுமொரு நபரினால் விகாரப்படுத்தக் கூடாது.

27. இத்துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு ஏற்பாடுகளில் உள்ள சட்டம் மீறப்படுதல் குற்றமாவதுடன், அந் நபர் உகந்த அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முன்னால் அக் குற்றத்திற்காக அவர் குற்றவாளியாக்கப்படும்போது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122(2) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையரைக்கு இணங்க தண்டத்திற்கு உட்பட வேண்டும்.

28. சொற்களில் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவைப்படுமென்றால் தவிர, இப் பகுதியின் துணைச்சட்டங்களில் "கட்டவுட்" என்பது பலகை அல்லது ஏனைய ஏதேனுமொரு பொருட்களை ஈடுபடுத்தி தயாரிக்கப்பட்ட ஏதேனும் சட்டகத்தில் ஒட்டப்படும் அல்லது பொருத்தப்படும் விளம்பர அறிவித்தல்,

"விளம்பரப்பலகை" என்பது மக்கள் அறிந்துக்கொள்ளக்கூடிய அல்லது அவதானத்திற்காக காட்சிக்கு வைக்கப்படும் ஏதேனும் விளம்பர அறிவித்தல்களை பொருத்துவதற்காக அல்லது நிறுத்தி வைப்பதற்காக நிரந்தரமாக நிர்மாணிக்கப்படும் ஏதேனுமொரு வகையிலான விளம்பரப்பலகை,

" விளம்பர அறிவித்தல்" என்பது, ஏதேனுமொரு நபரினால் ஏதேனுமொரு காணி அல்லது கட்டிடங்கள் அல்லது நிர்மாணிப்புகளை காட்சிக்கு வைக்கும் மற்றும் மக்கள் அறிந்து கொள்வதற்காக அல்லது அவதானத்திற்காக காட்சிக்கு வைக்கப்படும், ஒட்டப்படும், பொருத்தப்படும், நிர்மாணிக்கப்படும், தொங்கவிடப்படும் அல்லது ஏனைய வகையில் ஸ்தாபிக்கப்படும் விளம்பர அலுவல்களுக்காக ஈடுபடுத்தும் ஏதேனும் சொற்களில் அல்லது வசனங்களில் அல்லது வரைபட குறிப்புகளில் சேர்க்கப்படும் விளம்பர அறிவித்தல் அல்லது பதாகை (Benar) அல்லது கட்டவுட் ஒன்று அல்லது ஏதேனுமொரு வகையில் பிரதி அல்லது விளம்பரம் அல்லது அறிவித்தல் அல்லது வியாபார அறிவித்தல், மின் அல்லது மின்சாரத்தை பாவித்து காட்சிக்கு வைக்கப்படும் அறிவித்தல் என கருதப்படும்.

## முதலாம் அட்டவணை

*03 ஆவது சரத்து*

**.................................................. சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரம்**

செலுத்தப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணம் ரூ........................ அனுமதிப்பத்திரத்தின் தொடர்
இலக்கம்: ...........................
பிணைப் பணத்தின் அளவு ரூ......................................................
.......................................................................................................................................................................
..............வசிக்கும், தேசிய அடையாள அடடையின் உரிமையாளரான ................................................................ என்பவருக்கு விளம்பர அறிவித்தலை முறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் நிர்வாகம் தொடர்பாக துணைச்சட்டத்தின் நியமங்களுக்கு அமைய 20 .... மாதம் ..... ஆம் திகதி தொடக்கம் 20...............மாதம் ....................... ஆம் திகதி வரையான காலத்திற்குள் ............................................ சபையின் எல்லைக்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் விளம்பர அறிவித்தல் /விளம்பரங்கள் காட்சிக்கு வைப்பதற்காக இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

விளம்பர அறிவித்தல் /அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ள இடங்கள்

1. .......................................................................................................................................................................
2. .......................................................................................................................................................................
3. .......................................................................................................................................................................

..................................................
திகதி : அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்.
.............................................
சபை

## இரண்டாம் அட்டவணை

*06 ஆவது சரத்து*

**விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர்:- ....................................................................................................................
2. முகவரி:- ...........................................................................................................................................
3. தேசிய அடையாள அட்டையின் இலக்கம்:- ...................................................................................................
4. தொலைபேசி இலக்கம்:- ...........................................................................................................................
5. மின்னஞ்சல் முகவரி:- ...........................................................................................................................
6. விளம்பர அறிவித்தல் தொடர்பான விபரம்:- ...................................................................................................
   (i) அறிவித்தலின் அளவு:- நீளம் செ.மீ. .............................. அகலம் செ.மீ. .................................
   (ii) அறிவித்தலின் எண்ணிக்கை:-.........................................................................................
   (iii) அறிவித்தலின் உள்ளடக்கம்:- .......................................................................................
   (iv) நிலைப்படுத்தும் விதம்:- ..............................................................................................
   (v) நிலைப்படுத்தும் இடம்:- ...............................................................................................

(7 ஆவது துணைச்சட்டத்தின் (ஏ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மாதிரியொன்றை இணைக்குக)

7. கோரப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலவரையறை:-

ஆரம்ப திகதி 20.................................... மாதம் ............................... திகதி
முடிவடையும் திகதி 20.................................... மாதம் ............................... திகதி

விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் நிர்வாகம் தொடர்பாக துணைச்சட்டத்தில் உள்ள நியமங்கள் அனைத்தையும் பின்பற்றுவதாகவும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு 2 தினங்களுக்கு முன் அனுமதிப்பத்திரத்திற்கு உரிய விளம்பர அறிவித்தலையும் அதற்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து பொருட்களையும் எனது செலவில் அவ் இடத்திலிருந்து அகற்றுவேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

...............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: ..............................

**பகுதி 18**
**ஓட்டல்கள்**

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஓட்டல்களை நடாத்திச் செல்வதனை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் பரிசீலனை செய்தல், நிர்வகித்தல் மற்றும் அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. தலைவரினால் இக் காரியங்களுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருக்குமானால் யாராவது ஒருவரால் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஓட்டல் ஒன்றினை நடாத்திச் செல்லுதல் ஆகாது.

3. இத் துணை விதிகளின் நியதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் கோரும் யாராயினும் ஒரு நபரினால் இப் பகுதியில் "அ" பட்டியலில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றினை தலைவரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இத் துணைச் சட்டங்களின் 2 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படின் பிரதேச சபை தீர்மானித்துள்ள கட்டணத்தை பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டியதுடன், அக் கட்டணம் வருடந்தோறும் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் தலைவரினால் பிரசுரிக்கப்பட்டுள்ள தொகைக்குச் சமனாதல் வேண்டும்.

5. இத்துணைச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்தினதும் செல்லுபடியாகும் காலம் முன்பதாகவே ரத்து செய்யப்பட்டாலன்றி, அவ் அனுமதிப் பத்திரம் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ அவ் ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

6. இத் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நியதிகள் அவ்வாறே பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் அன்றி தலைவரினால் எந்த ஒரு தங்கு ஓட்டலுக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படலாகாது.-

(i) ஓட்டலை நல்ல புதியது போன்ற நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(ii) ஓட்டல் ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரம் கொண்டவையாக இருக்க வேண்டியதுடன், சுவர்கள் செங்கற்களால், சீமெந்து கற்களால் அல்லது கருங்கற்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். சுவர்களின் இரு புறங்களும் காரை பூசப்பட்டு பூச்சுகள் பூசப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப் பலகைகளால் அல்லது வேறு ஏதாவது உலோக தகடுகளினால் அமைக்கப்பட்டு பூச்சு பூசப்பட்டிருத்தல் இந்த நியதிகளுக்கு அமைந்தனவாகக் கருதப்படலாம்.

(iii) ஓட்டலின் ஒவ்வோர் அறையிலும் உட் கூரை (Ceiling) வீதம் பொருத்தப்பட்டு இருக்க வேண்டியதுடன் அது தரையிலிருந்து குறைந்தபட்சம் மூன்று மீற்றருக்கு குறையாத உயரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வோர் அறையிலும் திறக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையின் யன்னலும் திறந்திருக்கும் போது அதன் பரப்பளவு அறையினது தரையின் பரப்பளவில் ஆறில் ஒரு பங்குக்குக் குறைவாக இருத்தலாகாது. அவ்வாறெனினும் ஏதாவது ஓர் அறை குளிரூட்டப்பட்டிருக்கும் வேளையில் இந் நியதி பொருத்தம் உடையதாகாது.

(v) கூரை ஏதாவது நிரந்தர பொருளைக் கொண்டு வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) கூரையின் ஓரங்கள் தரை மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கோடிகளின் அளவு குறைந்தபட்சம் 1.5 மீற்றராக இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வோர் அறையினதும் தரை சீமெந்து இட்டு, காரையிட்டு சீமெந்து சாந்தினால் ஒப்பரவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது பீங்கான் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஓட்டலினுள் குவியும் குப்பைக் கூளங்களை சேகரிப்பதற்காக குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன் சமையில் அறையில் வைக்கப்படும் குப்பைக் கூடைகள் ஈக்கள் அல்லது வேறு ஜந்துக்கள் நுழைய முடியாத வகையில் மூடிகளைக் கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

(ix) வளவுக்குள் குவியும் குப்பைக் கூளங்களை அகற்றுவதற்காக 24 ஆவது சரத்தின் நியதிகளுக்கு இணங்க செயற்படக் கூடியதாக ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) சமையல் அறையினுள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு மேசையும். –

(அ) மரத்தினால் ஆனதாயின் அதன் கால்கள் செப்பனிடப்பட்டு பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும். மேசையின் மேற்பரப்பானது செப்பனிடப்பட்ட தெளிவாக காட்சியளிக்கும் பொருளினால் அல்லது துருப்பிடிக்காத நீர் ஒழுகாத உலோக தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பினால், உருக்கினால் அல்லது வேறு ஏதாவது உலோகத்தினால் ஆனதாயின் கால்கள் பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும். மேற்பரப்பு செப்பனிடப்பட்ட தெளிவாக காட்சியளிக்கும் பொருளினால் அல்லது துருப்பிடிக்காத, நீர் ஒழுகாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) ஓட்டலின் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மேசையும்.–

(அ) மரத்தினால் ஆனதாயின் அதன் கால்கள் செப்பனிடப்பட்டு பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும். மேசையின் மேற்பரப்பானது கண்ணாடியினால் செப்பனிடப்பட்ட அல்லது தெளிவாக காட்சியளிக்கும் பொருளினால் அல்லது துருப்பிடிக்காத நீர் ஒழுகாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரும்பினால் அல்லது உருக்கினால் அல்லது வேறு ஏதாவது உலோகத்தினால் ஆனதாயின் கால்கள் பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும். மேற்பரப்பு கண்ணாடியினால் அல்லது செப்பனிடப்பட்ட தெளிவாக காட்சியளிக்கும் பொருளினால் அல்லது துருப்பிடிக்காத, நீர் ஒழுகாத உலோகத் தகட்டினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) ஓட்டல் பாவனைக்குப் பெறப்படும் நீர் மனிதப் பயன்பாட்டுக்கு உகந்தது என தேசிய நீர் வழங்கல் சபையினால் விநியோகிக்கப்படும் தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். தேசிய நீர் வழங்கல் சபையினால் வழங்கப்படும் நீர் ஓட்டலின் பாவனைக்காக பயன்படுத்தப்படுமாயின் குறித்த தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது என கருதப்படல் வேண்டும்.

(xiii) ஓட்டலின் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நீர் சேமித்து வைக்கப்படுமாயின் அவ்வாறு சேமித்து வைக்கப்படும் நீர் அசுத்தமாவதைத் தவிர்ப்பதற்காக போதியளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(xiv) வாடிக்கையாளர்களினால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனியாக ஓரிடம் ஓட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xv) வாடிக்கையாளர்களினதும், ஊழியர்களதும் பாவனைக்காக குறைந்தபட்சம் ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒன்று வீதம், ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித் தனியாக மலசல கூடங்களும், சிறுநீர் கழிவறைகளும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvi) ஒவ்வொரு மலசலகூடத்தினதும், சிறுநீர், கழிவறையினதும் சுவர்கள் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கற்களால் அல்லது கருங்கற்களினால் அல்லது சீமெந்துக் கற்களால் அல்லது கருங்கற்களினால் அல்லது துருப்பிடிக்காத உலோகத் தகடுகளினால் அமைக்கப்பட்டு, தரை சீமெந்தினால், காரை பூசப்பட்டு, சீமெந்தினால் சாந்து பூசப்பட்டு

அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதே போன்று மேலும் செங்கற்களினால் அல்லது சீமெந்து கற்களினால் அல்லது கருங்கற்களினால் ஆன சுவராயின் அவை காரை பூசப்பட்டு, சீமெந்தினால் செப்பனிடப்பட்டு அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் துருப் பிடிக்காத உலோகத் தகடுகளினால் ஆன சுவராயின் அவற்றின் மேற்பரப்பு பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(xvii) ஓட்டலில் சேவை புரியும் நபர்களது பாவனைக்காக குளியல் அறைகள் போதிய அளவில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். xvi ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட மலசல கூடங்களுக்குரிய நியதிகள் குறித்த குளியல் அறைகளின் தரை மற்றும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(xviii) ஓட்டலில் வாடிக்கையாளருடைய பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியினுள், வாடிக்கையாளர்கள் கை கழுவுவதற்காக துருப்பிடிக்காத உலோக தகடுகளினால் அல்லது வெண்களியினால் செய்து செப்பனிடப்பட்ட அல்லது செங்கற்களினால் அல்லது சீமெந்து கற்களினால் கட்டி பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்ட நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xix) ஓட்டலின் எந்த ஒரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் தடங்கலின்றி வழிந்தோடுவதற்கு உகந்த வடிகாலமைப்பு தொகுதி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xx) பிரதேச சபையினால் கழிவு நீரகற்றும் தொகுதியொன்று நடைமுறைப்படுத்தப்படுமாயின் விடுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் குறித்த கழிவு நீரகற்றும் தொகுதிக்கு வழிந்தோட ஏற்பாடு செய்யலாம். அவ்வாறு இல்லாதவிடத்து அந்த கழிவு நீர் உறிஞ்சிக்கொள்ளும் குழியொன்றிற்கு வழிந்தோட ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxi) ஓட்டலில் சாதாரண தீ அணைக்கும் உபகரணங்கள் வைக்கப்பட்டிருப்பதுடன் விடுதிக்கு மின்சார இணைப்பு பெறப்பட்டிருந்தால் மேலதிகமாக மின்சார தீயணைக்கும் உபகரணங்கள் வைக்கப்படல் வேண்டும்.

(xxii) ஓட்டலில் தேநீர், கோப்பி, பால் அல்லது வேறு பானங்கள் தயாரிக்கப்படும் பகுதி நீர் ஒழுகாத தகட்டினால் அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டு அல்லது வேறு தெளிவாக தெரியாத பொருளினால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xxiii) விடுதியில் வாடிக்கையாளருக்கு மற்றும் ஊழியருக்கு உறங்குவதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கை அறைகளில் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட இடப்பரப்பு குறைந்த பட்சம் 04 மீற்றருக்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு படுக்கை அறையிலும் உடைகளை வைப்பதற்கு அலுமாரி அல்லது கெபினட் ஒன்று, சிறிய அடுக்குள்ள மரச் சட்டம் (Rack) தங்கியிருப்பவரின் அல்லது தங்கியிருப்பவர்களின் பொருட்களை வைப்பதற்கான மேசை மற்றும் மலசலகூடத்துடனான குளியல் அறை ஒன்று இருத்தல் வேண்டும்.

(xxiv) ஓட்டலில் வாடிக்கையாளருக்கு மற்றும் ஊழியருக்கு உறங்குவதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கை அறைகளில் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட இடப்பரப்பு குறைந்த பட்சம் 7 மீற்றருக்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு படுக்கை அறையிலும் உடைகளை வைப்பதற்கு அலுமாரி அல்லது கெபினட் ஒன்று, சிறிய அடுக்குள்ள மரச் சட்டம் (Rack) தங்கியிருப்பவரின் அல்லது தங்கியிருப்பவர்களின் பொருட்களை வைப்பதற்கான மேசை மற்றும் மலசல கூடத்துடனான குளியல் அறையொன்று இருத்தல் வேண்டும்.

(xxv) அனுமதி பெறப்பட்ட ஓட்டலிலுள்ள படுக்கை அறையினுள் எந்த சந்தர்ப்பத்திலும். -

(அ) தனி அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்கள்.

(ஆ) இருவருக்கான அறையில் இரட்டைக் கட்டில் ஒன்று அல்லது தனிக் கட்டில் இரண்டுக்கு மேல்.

(இ) மூவருக்கான அறையில் இரட்டைக் கட்டில் ஒன்றும் தனிக்கட்டில் ஒன்றுக்கு மேல் அ்ல்லது தனிக் கட்டில்கள் மூன்றுக்கு மேல்,

(ஈ) குடும்பத்துக்கான அறையில் இரட்டைக் கட்டில்கள் இரண்டுக்கும் தனிக்கட்டில் ஒன்றுக்கும் அல்லது இரட்டைக் கட்டில் ஒன்றுக்கும் தனிக் கட்டில்கள் மூன்றுக்கும் அல்லது தனிக் கட்டில்கள் ஐந்துக்கும் மேல் இடப்படுதல் கூடாது.

7. பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டிய மற்றும் 4 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சகல பகுதிகளுக்கும் குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு தடவை பூச்சுக்கள் பூசுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

*8. அனுமதிப் பத்திரம் பெறப்பட்டுள்ள ஓட்டல் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் கூட்டிப் பெருக்கப்பட வேண்டும். அதேபோல் கழிவு நீர் வழிந்தோடும் வடிகால்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் வீதம் துப்புரவு செய்யப்பட்டு நீரினால் கழுவப்படுதல் வேண்டும்.*

*9. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டல் படுக்கை அறைகள் என உறுதியாக ஒதுக்கப்பட்டுள்ள அறையைத் தவிர வேறு எந்தவொரு அறையிலும் அல்லது வெற்றிடத்திலும் யாருக்கும் நித்திரைகொள்ள இடமளித்தல் ஆகாது.*

*10. 6 ஆம் சரத்தின் (xxiii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச இடப் பரப்பிற்கு பொருந்தாத எண்ணிக்கையான நபர்களை ஏதாவது படுக்கை அறையில் நித்திரைகொள்ள அனுமதிப் பத்திரம் பெற்றவர் இடமளித்தல் ஆகாது.*

*11. ஏதாவது ஓட்டலில் தனி அறையில் ஒரு நபருக்கு மேலாகவோ அல்லது இருவருக்கான அறையில் இருவருக்கு மேலாகவோ அல்லது மூவருக்கான அறையில் மூவருக்கு மேலாகவோ நித்திரை கொள்ள அனுமதிப் பத்திரம் பெற்றவர் அனுமதிக்கலாகாது. அவ்வாறாயினும் ஏதாவது அறையொன்றில் நித்திரைகொள்ளும் ஒருவர் பன்னிரண்டு வயதிற்குக் குறைந்தவராயின் இத் துணைச் சட்டத்தின் விடயங்கள் பொருத்தவரை அவர் ஒரு நபர் எனக் கருதப்படலாகாது.*

*12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட விடுதியில் தங்கியிருப்பதற்கு வருகை தரும் ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, மற்றும் அடையாளங் காணும் விபரங்களைப் பதியும் பதிவேடு ஒன்று ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட விடுதியிலும் பேணப்படல் வேண்டும். தலைவர் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது யாராயினும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரினால் பரிசீலனைக்காக கேட்கப்படும்போது குறித்த பதிவேட்டைப் பரிசீலிப்பதற்கு இடமளித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.*

*13. யாதாயினுமொரு தங்குவிடுதியில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நபரும் தனது அடையாளக் குறிப்புகளை அனுமதிப்பத்திரம் பெற்றவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஓட்டல் பேணப்படுகின்ற புதியவர்களின் பதிவேட்டில் தனது விபரங்கள் அடங்கிய கோட்டில் கையொப்பமிடல் வேண்டும். அதேபோன்ற தமது அடையாளங்களை சமர்ப்பிக்காத அல்லது புதியவர்களுக்கான பதிவேட்டில் மது அடையாளம் பற்றிய குறிப்புகள் அடங்கிய கோட்டில் கையொப்பமிடாத யாரும் விடுதியின் எந்தவொரு பகுதியிலும் தங்குவதற்கு இடமளிப்பது அனுமதிப் பத்திரம் பெற்றவரினால் செய்யப்படலாகாது.*

*14. எந்தவொரு ஓட்டலில் எந்தப் பகுதியிலும் ஒழுக்கக் கேடான காரியங்கள் நடைபெறுவதற்கு இடமளிக்காது பாதுகாப்பது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும். யாராவது ஒருவரினால் ஓட்டலில் வேறு தங்கியிருப்பவர்களுக்கு அல்லது ஓட்டலுக்கு அண்மையில் குடியிருப்பவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் பாட்டுப்பாடுதல் அல்லது சங்கீத உபகரணங்களை இயக்கிவிடுதல் அல்லது அநாவசியமாக கோசம் எழுப்புவதற்கு இடமளிக்காதிருப்பது அனுமதிப்பத்திரம் பெற்றவரது உடமையாகும்.*

*15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் ஒவ்வொரு படுக்கை அறையையும் ஒரு வாடிக்கையாளரினால் பாவிக்கப்பட்டதன் பின்னர் மற்றுமொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு இடமளிப்பதற்கு முன்னர் அப்படுக்கை அறையின் கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், போர்வைகள், துவாய்கள் மற்றும் பாவிக்கப்பட்ட வேறும் துணி வகைகள் ஆகியவற்றைக் கழுவி துப்புரவு செய்ததன் பின்னரே அன்றி வேறொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு வழங்கப்படுதல் தகாது. பிறகு வரும் வாடிக்கையாளருக்கு குறித்த அன்றைய பாவனைக்காக கொடுப்பதற்கு முன்னர் அறையின் யன்னல்கள் குறைந்த பட்சம் நான்கு மணித்தியாலங்களாவது பூரணமாக திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*16. ஒவ்வொரு அனுமதி பெற்ற ஓட்டலில் ஒவ்வோர் அறையும் படிக்கட்டும், மண்டபமும், வடிகாலும், மற்றும் அவ்விடத்துக்கு உரிய காணியும் தினசரி மத்தியானத்துக்கு முன்பதாக கூட்டிப் பெருக்குவதற்கு மற்றும் முறையாக துப்புரவு செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது அனுமதிப் பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.*

*17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டலின் எந்தவொரு அறையிலோ உணவு சமைக்கப்படும் இடத்திலோ அல்லது உணவு அருந்துவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலோ ஏதாயினும் பிராணியை வைத்திருக்கலாகாது.*

*18. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் உள்ள மலசல கூடங்கள் குறைந்த பட்சம் நாளுக்கு இரு தடவைகள் துப்புரவு செய்யப்பட்டு கிருமி நாசினி தெளிக்கப்படல் வேண்டும். துர்நாற்றம் வீசாத வகையில் பேணப்படல் வேண்டும். அவ்வாறாயினும் வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கும் அறைகளிலுள்ள மலசல கூடங்கள் நாளுக்கு ஒரு தடவை சுத்திகரிப்பது போதுமானதாக கருதப்படும்.*

*19. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் உணவுகள் மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும், வாடிக்கையாளரின் பாவனைக்கு பயன்படுத்தும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் பயன்படுத்துவதற்கு முன்பு நீர் கொண்டு கழுவப்படல் வேண்டும். அதேபோல் பாவனையின் பின்னரும் நீரினால் கழுவுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*20. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் அவ்வப் பகுதிகளில் குவியும் எல்லாவித குப்பைக் கூளங்களையும் 24 ஆம் சரத்தில் கூறப்பட்டுள்ளபடி வகைப்படுத்தி தெளிவாக காட்சியளிக்காத பொருளினால் ஆக்கப்பட்ட பாத்திரத்தினுள் உடனடியாக போடுவதற்கு*

ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான குப்பைக் கூளங்களை குறைந்த பட்சம் நாளில் ஒரு தடவை அல்லது தேவை ஏற்படின் அதிலும் கூடிய தடவைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அப் பாத்திரங்களில் குப்பைகளை இடும் போதும் அகற்றப்படும் போதும் தவிர ஏனைய எல்லா நேரங்களிலும் அப் பாத்திரங்கள் நன்கு மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

21. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டலிலிருந்து அகற்றப்படும் குப்பைக் கூளங்கள் எச்சந்தர்ப்பத்திலாயினும் தரையில் அல்லது கண்ட இடங்களில் போடப்படக் கூடாது.

22. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் காணப்படும் சகல கழிவுப் பொருட்களும் மீள் பாவனைக்கு பெறப்படுமாயின் அன்று அக் கழிவுப் பொருட்கள்.

(i) உயிரினக் கழிவுகள் ;
(ii) கண்ணாடி;
(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள்;
(iv) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீனால்/பிளாஸ்டிக்கினால் ஆன பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு, உலோகத் துண்டுகள் ;
(vi) உற்பத்திக்காகப் பயன்படும் வேறு மூலப் பொருட்களிலிருந்து தோன்றும் பொருட்கள் அல்லது பகுதிகள் ;
(vii) வேறு வகையான கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு வகைப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு வகைக் கழிவுப் பொருட்களையும் இடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தாங்கி (Tank) களில் இடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தப்படுமாயின் அன்றி தலைவரினால் கூறப்பட்டுள்ள பிரகாரம் இறுதியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

23. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் எலிகள், ஈக்கள் அல்லது வேறு பூச்சிகள் இல்லாதவாறு பேணப்படல் வேண்டும். அந்த ஓட்டலில் வைத்திருக்கும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களும் தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் மேற்கூறப்பட்ட பிராணிகளால் கெடுதி செய்யப்படுவதனை தவிர்ப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளும் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் செய்யப்பட வேண்டும்.

24. வாடிக்கையாளருக்கு உணவு பரிமாறும்போது அவற்றை கையினால் தொடக்கூடாது. அவற்றைப் பரிமாறுவதற்கு கரண்டி, முள்ளு அல்லது வேறு வகையான உபகரணங்கள் பயன்படுத்துதல் வேண்டும்.

25. எந்தவொரு அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலிலாவது தரக்குறைவான குளிரூட்டப்பட்ட பால் வைத்திருக்கலாகாது. இவ் விதியின் பிரகாரம் தரக்குறைவான குளிரூட்டப்பட்ட பால் என்பதனால் நீர் அல்லது வேறு பொருள் கலக்கப்பட்ட அல்லது கொழுப்பற்ற பால் கனப் பொருட்கள் 85% க்கு குறைவான அல்லது பால் கொழுப்பு 35% க்கு குறைவான பசும் பால் அல்லது கொழுப்பற்ற பால் கனப்பொருள் 9% க்கு அல்லது பால் கொழுப்பு 7% க்கு குறைவான எருமைப் பால் கருத்தில் கொள்ளப்படும்.

26. (அ) யாதாயினும் தொற்று, பரவும் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவர் அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்குப் பணிவிடை செய்த ஒருவர் குறித்த நோய்க் காவி அல்லது நோயரும்பும் கால எல்லை கடந்திருந்தால் அன்றி எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட விடுதியிலும் எவ்விதமான காரியத்தில் ஈடுபடுவதற்கு அல்லது காரியமாற்றும் ஒருவருக்கு உதவி செய்வதற்கு அல்லது விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படலாகாது.

(ஆ) நன்கு தோய்த்து சுத்திகரிக்கப்பட்ட ஆடை அணிந்திருந்தால் அன்றி எந்த ஒரு நபரினாலும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட விடுதியில் எவ்வகையான வேலையிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் செய்யப்படாததாகும்.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஓட்டல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களை குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

27. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டல் உணவுகளை அல்லது பானங்களை தயாரிப்பதில் ஈடுபடுகின்ற சகல ஊழியர்களுக்கும் மேலங்கி (Apron) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஊழியர்கள் கருமங்களில் ஈடுபடும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்த மேலங்கியினை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

*28. அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் சேவை புரியும் அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களை சுத்திகரிப்பதற்கான தூரிகை மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்கார நீர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*29. இப் பிரிவின் துணை விதிகளின் நியதிகளைப் பரிசீலிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவருக்கு பரிசீலிப்பதற்காக அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பதற்கு ஓட்டலில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சந்தர்ப்பமும் கருத்தில் கொள்ளப்படும்.*

*30. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் யாதாயினுமொரு அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓட்டலில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு உணவு வகையின் மாதிரியொன்றை அதற்கான விலையைக் கொடுத்து வாங்குதல் சட்ட ரீதியானதாக வேண்டுமே ஒழிய எந்த ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவரினாலும் அவ்வாறு விலைகொடுத்து கொள்வனவு செய்வதனை எதிர்பார்க்கவோ அல்லது அதற்கு இடையூறு விளைவிக்கவோ கூடாது.*

*31. இத் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு தங்கு ஓட்டலினை நடாத்திச் செல்லும் இடம் 6 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு நியதிக்கு இணங்க நடாத்திச் செல்வது முடிவடைந்தாலோ இந்த பிரிவின் துணைச் சட்டங்களிலோ அல்லது வேறு யாதாயினுமொரு துணை விதியின் நியதிகளுக்கு மாறாக நடக்கும் சந்தர்ப்பத்தில், உறுதியாகக் கூறப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்விடம் குறித்த நியதிகளுக்கு இணக்கமான நிலைமைக்கு உட்படுத்துவதற்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஓர் அறிவித்தல் தலைவரினால் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.*

*32. மேலே 31 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்ட வகையிலான அறிவித்தல் ஒன்று கிடைக்கப்பெற்ற யாராயினுமொரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் மூலம் அவ் அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்பு அவ் அறிவித்தலில் கூறப்பட்டுள்ளபடி நடந்துகொள்ள ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தால் அவ் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்ட திகதியை நீடிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் நீடிக்கப்படுகின்ற காலம் 14 நாட்களுக்கு மேற்படலாகாது.*

*33. மேலே 31 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட வகையிலான ஓர் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற அனுமதிப் பத்திரம் பெற்ற ஒருவரினால் அவ் அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்பு அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு நடந்து கொள்ளத் தவறும் சந்தர்ப்பத்தில், அவ் ஓட்டலுக்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தலைவரினால் ரத்து செய்யப்படுதல் சட்டரீதியாதல் வேண்டும்.*

*34. இத்துணைச் சட்டங்களில் ஏதாவது ஒரு சரத்து அல்லது சரத்தில் காணப்படும் நியதிகள் அல்லது கட்டளையை மீறுதல் அல்லது கட்டளையை மீறுதல் அல்லது உடைத்தெறித்தல் அல்லது பின்பற்றாவிடல் குற்றச் செயலாதல் வேண்டும்.*

*35. 34 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாயினும் ஒரு குற்றம் தொடர்பில் முறையான அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்க்கப்பட்டதன் பின்னர் அக் குற்றம் சம்பந்தமாக 1987 இலக்க 15 ஐக் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது சரத்தின் (2) ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள 750/- க்கு மேற்படாத தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும்.*

*36. 34 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு குற்றம் தொடர்பாக முறையான அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டால் 35 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட அல்லது அந்த சட்டமீறலைக் கருத்தில் கொண்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற வேறோர் அலுவலரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதன் பின்னர் யாராவது ஒரு நபரினால் குறித்த உடைத்தெறிதல் அல்லது சட்டமீறல் தொடர்ந்தும் செய்யப்படுகின்ற ஒவ்வொரு தினத்திற்குமாக மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது சரத்தின் (2) ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டனைக்கும் உட்படுதல் வேண்டும்.*

*37. சொற்பிரயோகம் தொடர்பில் மற்றுமொரு கருத்து தேவைப்பட்டால் அன்றி, இத்துணைச் சட்டங்களில்.-*

(i) *''ஓட்டல்''என்பது விற்பனைக்காக சோறு மற்றும் கறிகள் சமைக்கும் அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிப்படுத்தப்படும் இடம் ஒரு வேளை உணவுக்கு உகந்த வேறு ஏதாவது சமைக்கப்பட்ட உணவுவகைகள் அல்லது ஏதாவது சிற்றுண்டி வகைகள் விற்பனைக்காக தயாரிக்கப்பட்ட அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிப்படுத்தப்படும் இடம் அக் காரியங்களுடன் வாடிக்கையாளர்கள் தங்குவதற்கு இடவசதி செய்து தரும் இடம் எனக் கருதப்படும்.*

(ii) ஓட்டலின் ஒவ்வொரு அறையினதும் சுவர்கள் மூன்று மீற்றருக்குக் குறையாத உயரம் கொண்டவையாக இருக்க வேண்டியதுடன், சுவர்கள் செங்கற்களால், சீமெந்து கற்களால் அல்லது கருங்கற்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். சுவர்களின் இரு புறங்களும் காரை பூசப்பட்டு பூச்சுகள் பூசப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப் பலகைகளால் அல்லது வேறு ஏதாவது உலோக தகடுகளினால் அமைக்கப்பட்டு பூச்சு பூசப்பட்டிருத்தல் இந்த நியதிகளுக்கு அமைந்தனவாகக் கருதப்படலாம்.

(iii) ஓட்டலின் ஒவ்வோர் அறையிலும் உட் கூரை (Ceiling) வீதம் பொருத்தப்பட்டு இருக்க வேண்டியதுடன் அது தரையிலிருந்து குறைந்தபட்சம் மூன்று மீற்றருக்கு குறையாத உயரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வோர் அறையிலும் திறக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையின் யன்னலும் திறந்திருக்கும் போது அதன் பரப்பளவு அறையினது தரையின் பரப்பளவில் ஆறில் ஒரு பங்குக்குக் குறைவாக இருத்தலாது. அவ்வாறெனினும் ஏதாவது ஓர் அறை குளிரூட்டப்பட்டிருக்கும் வேளையில் இந் நியதி பொருத்தம் உடையதாகாது.

(v) கூரை ஏதாவது நிரந்தர பொருளைக் கொண்டு வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) கூரையின் ஓரங்கள் தரை மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கோடிகளின் அளவு குறைந்த பட்சம் 1.5 மீற்றராக இருத்தல் வேண்டும்.

(vii) ஒவ்வோர் அறையினதும் தரை சீமெந்து இட்டு, காரையிட்டு சீமெந்து சாந்தினால் ஒப்பரவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது பீங்கான் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஓட்டலினுள் குவியும் குப்பைக் கூளங்களை சேகரிப்பதற்காக குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன் சமையில் அறையில் வைக்கப்படும் குப்பைக் கூடைகள் ஈக்கள் அல்லது வேறு ஜந்துக்கள் நுழைய முடியாத வகையில் மூடிகளைக் கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

(ix) வளவுக்குள் குவியும் குப்பை கூழங்களை அகற்றுவதற்காக 24 ஆவது சரத்தின் நியதிகளுக்கு இணங்க செயற்படக்கூடியதாக ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை "அ"**

*3 ஆம் சரத்து*

1. விண்ணப்பதாரியின் பெயர்: ..........................................................................................

2. விண்ணப்பதாரியின் முகவரி : ..........................................................................................

4. ஓட்டலின் பெயர்:- ..........................................................................................

5. ஓட்டலில் நடாத்திச் செல்லப்படும் முகவரி:..........................................................................................
..........................................................................................

6. வரி மதிப்பீட்டு இலக்கம்: ............................................... வீதி/தெரு:- ..........................................................................................

7. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம்:- ..........................................................................................

8. ஓட்டல் நடாத்திச் செல்லப்படும் இடம் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு:- ..........................................................................................
..........................................................................................

9. ஓட்டல் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருப்பின் பதிவு இலக்கம்:- ..........................................................................................

10. ஓட்டல் ஆரம்பிக்கப்பட்ட திகதி:- ..........................................................................................

11. ஓட்டல் முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாயின் அதன் மூலம் கடந்த வருடத்தில் பெறப்பட்ட மொத்த வருமானம்:- ...................
..........................................................................................

12. முகாமையாளரின்/பொறுப்பாளரின் பெயர்:- ..........................................................................................

13. தொலைபேசி இலக்கம்:- .........................................................

14. அனுமதிப் பத்திரம் கோரும் ஆண்டு:- ..........................................................................................

15. ஓட்டலில் உள்ள -
   (i) தனி அறைகளின் எண்ணிக்கை:----.
   (ii) சோடி அறைகளின் எண்ணிக்கை:----.
   (iii) மூவருக்கான அறைகளின் எண்ணிக்கை:----.
   (iv) குடும்ப அறைகளின் எண்ணிக்கை:----.
   (v) ஒரே நேரத்தில் தங்கக் கூடியவர்களின் எண்ணிக்கை:----.

16. ஹோட்டலில் சேவையிலுள்ள ஊழியர் எண்ணிக்கை (முகாமையாளர் உட்பட): ----.

17. மலசல கூடங்கள்
   (i) ஆண் ஊழியர் மலசலகூட எண்ணிக்கை:----.
   (ii) பெண் ஊழியர் மலசலகூட எண்ணிக்கை:----.
   (iii) கொடுக்கல் வாங்கல் செய்யும் ஆண் மலசலகூட எண்ணிக்கை:----.
   (iv) கொடுக்கல் வாங்கல் செய்யும் ஆண் மலசலகூட எண்ணிக்கை:----.
   (v) கொடுக்கல் வாங்கல் செய்யும் பெண் மலசலகூட எண்ணிக்கை:----.

18. குளியல் அறைகள்:-
   (i) ஆண்களுக்கான குளியல் அறைகள்:-----.
   (i) பெண்களுக்கான குளியல் அறைகள்:-----.

19. சமையல் அறைகளின் எண்ணிக்கை:-----.

20. நீர் வழங்கும் மூலங்கள் (கிணற்று நீர்/குழாய் நீர்/ஆற்று நீர்):----.

21. திண்மக் கழிவுப் பொருட்கள் இறுதியாக அகற்றப்படும் முறை:-

22. இரவில் வெளிச்சம் வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள்:-

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையும், சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஓட்டல் ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணை விதிகளின் நியதிகளைப் பின்பற்றுவதற்கு உடன்படுகின்றேன். குறித்த துணை விதிகளின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட பெயரைக் கொண்ட ஓட்டலினை நடாத்திச் செல்வதற்கு ....................... ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி: .................

............................................................
உரிமையாளர்/முகாமையாளர்/பொறுப்பாளரின்
கையொப்பம்.

அலுவலக உபயோகத்திற்காக

சுகாதார வைத்திய அலுவலர்
இந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஓட்டலினை பரிசீலித்து அறிக்கையொன்றை அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

...............................................................................
சபைச் செயலாளர்.

திகதி:..................

தலைவர் அவர்கள்,
பிரதேச சபை.

இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஓட்டலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதனை சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

............................................................
சுகாதார வைத்திய அலுவலர்.

..................................
திகதி

---

இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஓட்டலுக்கு ................................... ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா ..................... அறவிடுவதனை சிபாரிசு செய்கின்றேன்.

.....................................................................
வருமான பரிசோதகர்/வருமான நிர்வாகத்தர்.

திகதி:...................

அனுமதிப்பத்திரம் வழங்குவதை அனுமதிக்கின்றேன்./அனுமதிக்கவில்லை.

திகதி:..................

...........................................
சபையின் செயலாளர்.

---

அனுமதிப் பத்திரம் வழங்குவதனை அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை.

திகதி:..................

...........................................
தலைவர்

---

அறவிடப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணம்:-
திகதி:-
ரசீது இலக்கம்:-
அனுமதிப்பத்திர இலக்கம்:-

### *பகுதி 19*
### இறைச்சி விற்பனை

*1.* பிரதேச சபை எல்லைப் பிரதேசத்தினுள் இறைச்சி விற்பனை நிலையங்களை பரிசோதனை செய்தல், ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்.

*2.* எவரேனும் ஒருவர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட (பொது விற்பனை நிலையம்) ஏதேனும் ஓர் இடத்தில் தவிசாளரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி இறைச்சி விற்பனைக்காக எந்த இடத்தையும் பயன்படுத்தல் ஆகாது.

*3.* அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்படும் விற்பனை நிலையம் இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவுற்றிருந்தாலே அன்றி, தவிசாளரினாலோ அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்ட அதிகாரியினாலோ எவரேனும் நபர் ஒருவருக்கு இறைச்சி விற்பனை நிலையமொன்றை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் ஆகாது:-

(i) கட்டிடம் தவிசாளரினால் அங்கீகாரமளிக்கப்பட்ட திட்டவரைபுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) விற்பனைக்காக இறைச்சி காட்சிப்படுத்த வைக்கப்படும் இடம் பீங்கான் கல் அல்லது சீமெந்து பூசப்பட்டு அல்லது துருப்பிடிக்காத உலோகத்தினாலேயே அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தும் இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் இடத்தில் தரை சீமெந்து பூசப்பட்டு அல்லது பீங்கான் கல் (மாபில்) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) கழிவுநீர் வடிந்தோடுவதற்கு ஏற்ற விதத்தில் சரிவுடன் கூடிய சீமெந்து பூசப்பட்ட அல்லது பீங்கான் கல் (மாபில்) பதிக்கப்பட்ட வாய்க்கால் இருத்தல் வேண்டும்.

(v) மேலே iv ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வாய்க்காலினூடாக வடிந்து செல்லும் கழிவுநீர் பெரிய நீர் நிலையொன்றுக்கு வடிந்து செல்வதைத் தடுப்பதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதனது கழிவுநீர் உறிஞ்சிக்கொள்ளும் குழி ஒன்றுக்கு செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) கழிவுநீர் வடிந்தோடுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ள குழி வளிஉட்செல்ல முடியாதவாறு மறைக்கப்பட்டிருத்தல் ஆகாது.

(vii) இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் உயிரியல் கழிவுகளை இடுவதற்கு போதுமான கூடங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அன்றாட விற்பனை நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் அக் கழிவுகள் நிலத்துக்குக் கீழ் 1.5 மீற்றர் ஆழத்தில் புதைக்கப்படுதல் வேண்டும். அல்லது சபையினால் ஏற்கனவே, தீர்மானிக்கப்பட்டு கட்டளையிடப்பட்டுள்ள முறைக்கேற்ப அவற்றை கழிவகற்றல் வேண்டும்.

(viii) விற்பனை நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பாவனைக்காக போதுமான அளவு நீர் வசதிகளுடன், கூடிய மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மலசலகூட பாவனையின் பின்னர் பயன்படுத்துவதற்கு பொருத்தமான சுகாதார நலமுறைகளும் மற்றும் தேவையான பொருட்களும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*4.* மிருகக் கொலைகட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் முறையான அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுள்ள அல்லது மடுவத்தில் கொலைசெய்யப்படும் ஏதேனும் பிராணியின் இறைச்சியையோ அன்றி ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையமொன்றில் விற்பனைக்காக அல்லது விற்பனை பொருட்காசிப்படுத்தவோ கூடாது.

*5.* கொசுக்கள், பூச்சிகள் அல்லது ஏதேனும் பிராணி உட்செல்ல முடியாத விதத்தில் நன்றாக மூடிவைக்க முடியுமான ஓர் வாகனத்தில் அல்லது பெட்டி ஒன்றில் அல்லது வேறு ஏதேனுமொரு தட்டத்தில் வைத்து மூடப்பட்ட அமைப்பில் கொண்டு சென்றாலே அன்றி எவரேனும் நபர் ஒருவர் ஏதேனும் இறைச்சியை கொண்டு செல்லல் ஆகாது. அவ்வாறு இறைச்சி கொண்டு செல்லப்பட்ட பின்னர் அதற்காக பயன்படுத்திய வாகனத்தை அல்லது பெட்டியை அல்லது கூடத்தை நுண்ணுயிர் நாசினிகள் இட்டு நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

*6.* அனுமதிப்பத்திரம் பெனர் ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையமொன்றின் அன்றாட நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர் அவ்விடத்தின் தரையை பீங்கான் கல் பதிக்கப்பட்ட அல்லது சீமெந்து பூசப்பட்ட சுவர்களையும், இறைச்சி வெட்டுவதற்காக பயன்படுத்திய குற்றிகளையும், உபகரணங்களையும் இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்ட இடத்தையும் நுண்ணுயிர் திரவ நாசினிகள் இட்டு சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*7.* அனுமதிப்பத்திரம் பெற்ற ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையமொன்றை சுற்றியுள்ள வாய்க்கால் இறைச்சி களஞ்சியப்படுத்தல் பகுதி ஒழுங்குபடுத்தல் பகுதி அல்லது விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட அனைத்து கூடங்கள் உபகரணங்கள் என்பனவற்றை சிறந்த பராமரிப்புடனும் துர்நாற்றம் அற்றவிதத்திலும் பேணுவதற்கு வழிவகைசெய்தல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட விற்பனை நிலையத்தில் அன்றாட நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் விற்கப்படாத எஞ்சிய இறைச்சி அதிகுளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்படுமாயின், அவ்வளவும் களஞ்சியப்படுத்திய நேரத்தில் இருந்து அடுத்த நாள் இறைச்சி விற்பனைக்காக விற்பனை நிலையம் திறக்கப்படும் வரை அதிகுளிரூட்டி உரிய முறையில் செயல்பாட்டில் இருந்தாலே அன்றி எஞ்சிய ஏதேனும் இறைச்சியை அடுத்த நாள் விற்பனை செய்வதோ விற்பனை செய்வதற்கு களஞ்சியப்படுத்துவதோ கூடாது.

9. ஏதேனுமொரு மிருகக் கொலைமடுவத்தில் ஏதேனுமொரு தினத்தில் இறைச்சிக்காகப் பிராணிகளை கொலை செய்வதைத் தடைசெய்யும் பொருட்டு மிருகக் கொலை கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான அதிகாரங்களின்படி உரிய அதிகார பீடத்திலிருந்து விடுக்கப்படும் கட்டளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும்போது ஏதேனுமொரு இறைச்சிக் கடையில் விற்பனைக்காக இறைச்சியை வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் ஆகாது.

10. உத்தரவுபெற்ற ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையம் நாய், பூனை, எலி, பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் அற்று இருத்தல் வேண்டும்.

11. உத்தரவுபெற்ற இடத்தில் இறைச்சியை இடுவதற்கு அல்லது ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது விற்பனைக்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் தவிர வேறு எந்த பாத்திரமோ அல்லது உடையோ அல்லது உறங்கும் பாயோ அல்லது வேறு எந்தவொரு பொருளையும் வைத்திருத்தல் ஆகாது.

12. உத்தரவு பெற்ற இடத்தில் பணிபுரியும் நபர்களின் பாவனைக்கு எடுப்பதற்கு போதுமான அளவுநீர் வசதி இருத்தல் வேண்டும்.

13. (அ) ஏதேனும் தொழுநோய் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் அவ்வாறான ஒரு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவரேனும் நபர் அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்த எவரேனும் ஒரு நபர் அந்தநோய் பீடித்தல் மற்றும் அதன் அறிகுறிகளின் காலம் கடந்துவிட்டாலே அன்றி ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையமொன்றில் எவ்வாறானதொரு பணியிலோ அல்லது அவ்வளவு விற்பனையில் ஈடுபாடுள்ள ஒருவரது உதவியாளராகவோ பணிபுரிதல் அல்லது பணியில் ஈடுபடுதல் அல்லது ஏதேனும் ஒரு பணியில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாக துவைக்கப்பட்ட சுத்தமான ஆடைகளை அணிந்திருந்தாலே அன்றி எவரேனும் நபர் இறைச்சி விற்பனை நிலையமொன்றில் எவ்வாறானதொரு பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(இ) இறைச்சி விற்பனை நிலையத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் வருடத்திற்கு ஒரு முறையாவது வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துதல் உரிமையாளரின் பொறுப்பாகும்.

14. இறைச்சி விற்பனை நிலையத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் தனியான பாதுகாப்பு கவசங்கள், கையுறைகள் மற்றும் தேவையான வேறு பாதுகாப்பு உடைகள் வழங்கப்படல் வேண்டும். அத்தோடு அவர்கள் இறைச்சி விற்பனை நிலையத்தில் பணிபுரியும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அப்பாதுகாப்பு உடைகள் அணிந்திருப்பதை உறுதிசெய்வதும் அனுமதிப்பத்திர உரிமையாளரின் பணியாளராக இருத்தல் வேண்டும்.

15. தவிசாளரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனும் இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் அல்லது உள்ளே களஞ்சியபடுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் இறைச்சி வகைகளின் மாதிரி ஒன்றினை அதனது விலையைச் செலுத்தி பெற்றுக்கொள்வது சட்டரீதியானது என்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திர உரிமையாளர் அவ்வாறானதொரு கொடுக்கல் வாங்கலை நிராகரிக்கவோ அல்லது அதற்கு தடை ஏற்படுத்தவோ கூடாது.

16. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பரிமாறப்படும் அனைத்து கழிவுப் பொருட்களும் மீள் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்டாலே அன்றி அக் கழிவுகள்.

(i) உயிரினக் கழிவுகள் ;
(ii) கண்ணாடி;
(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள்;
(iv) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீனால்/பிளாஸ்டிக்கினால் ஆன பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு, உலோகத் துண்டுகள் ;
(vi) உற்பத்திக்காகப் பயன்படும் வேறு மூலப் பொருட்களிலிருந்து தோன்றும் பொருட்கள் அல்லது பகுதிகள் ;
(vii) வேறு வகையான கழிவுப் பொருட்கள்;

(ஆ) மேலே இல. (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் வகைப்படுத்தி கூடங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டு, கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் கழிவகற்றல் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் நீர் கழிவகற்றும் செயற்பாட்டாலே அன்றி பிரதேச சபையின் தவிசாளர் கட்டளையிடும் முறைக்கு ஏற்ப இறுதி கழிவகற்றல் நடைபெறுதல் வேண்டும்.

எனும் வகையில் பாகுபாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு வகை கழிவுப் பொருட்களையும் இடுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள வெவ்வேறான கூடங்களில் அல்லது தொட்டிகளில் இடுவதற்கு நடவடிக்கை எடுப்பது உத்தரவுப் பத்திரம் பெற்ற உரிமையாளரின் பணியாகும்.

17. இந்த துணைவிதியின் கீழ் உத்தரவுப் பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனும் இறைச்சி விற்பனை செய்யும் நிலைமொன்று 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கட்டளையும் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் வேறு ஏதேனும் துணை விதிகளுக்கு முரணாக அமையும்போது குறித்தொதுக்கப்பட்ட ஒரு தினத்திற்கு முன்னால் அவ்விடத்தை அக்கட்டளையின் பிரகாரமான நிலைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்று, தவிசாளரினால் அவ் உத்தரவுபெற்றவருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

18. மேலே 17 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடியான ஒரு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்தவொரு உத்தரவுபெற்ற உரிமையாளரும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னால் அவ்வறிவித்தலில் கட்டளையிடப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளமுடியுமான காரணங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்புச் செய்ய தவிசாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஆயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதி 14 நாட்களுக்கு மேற்படலாகாது.

19. மேலே 18 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறையிலான அறிவித்தல் ஒன்று கிடைக்கப்பெற்ற எந்தவொரு உத்தரவுப் பத்திரம் பெற்றவரும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அல்லது நீடிப்பு செய்யப்பட்ட திகதிக்கு முன்னர் அவ்வறிவித்தலில் கட்டளைப் பிரகாரம் செயற்படுவதை பகிஷ்கரிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரம் பிரதேச சபை தவிசாளரினால் இரத்து செய்யப்படுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

20. இத் துணைவிதிகளில் குறிப்பிடப்படும் எவையேனும் ஏற்பாடுகளை மீறுவது குற்றமொன்று ஆவதுடன் குறித்த நபருக்கு உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கு ஏற்ப தண்டப் பணம் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

21. சொற்களுக்கிடையில் வேறுபொருள் கோரல் தேவைப்பட்டாலே அன்றி இப் பிரிவின் துணைவிதிகளின் இறைச்சி என்று மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டு இறைச்சி ஆகிய இறைச்சி வகைகள் எனப்பொருள்படும்.

### பகுதி 20
### மீன் விற்பனை சம்பந்தமான துணைச் சட்டம்

1. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது சரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய குறித்த சட்டத்தின் 126 ஆவது சரத்தின் (ix) ஆம் உப சரத்தின் (ix) பந்தியின் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் பிரகாரம் பிரதச சபையினால் மீன் விற்பனை தொடர்பான துணைச் சட்டம் இதனால் பிறப்பிக்கப்படுகிறது.

2. இத்துணைச் சட்டம் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மீன் விற்பனை தொடர்பான துணைச் சட்டம் என அழைக்கப்படும்.

3. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மீன் விற்பனை செய்யும் இடங்களைப் பரிசீலித்தல், ஒழுங்குறுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் என்பவற்றுக்காக இந்த துணைச் சட்டம் பிறப்பிக்கப்படுகிறது.

4. எந்த ஒரு நபரினாலும் வர்த்தக நிலையம் அல்லாத வேறு எந்த இடத்திலாவது தலைவரினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இல்லாது மீன் விற்பனை செய்வதற்காக ஓரிடத்தைப் பயன்படுத்தல் ஆகாது.

5. 4 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறித்த கட்டணமானது ஒவ்வொரு வருடத்துக்காகவும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் தலைவரினால் பிரசுரிக்கப்பட்டுள்ள விதத்தில் அமைதல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு கோரிக்கை விடப்படும் இடம் இதன் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கு இயைபுடையதாதல் அன்றி தலைவரினால் எந்த ஒரு நபருக்கும் மீன் விற்பனை செய்யும் இடமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் ஆகாது:-

(அ) மீன் விற்பனை செய்யப்படும் இடம் பிரதேச சபையின் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய அமைக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) விற்பனை செய்வதற்காக மீன்கள் காட்சிப்படுத்தப்படும் பகுதி பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டதாக அல்லது காரை பூசப்பட்டதாக அல்லது துருப்பிடிக்காத உலோக தகடுகளினால் ஆனதாக இருத்தல் வேண்டும்;

(இ) விற்பனை செய்வதற்காக மீன்கள் காட்சிப்படுத்தப்படும் இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டதாக அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்;

(ஈ) கழிவு நீர் வழிந்து ஓடுவதனை இலகுபடுத்துவதற்கு தேவையான சரிவுடனான சீமெந்துச் சாந்து பூசப்பட்ட அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்ட வடிகால் அமைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்;

(உ) (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்ட வடிகாலின் ஊடாக வழிந்து ஓடும் கழிவு நீர் ஏதாவது பகிரங்க நீரோட்டத்தை நோக்கிப் பாய்வதனைத் தவிர்ப்பதற்கு போதிய ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டியதுடன், அக் கழிவுநீர் உறிஞ்சக் கூடிய குழியொன்றில் பாய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஊ) கழிவு நீர் வழிந்தோடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட உறிஞ்சக் கூடிய குழியானது காற்று புகும் விதத்தில் திறந்து வைக்கப்பட்டிருத்தல் ஆகாது;

(எ) மீன் விற்பனை நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் உயிரினக் கழிவுப் பொருட்களை இட்டு வைப்பதற்கு போதியளவு பாத்திரங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன், நாளாந்த விற்பனை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் 1.5 மீற்றர் ஆழத்தில் புதைக்கப்படல் அல்லது பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படும் நிர்ணயங்களுக்கு இணங்க பிரதேச சபையின் குப்பைக்கூளங்கள் சேகரிக்கப்படும் வாகனத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(ஏ) மீன் விற்பனை நிலையத்தில் சேவை புரிகின்ற நபர்களின் பிரயோசனத்துக்காக போதியளவு நீர் முத்திரையிடப்பட்ட மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் மலசல கூடப் பாவனையின் பின்னர் பயன்படுத்துவதற்காகா உகந்த சுகாதாரப் பாதுகாப்பு முறைகளும், பொருட்களும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஐ) மீன் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதனைக் கொள்வனவு செய்பவரிடம் கொடுக்கும் போது தகுந்த மறைப்பினால் சுற்றி அல்லது உறையினுள் இட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

7. ஈக்கள், பூச்சிகள் அல்லது வேறு பிராணிகள் உள்ளிட முடியாத விதத்தில் நன்றாக மூடி வைக்கக் கூடிய வாகனத்தில் அல்லது பெட்டியில் அல்லது வேறு ஏதாவது பாத்திரத்தில் மூடிய நிலையில் கொண்டு செல்லப்படுமானால் அன்றி எந்த ஒருவராலும் எவ்விதமான மீன் இனத்தையும் கொண்டு செல்லுதல் ஆகாது என்பதுடன், அவ்வாறு மீன்களைக் கொண்டு சென்ற பின்னர், கொண்டு செல்வதற்காக பயன்படுத்திய வாகனம், பெட்டி அல்லது வேறு பாத்திரங்கள் கிருமி நாசினி இட்டு நன்றாக கழுவப்படுதல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்த ஒரு மீன் விற்பனை நிலையத்திலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வடிகால்களும், மீன்களைக் களஞ்சியப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பாக பயன்படுத்தும் சகல பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் புதியன போன்று மட்டுமல்லாது துர்நாற்றம் அற்றனவாயும் வைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தின் நாளாந்த விற்பனை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், விற்க முடியாது எஞ்சிய மீன்களை அதி குளிரூட்டிப் பெட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தால், அவ்வாறு களஞ்சியப்படுத்திய தருணத்திலிருந்து அடுத்த நாள் மீன் விற்பனைக்காக நிலையம் திறக்கப்படும் தருணம் வரையும் அந்த அதிகுளிரூட்டிப் பெட்டிகள் உரிய முறையில் இயங்க விடப்பட்டிருந்தால் அன்றி எஞ்சியுள்ள எந்த ஒரு மீன் இனமும் அடுத்த நாளில் விற்பனை செய்தல் விற்பனைக்காக காட்சிப்படுத்துதல், அதிகுளிரூட்டிப் பெட்டிகளில் அல்லது அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் வைத்திருத்தல் தகாது.

10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் மீன்களை வைத்திருப்பதற்கு அல்லது ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர வேறெந்த பொருளோ, உடைகளோ நித்திரைகொள்ளும் பாயோ அல்லது வேறு எவ்விதப் பொருட்களோ வைத்திருத்தல் ஆகாது.

11. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்த ஒரு மீன் விற்பனை நிலையமும் நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சிகள் இல்லாத நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

12. (அ) யாதாயினும் தொற்று, பரவும் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவர் அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்குப் பணிவிடை செய்த ஒருவர் குறித்த நோய்க்காவி அல்லது நோயரும்பும் கால எல்லை கடந்திருந்தால் அன்றி எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட மீன் விற்பனை நிலையத்திலும் எவ்விதமான காரியத்தில் ஈடுபடுவதற்கு அல்லது காரியமாற்றும் ஒருவருக்கு உதவி செய்வதற்கு அனுமதிக்கப்படலாகாது.

(ஆ) நன்கு தோய்த்து சுத்திகரிக்கப்பட்ட ஆடை அணிந்திருந்தால் அன்றி எந்த ஒரு நபரினாலும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட மீன் விற்பனை நிலையத்தில் எவ்வகையான வேலையிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளித்தல் கூடாது.

(இ) அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட மீன் விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களை குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

*13.* மீன் விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பான முக மறைப்பு, கையுறைகள் மற்றும் தேவைப்படும் வேறும் பாதுகாப்புக்கான அணிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மீன் விற்பனை நிலையத்தின் ஊழியர்கள் மீன் விற்பனை நிலையில் ஈடுபடுகின்ற எல்லை சந்தர்ப்பங்களிலும் குறித்த பாதுகாப்பு அணிகளை அணிந்திருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

*14.* அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் சேவை புரிகின்ற ஒவ்வொரு நபரும் பயன்படுத்திக் கொள்வதற்காக சவர்க்காரம் அல்லது சவர்க்கார திரவம் வைத்திருக்க வேண்டியது அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

*15.* இப்பிரிவின் துணை விதிகளின் நியதிகளைப் பரிசீலிப்பதற்கு தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவருக்கு பரிசீலிப்பதற்காக அதிகாரம் கிடைக்க உரிய காலம் என்பதற்கு மீன் விற்பனை நிலையத்தில் மீன் விற்பனை மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சந்தர்ப்பமும் கருத்தில் கொள்ளப்படும்.

*16.* (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட மீன்பிடி நிலையத்தினுள் காணப்படும் சகல கழிவுப் பொருட்களும் மீள் பாவனைக்கு பெறப்படுமாயின் அன்று அக் கழிவுப் பொருட்கள்.-

(i) உயிரினக் கழிவுகள்;
(ii) கண்ணாடி;
(iii) கடதாசி அல்லது கடதாசியிலான பொருட்கள்;
(iv) பொலித்தீன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீனால்/பிளாஸ்டிக்கினால் ஆன பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு, உலோகத் துண்டுகள்;
(vi) உற்பத்திக்காகப் பயன்படும் வேறு மூலப் பொருட்களிலிருந்து தோன்றும் பொருட்கள் அல்லது பகுதிகள்;
(vii) அபாயகரமான கழிவுப் பொருட்கள்.

என வகைப்படுத்துதலின் கீழ் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு வகை கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு வகைக் கழிவுப் பொருட்களையும் இடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தாங்கி (Tank) களில் இடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அனுமதிப் பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் இடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தப்படுமாயின் அன்றி தலைவரினால் கூறப்பட்டுள்ள பிரகாரம் இறுதியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

*17.* அனுமதிப்பத்திரம் பெறுநரினால் நாளாந்தம் குறைந்தபட்சம் இரண்டு வகையான மீன்களாவது விற்பனைக்காக வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பொது மக்களின் கவனத்திற்காக அவற்றின் விலைகள் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*18.* தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரினால் ஏதாவது ஒரு மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருக்கும் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது ஓர் மீனின் மாதிரியினை அதன் விலையைக் கொடுத்து கொள்வனவு செய்தல் சட்டரீதியானது ஆவதுடன் எந்த ஒரு அனுமதிப்பத்திரம் பெறுநரினாலும் மறுத்தலித்தல் அல்லது அதற்கு இடையூறு விளைவித்தல் ஆகாது.

*19.* இத் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு மீன்பிடி நிலையத்தை நடாத்திச் செல்லும் இடம் 3 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு நியதிக்கு இணங்க நடாத்திச் செல்வது முடிவடைந்தாலோ இந்த பிரிவின் துணைச் சட்டங்களிலோ அல்லது வேறு யாதாயினுமொரு துணை விதியின் நியதிகளுக்கு மாறாக நடக்கும் சந்தர்ப்பத்தில், உறுதியாகக் கூறப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்விடம் குறித்த நியதிகளுக்கு இணக்கமான நிலைமைக்கு உட்படுத்துவதற்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஓர் அறிவித்தல் தலைவரினால் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

*20.* மீன் விற்பனையுடன் தொடர்புபட்ட இத் துணைச் சட்டங்களின் ஏதாவது ஒரு துணைச் சட்டத்தினை மீறுதலுக்காக எழுநூற்றைம்பது (750/-) ரூபாவுக்கு மேற்படாத தண்டமும், இடையறாத மேற்கொள்ளப்படும் குற்றத்திற்காக குற்றவாளியாக்கப்பட்டால், அவ்வாறான சட்ட மீறல்களை கருத்தில் கொண்டு தலைவரினால் அலலது அவரினால் அனுமதி வழங்கப்பட்ட அலுவலனினால் எழுத்து மூலமான ஓர் அறிவித்தல் கையளிக்கப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் அதே குற்றம் இழைக்கப்படுகின்ற வேளையில் நாளொன்றுக்கு ரூபா இரு நூற்றைம்பதுக்கு மேற்படாத தண்டமும் செலுத்துவதற்கு அக் குற்றவாளி உட்படுதல் வேண்டும்.

21. 20 ஆவது சரத்தில் குறிப்பிட்ட விதமான ஓர் அறிவிதல் கிடைக்கப்பெற்ற யாராவது ஓர் அனுமதிப்பத்திரம் பெற்றவரினாலும் அவ் அறிவித்தலில் உறுதியாகக் கூறப்பட்டுள்ள திகதிக்கு முன்பதாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய விதமான காரணங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் உறுதியாகக் கூறப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறெனினும் அப்படி நீடிக்கப்படும் காலம் பதினான்கு தினங்களுக்கு மேற்படுதல் ஆகாது.

22. 21 ஆவது சரத்தில் குறிப்பிட்ட வகையான அறிவித்தல் ஒன்று கிடைக்கப்பெற்ற யாராயினும் ஓர் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் அவ் அறிவித்தலில் உறுதியாகக் கூறப்பட்டுள்ள திகதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்பதாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் செயற்படத் தவறினால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் குறித்த நிலையத்துக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்வதற்கு தலைவர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் சட்ட ரீதியானதாகக் கருதப்படல் வேண்டும்.

### பகுதி 21
### சகிக்க முடியாத அபாயகரமான கைத்தொழில்கள்

1. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற சகிக்க முடியாத கைத்தொழில்கள், அபாயகரமான கைத்தொழில்கள் மற்றும் சகிக்க முடியாத, அபாயகரமான கைத்தொழில்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல், பரிசீலனை செய்தல் நிர்வகித்தல் மற்றும் அது சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆகியவற்றுக்கான விதி முறைகள் ஏற்படுத்துதல் தொடர்பான துணைச்சட்டமாகும்.

2. பிரதேச சபையின் தலைவரினால் இக் காரியங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை உடைய ஒருவராயின் அன்றி, எந்த ஒரு நபரும் பிரதேச சபைக்குள் மற்றும் எந்தப் பகுதியிலும் சகிக்க முடியாத கைத்தொழில்களை அபாயகரமான கைத்தொழில்களை மற்றும் சகிக்கவியலாத அபாயகரமான கைத்தொழில் ஒன்றினை நடாத்திச்செல்லுதல் ஆகாது. அதேபோன்று ஏதாவது ஓர் அனுமதிப்பத்திரததை வேறொரு நபருக்கு கொடுத்தலும் இயலாது.

3. இரண்டாவது சரத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக பிரதேச சபையினால தீர்மானிக்கப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரக்கட்டணம் செலுத்தப்பட வேண்டியதுடன், குறித்த கட்டணம் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் தலைவரினால் பிரசுரிக்கப்பட்டதற்கு அமையவாதல் வேண்டும்.

4. இத் துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் முன்பதாகவே ரத்து செய்யப்பட்டால் அன்றி, அவ்வனுமதிப்பத்திரம் எந்த ஆண்டுக்காக வழங்க்பட்டதோ அந்த ஆண்டு திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

5. (i) கைத்தொழில் நடாத்திச் செல்லுகின்ற தொகுதியானது, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அல்லது அவரினால் அனுமதி வழங்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் அதற்கு உகந்தது என சிபாரிசு செய்யப்பட்டு இருந்தால் அன்றி மற்றும்.

(ii) அத்தொகுதி அக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ஏதாவது ஒரு கட்டிடமாக அமையுமெனில், அக் கட்டிடம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு அமைவானதாக இருக்குமானால் அன்றி, யாரொருவரும் சகிக்க முடியாத கைத்தொழில் அபாயகரமான கைத்தொழில் மற்றும் சகிக்க முடியாத அபாயகரமான கைத்தொழில் ஒன்றை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு உரிமை பெறமாட்டார்.

(அ) தொகுதியானது நல்ல மறுசீரமைக்கப்பட்ட நிலைமையில் மற்றும் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வோர் அறையும் திறந்திருக்கும்போது தளத்தின் அளவில் பதினைந்தில் ஒரு பங்கிற்குக் குறையாத அளவினதான யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வோர் அறையின் சுவர்களிலும் எல்லாப் பகுதிகளினதும் உயரம் 2.15 மீற்றருக்குக் குறையாது இருக்க வேண்டியதுடன், செங்கற்கள், கருங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். சுவர்களின் உட்புறங்கள் குறைந்தபட்சம் தளத்திலிருந்து இரண்டு மீற்றர் உயரத்திற்கு சீமெந்து காரை அல்லது சுண்ணாப்புக்காரை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) சகல கூரைகளினதும் ஓரங்களின் உயரம் தலையிலிருந்து இரண்டு மீற்றருக்கு கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) கூரை ஏதாவது நிரந்தரப் பொருளினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) மரத்தினாலான சகல பகுதிகளும் எண்ணெய் சாயம் அல்லது பூச்சு பூசப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ஊ) முழுத் தரையும் சீமெந்தினால் அல்லது ஏதாவது உக்கிப்போகாத பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) தொகுதியானது போதியளவு நீர் வழிந்தோடக் கூடியதாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) தொகுதியில் சுகாதாரப் பாதுகாப்பான குப்பைக் கூடைகள் மற்றும் போதிய மலசலக்கூட வசதிகள் செய்து தரப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் பெற்றவரும் கைத்தொழிலை கொண்டு நடாத்துவதற்கு தேவையான சகல பொருட்களையும் துர்மணம் வீசுவதையும் வேறு சகிக்க இயலாத விடயங்கள் தோன்றுவதனையும் தவிர்க்கும் வகையில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

7. ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் பெறுநரும் சகிக்க முடியாத நிலைமை தோன்றுவதற்கு அல்லது துர்மணம் வீசுவதற்கு வாய்ப்பான பொருட்களை பொது இடத்தில் அல்லது வீதிகளில் கொண்டு செல்லும்போது எவ்வித சகிக்க முடியாத நிலைமை தோன்றுவதனை தவிர்க்க கூடிய விதத்தில் மூடப்பட்ட, உறிஞ்சிக்கொள்ளாத பாத்திரங்களில் இட்டுக்கொண்டு செல்லுதல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவருக்கும் யாதேனும் ஒரு உற்பத்தி நடவடிக்கையின்போது வெளியேறுகின்ற சகிக்க முடியாத ஆவியை அல்லது வாயுக்களை அவை பரவி ஆபத்தான அல்லது சகித்துக்கொள்ள முடியாத விளைவுகள் தோன்றுவதற்கு இடமேற்படாத வகையில் உயரத்தில் வாயுமண்டலத்தில் கலக்கச் செய்தல் வேண்டும் அல்லாவிட்டால் தீ அல்லது.

9. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தொகுதியிலும் போதிய வடிவங்கள் அமைத்து முறையாக பராமரிப்பதுடன், அவை தினந்தோறும் கழுவப்படுதலும் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தொழில் நடவடிக்கைகளை செய்துகொண்டு போகும் தொகுதியின் தரையினை ஏதாயினும் ஒரு உக்குப்போகாத பொருளைக் கொண்டு செய்விக்க வேண்டும் என்பதுடன் நல்ல மறுசீரமைக்கப்பட்ட நிலையில் பராமரித்தலும், தினந்தோறும் சுத்திகரித்தலும் செய்யப்படல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தொகுதியின் சுவர்கள் அசுத்தமான நீர் போன்றவற்றை உறிஞ்சிக் கொள்வதினின்றும் பாதுகாப்பு பெறும் விதத்தில் நல்ல நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் அவற்றில் சுண்ணாம்பு மற்றும் பூச்சுக்கள் பூசப்படுதல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்றவரினால், அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தை பகலில் அல்லது இரவில் நித்திரை செய்யும் அல்லது உணவு அருந்தும் இடமாக பயன்படுத்துதல் அல்லது வேறு யாருக்காவது அவ்வாறு பயன்படுத்துவதற்கு இடமளித்தல் ஆகாது.

13. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் தொழில் நடவடிக்கைகளின் போது பாவிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்ட உதிரிகளை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் தினசரி சுத்தம் செய்தலும் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவருக்கும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற தொகுதியில் குப்பைகளைப் பெருக்கி சேகரிக்கப்படும் வெற்றுப் பாத்திரங்கள், கூளங்களுடன் பயனற்றுப்போன பொருட்கள் மற்றும் இடைநிலை உற்பத்திகள் ஆகியவற்றை தொடர்ந்தும் தொழில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவாராக இருந்தாலன்றி அவற்றை மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டு தினசரி அப்புறப்படுத்துதல் வேண்டும்.

15. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவருக்கும் தோல் அல்லது வேறு பொருட்களை கழுவுவதற்காக அல்லது ஊறவிடுவதற்காக பயன்படுத்தும் தொட்டில்கள் துர்மணம் வீசுவதனை தவிர்ப்பதற்கு தேவையானவாறு வெறுமையாக்கித் துப்புரவு செய்யப்படுதல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் யாதாயினும் ஓர் ஆறு நீரோடை, கால்வாய் மடை, கிணறு, வாவி, குளம் வடிகால் கடல் அல்லது திறந்த நீர்வெளியினுள் ஏதாவது அசுத்தமான துர்மணம் வீசுகின்ற அல்லது சகிக்க முடியாத நீரை அல்லது வேறு ஏதாவது திரவத்தினை அனுப்புவதற்கு அல்லது வழிந்தோட விடுவதன் மூலம் அல்லது வேறு விதத்தில் மேற்குறிப்பிடப்பட்ட இடங்களை அசுத்தப்படுத்தல் ஆகாது.

17. சபையின் தலைவரினால் அல்லது இவ்வகைக் காரியங்களுக்காக பொதுவாக அல்லது விசேடமாக அனுமதி வழங்கப்பெற்ற பிரதேச சபையின் யாராவது ஓர் அலுவலரினால் பொதுவான எல்லா நேரங்களிலும் சகிக்க முடியாத கைத்தொழில்கள் அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாத அபாயகரமான தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்ற தொகுதியினுள் நுழைந்து பரிசீலித்துப் பார்த்தல் சட்ட ரீதியானது ஆகும். மேலும் அனுமதிப்பத்திரம் பெற்றவர் அல்லது அவ்விடத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் அவ்வகையான பரிசீலனை மேற்கொள்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

*18.* அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஓரிடம், இத் துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கு ஏற்புடையதல்ல என பரிசீலனையின்போது வெளியாகும் சந்தர்ப்பத்தில் குறித்த தொகுதி இத் துணைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்புடையதாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்க தலைவருக்கு அதிகாரம் உண்டு. மேலும் அறிவித்தல் கிடைத்த உடனேயே குறித்த அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைய அனுமதிப்பத்திரம் பெற்றவர் செயற்படுதல் வேண்டும்.

*19.* பிரதேச சபையினால் நிச்சயிக்கப்பட்ட சகிக்க முடியாத கைத்தொழில்கள் அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக் முடியாததும் அபாயகரமானதுமான, தொழில்கள் முறையே (i) மற்றும் (ii) , (iii) ஆம் பட்டியல்களின் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கொண்டுள்ளன. அனுமதிப்பத்திரம் வழங்குதலை விண்ணப்பதாரிக்கு அறிவிப்பது தலைவரினது கடமையாகும்.

*20.* இத் துணைச் சட்டத்தின் கீழ், யாதாயினும் ஒரு கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெறும் பொருட்டு யாராவது ஒரு நபரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்று தனக்குக் கிடைத்த முப்பது (30) தினங்களுக்குள் தொகுதியானது இத் துணைச் சட்டங்களுக்கு இயைபுடையதாயின் அனுமதிப்பத்திரம் வழங்குதல் அல்லது மறுதலிப்பதாக இருந்தால், காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது தலைவரினது கடமையாகும்.

*21.* இத் துணைச் சட்டங்களை மீறுதல் சம்பந்தமாக, அச் சட்ட மீறல் விதத்துரைக்கப்பட்ட ஏதாவது ஒரு காரியத்தையாவது செய்யாது விடப்படின் ரூபா எழுநூற்று ஐம்பதுக்கு மேற்படாத தண்டத்துக்கும், அச் சட்ட மீறலை தொடர்ந்தும் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் அது தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அல்லது அச் சட்ட மீறல் தொடர்பாக கவனம் செலுத்தி தலைவரினால் அல்லது அதிகாரம் கொண்ட வேறு ஓர் அலுவலரினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சட்ட மீறல் இடையறாது மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா இருநூற்று ஐம்பதுக்கு மேற்படாத மேலதிக தண்டத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

"அனுமதிப்பத்திரம் பெறுநர்" என்பதனால், இத்துணைச் சட்டத்தின் கீழ் கைத்தொழில் ஒன்றினை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெற்ற யாராயினும் ஒரு நபர் என கருத்திற்கொள்ளப்படுவார்.

"நபர்" என்பதற்கு, கூட்டுத்தாபனமாக்கப்பட அல்லது ஆக்கப்படாத நபர்களின் சபை எனப் பொருள்படும்.

"நிர்வாகத்துக்குப் பொறுப்பான நபர்" என்பதற்கு யாராயினும் ஒரு பொறுப்பாளி, பாதுகாவலர் உடைமைகளின் பாதுகாவலர், முகாமையாளர் அல்லது ஏதாயினும் ஒரு தொழிலின் அமைப்பு நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றுமொரு நபர் எனப் பொருள்படும்.

## அட்டவணை
## சகிக்க முடியாத கைத்தொழில்கள்

1. காரீயம் சுத்திகரித்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல்;
2. பசளை அல்லது இரசாயனப் பசளை உற்பத்த செய்தல் அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல்;
3. தோல் பதனிடுதல்;
4. தோல் விற்பனைக்காக வைத்திருத்தல்;
5. கால்நடை வளர்ப்பு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்கா) மேற்கொள்ளப்படும் இடம்;
6. மாசிக் கருவாடு உற்பத்தி செய்தல் அல்லது 50 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்;
7. இறப்பர் உற்பத்திசெய்தல் அல்லது இறப்பர் தகடுகளை (sheet) வைத்திருத்தல்;
8. கால்நடை வைத்திய நிலையமொன்றினை நடாத்திச் செல்லல்;
9. மொத்த விற்பனைக்காக பழுதடையக்கூடிய உணவு வகைகளை அல்லது உணவுப் பொருட்களை வைத்திருத்தல்;
10. கருவாடு, மீன் அல்லது உப்பிடப்பட்ட மீன் நூறு கிலோ கிராமுக்கு அதிகமாக வைத்திருத்தல்;
11. மீன் அல்லது இறைச்சி உப்பிடப்படுதல் அல்லது உலரவிடல் அல்லது பணிக்கட்டி இடப்படுதல்;
12. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி உற்பத்தி செய்தல்;
13. புகையிலை உலரவிடுதல்;
14. கால்நடை உணவு உற்பத்தி செய்தல்;
15. புண்ணாக்கு தயாரித்தல்;
16. மிருக மாமிசம் அல்லது இரத்தம் அவிக்கப்படுதல்;
17. சவர்க்கார உற்பத்தி;
18. மிருக எலும்புகளை அரைத்தல் அல்லது வைத்திருத்தல்;
19. தகரப் பெட்டிகள் தயாரித்தல்;
20. புதிய உலோகங்கள் அல்லது பழைய உலோகங்களை வைத்திருத்தல்;

21. உலோக உடைசல்களை வைத்திருத்தல்;
22. வீட்டுத் தளபாடங்கள் தயாரித்தல்;
23. பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல்;
24. மரத் தொழிற்சாலை நடாத்துதல்;
25. பானங்கள் மற்றும் பழச்சாறு வகை தயாரித்தல்;
26. இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்;
27. தென்னந் தும்பு ஊறவிடல்;
28. தூரிகை வகைகள் தயாரித்தல் (பற்தூரிகை);
29. பற்தூரிகை தயாரித்தல்;
30. கள்ளு சேகரித்தல்;
31. காடி (வினாகிரி) தயாரித்தல்;
32. மரம் அரிதல்;
33. பூச்சுக்களும், மெருகெண்ணெய்யும் தயாரித்தல்;
34. சோடா உப்பு தயாரித்தல்;
36. தோற்பொருட்கள் தயாரித்தல்;
37. பழங்கள், மீன் அல்லது வேறு உணவு வகைகளை தகரக் குவளைகளில் அடைதல்;
38. கோப்பி, தானியங்களை அரைத்தல்;
39. பேக்கிங் பவுடர் தயாரித்தல்;
40. வாயு விளக்குச்சுடர் வலைப் பை (Mantle) தயாரித்தல்;
41. மரத் தளபாடங்களுக்கான பசை தயாரித்தல்;
42. மெழுகுதிரி தயாரித்தல்;
43. கற்பூரம் தயாரித்தல்;
44. எழுதும் மை, அச்சடிக்கும் மை அல்லது ஸ்டென்சில் மை தயாரித்தல்;
45. உடுப்பு கழுவும் நீலம் தயாரித்தல்;
46. முத்திரை அரக்கு தயாரித்தல்;
47. வாசனைத் தைலங்கள் தயாரித்தல்;
48. பாடசாலை வெண்கட்டிகள் தயாரித்தல்;
49. வண்டிக்கான றப்பர் சக்கரம் அல்லது காற்றுப் பை தயாரித்தல்;
50. றப்பர் சக்கரம் மீள் நிரப்புதல்;
51. றப்பர் சக்கரம் வோல்கனைசிங் செய்தல்;
52. சீமெந்து தயாரித்தல்;
53. சீமெந்து பொருட்கள் அல்லது அஸ்பஸ்டஸ் சீமெந்து பொருட்கள் தயாரித்தல்;
54. மணல் கடதாசி தயாரித்தல்;
55. பிலாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல்;
56. செங்கல் சுடுதல்;
57. இயந்திரம் மூலம் புடவை நெய்தல்;
58. அமிலம் தயாரித்தல் அல்லது மீள் நிரப்பல்;
59. ஓடுகள் தயாரித்தல்;
60. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இடப்பட்டிருந்த உறைகளை சுத்திகரித்து விற்பனை செய்தல்;
61. இயந்திரம் மூலம் சீமெந்து செங்கற்கள் தயாரித்தல்;
62. தைக்கப்பட்ட ஆடை தயாரித்தல்;
63. கோழி விற்பனை நிலையம் நடாத்துதல்;
64. கிருமி நாசினிகள் தயாரித்தல்;
66. பாதணிகள்/பைகள்/தோற்பொருட்கள் உற்பத்தி செய்தல்;
67. சிகரட், பீடி, சுருட்டு ஆகியன தயாரித்தல்.

அட்டவணை ***II***

**அபாயகரமான தொழில்கள்**

1. கருங்கல் உடைத்தல்;
2. குளிர் பானங்கள் தயாரித்தல்;
3. பனிக்கட்டி தயாரித்தல்;
4. மரக்கறி எண்ணெய் தயாரித்தல்;
5. தேங்காய் நெய் தயாரித்தல்;

6. தீப்பெட்டி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல்;
7. மெத்திலேட் மதுசாரம் தயாரித்தல்;
8. தேயிலைப் பெட்டி தயாரித்தல்;
9. தும்பு அல்லது வேறு தும்பு வகைகள் தயாரித்தல்;
10. தும்பு அல்லது வேறு தும்பு வகைகளினால் பொருட்கள் தயாரித்தல்;
11. வைக்கோல் வைத்திருத்தல்;
12. பாவித்த ஆடைகளை களஞ்சியப்படுத்தல்;
13. தங்க நகை உற்பத்தி/புதுப்பித்தல்;
14. இயந்திரம் மூலம் மரம் அரித்தல்;
15. சுண்ணாம்புக் கற்கள் அகல்தல்;
16. இயந்திரோபகரணங்கள் பயன்படுத்தும் தொழிற்சாலை நடாத்துதல்;
17. வெற்றுச் சாக்குகள் அல்லது வெற்றுப் போத்தல்கள் வைத்திருத்தல்;
18. மிதிவண்டி அல்லது மோட்டார் சைச்சிள் பழுதுபார்த்தல்;
19. பாவிக்கப்பட்ட கடதாசி அல்லது செய்தித்தாள் வைத்திருத்தல்;
20. வர்ணப்படங்கள் வரைதல்;
21. வான வேடிக்கை அல்லது பட்டாசு களஞ்சியப்படுத்துதல்;
22. இயந்திரோபகரணங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் தயாரித்தல்;
23. உலோக இணைப்பு (welding) வேலைத்தளம் நடாத்துதல்;
24. பற்றரி நிரப்புதல், தயாரித்தல், புதுப்பித்தல்;
25. அச்சகம் நடாத்திச் செய்தல்;
26. வெடிக்கும் பொருட்கள் வெடிமருந்து களஞ்சியப்படுத்துதல்.

### அட்டவணை III
### சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான கைத்தொழில்கள்

1. மைக்கா ஈயம் சுத்திகரித்தல்;
2. இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி கறுவா, ஏலக்காய் அல்லது தும்பு வகை உற்பத்தி செய்தல்;
3. உலர்த்தி சுத்திகரித்தல் அல்லது சாயமிடுதல்;
4. இலத்திரனியல் உலோக முலாம் பூசுதல்;
5. புடவை அச்சுப் பதித்தல் அல்லது சாயமிடுதல்;
6. எண்ணெய் அல்லது மிருகக் கொழுப்பு தயாரித்தல்;
7. சுண்ணாம்புச் சூளை நடாத்துதல்;
8. வானவேடிக்கைப் பொருட்கள் அல்லது பட்டாசு தயாரித்தல்;
9. மீன் எண்ணெய் தயாரித்தல்;
10. படகுகள் உற்பத்தி செய்தல்;
11. பற்றரிக்கலன்கள் பதித்தல் அல்லது புதுப்பித்தல்;
12. உலோக வகைகளை இணைப்பு செய்தல்;
13. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல்;
14. மோட்டார் வாகனங்களை சர்விஸ் பண்ணுதல்;
15. இயந்திர பாவனையுடன் உலோகங்களை தூளாக்குதல்;
16. வார்ப்பு வேலைத்தளம் நடாத்திச் செல்லல்;
17. தகடு வேலைத்தளம் நடாத்துதல்;
18. மோட்டார் வாகன கூடு கட்டுதல்;
19. பூச்சிக் கொல்லி, பூஞ்சன நாசினி, களை நாசினி தயாரித்தல்;
20. கிருமி நாசினி தயாரித்தல்;
21. நுளம்பு சுருள் தயாரித்தல்;
22. மரப் பாதுகாப்பு எண்ணெய் தயாரித்தல்;
23. தார் உற்பத்தி;
24. கண்ணாடிப் பொருட்கள் தயாரித்தல்;
25. முகம் பார்க்கும் கண்ணாடி தயாரித்தல்;
26. இரும்புத் தகடுகளுக்கு முலாம் பூசுதல்;
27. பொருத்தும் வெள்ளீயம் தயாரித்தல்;
28. அலுமினியப் பொருட்கள் உற்பத்தி செய்தல்;
29. முட்கம்பி உற்பத்தி செய்தல்;
30. கம்பி ஆணிகள் உற்பத்தி செய்தல்;

31. காபன் கடதாசி அல்லது காபன் நாடா உற்பத்தி செய்தல்;
32. முலாமிட்ட பாத்திரங்கள், உருக்கு பீப்பாய்கள், காபன் தொட்டிகள் தயாரித்தல்;
33. இரும்பு வாளிகள் உற்பத்தி செய்தல்;
34. குளிரூட்டி இயந்திரம், குளிர் சாதன பெட்டி அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டி உற்பத்தி செய்தல்;
35. குளிரூட்டி இயந்திரம், குளிர் சாதன பெட்டி அல்லது அதிகுளிர்சாதனப் பெட்டி பழுது பார்த்தல்;
36. பிரேக் லைனர், கிளச் லைனர் உற்பத்தி செய்தல்;
37. இயந்திரோபகரணங்கள் உற்பத்தி செய்தல்;
38. மின்சாரப் பொருட்கள் தயாரித்தல்;
39. றப்பர் கலந்த நார் தயாரித்தல்;
40. கலன்களை சேமிக்கும் பெட்டரி தயாரிப்பு;
41. ட்ரக்டர் வாகனம் பொருத்துதல்;
42. ரேடியேற்றர் தயாரித்தல்;
43. மின்சார உபகரணங்கள் தயாரித்தல் அல்லது புதுப்பித்தல்;
44. உலர் கலன் பற்றரி தயாரித்தல்;
45. அரிசி ஆலைகள்;
46. சவப் பெட்டிகள் தயாரித்தல்;
47. தொலைபேசி தயாரித்தல் அல்லது பழுதுபார்த்தல்;
48. மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல், பொருத்துதல்;
49. கணனி மற்றும் செய்தித் தொழிநுட்ப உபகரணங்களை பொருத்துதல் அல்லது பழுதுபார்த்தல்.

## *பகுதி 22*

## **பொதுமக்கள் சுகாதாரம் பேணல்**

*ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் நிலையங்கள்*

1. பிரதேச சபை எல்லைப் பரப்பினுள் பொதுமக்கள் சுகாதார நலன் பேணல் நடவடிக்கைகளுக்காக ஈமக்கிரியை சேவை வழங்கும் நிலையங்களை ஒழுங்குபடுத்துதல், கண்காணித்தல் நிர்வகித்தல் மற்றும் அதற்கான கட்டணங்களை தீர்மானித்தல் தொடர்பான துணை விதியாகும்.

2. மேற்குறித்த விடயத்திற்கு தவிசாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி அனைவரும் பிரதேச சபை எல்லைப் பிரதேசத்தினுள் ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல் ஆகாது.

3. இத்துணை விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து அனுமதிப்பத்திரங்களும் முன்கூட்டி இரத்துச் செய்யப்படாவிடின் அவ்வுறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

4. இத்துணையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளை அவ் அடிப்படையிலேயே பூர்த்தி செய்திருந்தாலே அன்றி தவிசாளரினால் ஏதேனும் ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் நிலையத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

(1) ஈமக்கிரியை சேவைகளை வழங்கும் நிலையமொன்றை நடாத்தும் கட்டிடத்தின் உட்பகுதியில் பிரேதத்தை ஒழுங்குபடுத்துவற்காக தனியான அறை ஒன்று இருத்தல் வேண்டும். அவ்வறையில் ஒரு நபரது பிரேதத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான 9 சதுர அடிக்கு குறையாத ஆகக் குறைந்த இடவசதி இருத்தல் வேண்டும். அவ்வாறே அப்பணியை மேற்கொள்ள பயன்படுத்த முடியுமான கொங்கிரீட் மேடையொன்றும் இருத்தல் வேண்டும். அது பீங்கான் கல்லினால் (மாபில்) அமைக்கப்பட்டு சீரிய முறையில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பிரேதம் ஒழுங்கு செய்யப்படும் அறை, எப்போதும் ஈமக்கிரியை சேவைகளை வழங்கும் இடத்தின் காட்சி அறை, அவ்வாறு அறைகளிலிருந்து வேறாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனுமதி இன்றி வெளியாட்கள் உட்பிரவேசித்தல் தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) பிரதேசம் ஒழுங்கு செய்யப்படும் அறையின் உட்பகுதிக்கு சுத்தமான காற்று கிடைக்கக்கூடிய வகையில் அறையின் சுற்றளவில் எழில் ஒரு பகுதிக்கு காற்று உட்செல்லும் யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேற்குறித்த பணியில் ஈடுபடுவதை வெளிநபர் எவரும் காணாத முறையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த யன்னல்கள் ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடம் அமைந்துள்ள வளாகத்திற்கு அண்மையிலுள்ள காணிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு ஒரே நேரத்தில் நேரடியாக திறந்து வைக்கப்படலாகாது.

(4) பிரதேசம் ஒழுங்கு செய்யும் போது பிரேதத்தின் உடல் பகுதிகளை தற்காலிகமாக வைப்பதற்கு போதுமான கூடங்கள் இருத்தல் வேண்டும். அப்பணியை மேற்கொள்ளும் போது பிரேதத்திலிருந்து வெளியாகும் இரத்தம் அல்லது வேறு திரவப் பொருட்கள் அல்லது பிரேதத்தை கழுவும் போது வெளியேற்றப்படும் கழிவு நீரை சேகரிப்பதற்கு, ஈக்கல், எலிகள்

அல்லது வேறு பிராணிகள் உள் நுழைய முடியாத வகையில் நன்றாக மூடி வைப்பதற்கு இயலுமாக கூடங்கள் இருத்தல் வேண்டும்.

5. (அ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட இடத்தில் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இறுதி அஞ்சலி வழங்க சமுகம் தரும் நபர்களின் வசதிக்காக போதுமான இருக்கைகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சமூகம் தரும் நபர்களை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக இடவசதியும் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும் இடம் ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் காட்சி பீடத்திற்கும் பிரேதம் ஒழுங்கு செய்யப்படும் அறையிலிருந்தும் பிரத்தியேகமாக இருத்தல் வேண்டும்.

(இ) ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் நிலையமொன்றுக்கு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பிரிவீன் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றினை தவிசாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) அனுமதிப்பத்திரம் கோரும் நபர் பிரதேச சபையினால் அவ்வவ்போது தீர்மானிக்கப்பட்டு அரச வர்த்தமானிப் பத்திரிகையில் வருடாந்தம் பிரசுரிக்கப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

6. பிரதேச ஒழுங்குபடுத்தலின்போது அப்புறப்படுத்தப்படும், வெளியேற்றப்படும் பிரேத உடல் பகுதிகள் மஜிஸ்டிரேட் அல்லது அவசர மரண விசாரணையாளர் ஒருவரால் அது தொடர்பாக வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளை இல்லை எனில், அப்பகுதிகள் குறித்த பணி முடிவடைந்து 6 மணித்தியாலங்களுக்குள் செல்ல முன்னர் நிலத்தில் மேற்பகுதியிலிருந்து 1.5 மீட்டர் ஆழத்திற்கு வெட்டப்பட்ட குழியில் இடப்பட்டு நன்றாக மூடப்படுதல் வேண்டும்.

7. பிரேத ஒழுங்குபடுத்தலின்போது அப்புறப்படுத்தப்படும் அல்லது வெளியேற்றப்படும் உடல் பகுதிகள் தொடர்பாக மஜிஸ்ரேட் அல்லது அவசர மரண விசாரணையாளர் ஒருவரால் ஏதேனும் கட்டளை விடுவிக்கப்பட்டிருப்பின் அக்கட்டளையின் பிரகாரம் செயற்படுதல் அனுமதிப்பத்திரம் பெற்ற நபரின் பொறுப்பாகும்.

8. 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக போதிய இடவசதி ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடத்தில் இல்லாத வேறு சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் கட்டணம் ஒன்றை செலுத்திய பின்னர் அப்பணியை பண்டாரவளை பிரதேச சபை பொது மயானத்தில் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆழத்திற்கு குழியொன்றில் இட்டு மூடுதல் வேண்டும்.

9. பிரேதம் ஒழுங்கு செய்யும் அறையை அடிக்கடி கிருமி நாசினிகள் இட்டு கழுவி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறே தேவையான போது பணியாட்களின் தேவைக்காக பயன்படுத்த முடியுமான வகையில் அவ்விடத்தில் போதியளவு முதலுதவி மற்றும் தேவையாக உபகரணங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாக அறிக்கைகளைப் பேணுவது உரிமையாளரின் கடமையாகும்.

11. பிரேதம் ஒழுங்கு செய்யும் அறையில் பணி புரியும் ஊழியர்களுக்கு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் சிபாரிசு செய்யும் பாதுகாப்பான உடைகள் முக உறைகள் மற்றும் கை உறைகள் வழங்குதல் மற்றும் பிரேத ஒழுங்குபடுத்தல் பணியின்போது அவ்வூழியர்கள் அவ்வுடைகளை அணிந்து அப் பணியில் ஈடுபடுவதை உறுதி செய்தல் உரிமையாளரின் கடமையாகும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்தில் கடமைபுரியும் அனைத்து ஊழியர்களை குறைந்த வருடத்துக்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவது உரிமையாளரின் கடமையாகும்.

13. பிரேதம் கொண்டு செல்லும் வண்டியும் அதன் உட்பகுதியும் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு முறையாவது கிருமிநாசினி இடப்படுதல் வேண்டும்.

14. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட அல்லது வேறு காரணங்களுக்காக ஒழுங்குபடுத்த முடியாத பிரேதங்களை தவிர ஏனைய பிரேதங்கள் வைக்கப்படும் பெட்டியினுள்ளே பிரேதம் முழுவதையுமே அல்லது அதன் ஒரு பகுதியையோ மூடுவதற்கு பொலிதீன் அல்லது உக்காத வேறு ஏதேனும் பொருள் பாவிக்கப்படலாகாது.

15. அனுமதிப்பத்திரம் உடையவரினால் உரிய முறையில் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் அன்றி வேறு எந்தவொரு நபரும் ஏதேனும் பிரேதத்தை ஒழுங்குபடுத்தல் அல்லது பிரேதமொன்றை கொண்டு செல்லல் ஆகாது.

16. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் விதிக்கப்படும் கட்டளைக்கு இணங்க அவர் மூலம் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு வழங்கப்படும் எழுத்து மூல அனுமதி இருந்தாலே அன்றி எவரும் கொலரா மஹாமாரியா, வைசூரிய, மஞ்சள் காய்ச்சல், அல்லது எயிட்ஸ் போன்ற நோய்களினால் மரணமெய்திய ஒருவராக பிரேதத்தை அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒரு இடத்திற்கு கொண்டு வருதல் அல்லது அதற்கு இடமளித்தல் ஆகாது.

17. ஏதேனும் பிரேதத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஈமக்கிரியை தயார் செய்வதற்கும் முன்னர் குறித்த மரணம் தொடர்பாக மரணப்பதிவு செயலாளரினால் வழங்கப்பட்ட முறையான மரணச் சான்றிதழ் ஒன்று ஒப்படைக்கப்பட்டாலன்றி அனுமதிப்பத்திர அங்கீகாரம் பெற்றவரினால் பிரேதத்தை குறித்த பணிக்காக ஏற்றுக்கொள்ளல் கூடாது.

18. குறித்த பிரேதம் அவர் மரணமொன்றில் ஏற்பட்ட ஒன்று எனும் போது, குறித்த மரணம் சந்தேகத்திடமானதாகவும் உள்ள போதும், மஜிஸ்ரேட் ஒருவரால் அல்லது அவசர மரண விசாரணையாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் அவசர மரண விசாரணையின் பின்பு வழங்கப்படும் அறிக்கை ஒப்படைக்கப்பட்டாலன்றி எவரும் அப்பிரேதத்தை ஒழுங்குபடுத்தல் பணிக்காக ஏற்றுக்கொள்ளல் கூடாது.

19. மஜிஸ்ரேட் நீதவான் மூலம் அல்லது அவசர மரண விசாரணையாளரின் மேற்கொள்ளப்படும் அவசர மரண விசாரணையின் பின்பு வழங்கப்படும் அறிக்கையில் பூதவுடலின் ஈமக்கிரிகைகள் தொடர்பாக ஏதேனும் கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின் அனுமதிப்பத்திர அங்கீகாரம் பெற்றவரினால் அக்கட்டளையின் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள இடத்தில் அல்லது வேறு ஏதேனும் வெளி இடத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பிரேத ஒழுங்குபடுத்தல்களும், ஈமக்கிரியை சேவை வழங்கல்களும் தொடர்பாக இப் பிரிவின் இரண்டாவது அட்டவணையினால் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஏடொன்றை வைத்திருத்தல் மற்றும் அவ்வேட்டை தவிசாளரினால் அல்லது அங்கீகாரம் பெற்ற அலுவலர் ஒருவரால் அல்லது ஏதேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் பரிசோதிப்பதற்காக வேண்டப்படும் போது அறை வழங்குவது அனுமதிப்பத்திர உரிமையாளரின் கடமையாகும்.

21. பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் இடமொன்றை நடாத்தும் இடம் ஒன்று தொடர்பாக அவ்விடத்தில் வைக்கப்படும் ஏதேனும் பூதவுடலுக்கு மற்றும் அப்பூதவுடலின் பொறுப்பாளர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கும் வகையில் பூதவுடலை காட்சிப்படுத்தல் வேண்டும்.

22. மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் ஒன்று வைக்கப்பட்ட இடத்தை சுத்தமாகவும் சுகாதார அடிப்படையிலும் பேணி வருதல் அனுமதிப்பத்திர உரிமையாளரது கடமையாகும்.

23. ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடத்திற்கு அண்மையில் வசிக்கும் நபர்களுக்கு இடைஞ்சல் சிரமம் ஏற்படும் எந்தவொரு செயலையும் ஈமக்கிரியை நடைபெறும் இடத்தின் வளாகத்திற்குள் நுழைவதற்கு எந்தவொரு நபருக்கும் இடமளித்தல் கூடாது.

24. (அ) அனுமதிபெற்ற இடத்தில் வெளியேற்றப்படும் அனைத்து அழிவுகளும் மீள் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டாலே அன்றி அப்பொருட்கள்.

(i) உயிரியல் சார் கழிவுப் பொருட்கள்;
(ii) கண்ணாடி;
(iii) கடதாசி மற்றும் கடதாசி சார்ந்த பொருட்கள்;
(iv) பொலிதீன், பிலாஸ்ரிக் அல்லது பொலிதீன் பிளாஸ்திரிக் போன்ற பொருட்கள்;
(v) இரும்பு மற்றும் உலோகம் அல்லது இரும்பு உலோகசார் பொருட்கள்;
(vi) அபாயகரமான கழிவுகள்;

என்ற வகையில் பாகுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுடன், ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களையும், போடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடுவதற்கு ஏற்பாடு செய்வது அனுமதிப்பத்திரம் பெற்றவரின் கடமையாகும்.

(ஆ) மேலே (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் இருந்து (vi) உப பிரிவு வரையிலுள்ள கழிவுகளுக்குள் ஏதேனும் பிரேத உடல் பாகங்கள் உள்ளடங்கக் கூடாது. பிரேதத்திலிருந்து அகற்றப்படும் ஏதேனும் பிரேத உடல் பகுதி அல்லது பகுதிகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப 6 மற்றும் 8 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அனுமதிப்பத்திர உரிமையாளரது கடமையாகும்.

(இ) மேலே (ஆ) பந்தியின் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு கூடங்களில் அல்லது தொட்டிகளில் இடப்பட்டுள்ள கழிவுகள் பிரதேச சபையின் கழிவகற்றல் முகாமைத்துவ வேலைத்திட்டங்களின் கீழ் அப்புறப்படுத்தப்பட்டாலே அன்றி தவிசாளரினால் கட்டளையிடப்படும் முறையில் இறுதி கழிவகற்றல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

25. இப் பிரிவின் துணை விதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு தவிசாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் காலப் பகுதி என்பதற்குப் பதிலாக அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிரேதத்தை ஒழுங்குபடுத்தும் அல்லது ஏதேனும் பிரேதம் பொது மக்கள் அஞ்சலிக்காக வைத்திருக்கும் என எந்தவொரு சந்தர்ப்பமும் என கருதப்படல் வேண்டும்.

26. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடமொன்றை நடாத்தப்படும் இடம் 4 ஆம் துணைவிதிகளின் பிரகாரம் எந்தவொரு கட்டளைக்கு இணங்க தொடர்ந்திருத்தல் முடிவுறுத்தப்படின் அல்லது இத்துணை விதிகளின் வேறு ஏதேனும் துணை விதிகளுக்கு மாற்றமாக அமையும்போது, குறித்துரைக்கப்படும். திகதிக்கு முன்னர் அவ்விடம் அக்கட்டளைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்படுவதற்கு தேவையாக அனைத்து

கருமங்களையும் மேற்கொள்ளுமாறு கட்டளைவிடும் அறிவித்தல் ஒன்றை குறித்த அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு சேர்ப்பிப்பதற்கு தவிசாளர் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

27. 26 ஆம் துணை விதியின் பிரகாரம் அறிவித்தல் ஒன்றைப் பெறும் எந்தவொரு அனுமதிப்பத்திர உரிமையாளரும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள முறையில் செயற்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியுமான காரணங்கள் எழுதியது மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்போது அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிய நீடிப்பு செய்வதற்காக அதிகாரம் தவிசாளருக்கு இருத்தல் வேண்டும். ஆயினும் அவ்வாறு நீடிப்புச் செய்யும் திகதி 14 நாட்களை மிஞ்சக் கூடாது.

28. 27 ஆம் துணை விதியின் பிரகாரம் அறிவித்தல் ஒன்றைப் பெறும் எந்தவொரு அனுமதிப்பத்திர உரிமையாளரும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னரோ அவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள முறையில் செயல்படுவதை மறுத்தளிக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் தவிசாளரினால் இரத்துச் செய்யப்படுவது சட்ட ரீதியானதாகும்.

29. இத்துணை விதியின் ஏதேனும் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்தாதிருத்தல் அல்லது மறுத்தளித்தல் குற்றமாவதுடன் அதற்காக அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டால் ரூபா 750 க்கு குறையாத தண்டப்பணத்திற்கு குற்றமிழைத்தவர் ஆளாகுதல் வேண்டும். அக்குற்றத்தைத் தொடர்ந்து புரிவாராயின் நாளொன்றுக்கு ரூ. 250 வீதம் மேலதிக தண்டப்பணத்தை செலுத்துவதற்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

30. சொற்தொடர்புகளுக்கான வேறு விளக்கத்தில் தேவைப்பட்டாலன்றி இப் பிரிவின் துணை விதிகளில்

(i) “ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடம் என்பது ஏதேனுமொரு பிரேதத்தை பாதுகாத்து வைக்கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தும் அல்லது பூதவுடலொன்றை இறுதிக் கிரியைகளுக்காக ஒழுங்குபடுத்தும் அல்லது ஈமக்கிரியைக்காக மயானம் வரை கொண்டு செல்லப்படும் வரை ஏதேனுமொரு தொகையை அறவிட்டு பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் ஒரு இடம் எனப் பொருள்படும்.

(ii) “பூதவுடலை ஒழுங்குபடுத்தல்” என்பது மரணமெய்திய நபர் ஒருவரின் பூதவுடலை ஈமக்கிரிகைகளுக்காக பாதுகாத்து வைப்பதற்கு முடியுமான முறையில் ஒழுங்குபடுத்தல், அப் பூதவுடலுக்கு உடை அணிவித்தல், பூதவுடலை ஏதேனுமொரு பெட்டியில் வைத்தல் மற்றும் மற்றும் அச் சொல்லப்பட்ட பணிகளுக்காக தேவைப்படும் ஏனைய எப்பணிகளை மேற்கொள்ளல் எனப் பொருள்படும்.

(iii) “பிரேதத்தின் உடல் பகுதிகள் ” என்பது மரணமெய்திய நபரின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் ஏதேனும் அல்லது அதன் ஒரு பகுதி அல்லது உடல் உட்பகுதியில் ஒரு பகுதி அல்லது பிரேதத்திலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும் இரத்தம் அல்லது வேறு திரவப் பொருள் அல்லது மரணமெய்தியவர் அச்சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த ஏதேனும் உடை அல்லது உடைகள் அல்லது அதன் ஒரு பகுதி மரணமெய்திய நபரின் உடலில் காணப்பட்ட ஏதேனுமொரு காயம் அல்லது வேறு ஒரு காரணத்தினால் அவரது உடலின் உட்பகுதியில் காணப்பட்ட அல்லது வேறேதேனும் பொருள் எனப்படும் பொருள்படும்.

**1 ஆம் அட்டவணை**

**5 ஆம் சரத்து**

ஈமக்கிரியை சேவைகளை வழங்கும் நிலையமொன்றை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் ஒன்றை கோருதல்.

1. விண்ணப்பதாரரின் பெயர்:- ..........................................................................................................................

2. தேசிய அடையாள அட்டை இல:- ...................................................................................................................

3. ஈமக்கிரியை சேவை வழங்கும் நிலையம்:- ......................................................................................................
தொழிற்பெயரும் அவ்விடத்தினது முகவரியும்:- ..................................................................................................

4. ஒரு தடவையில் ஒழுங்குபடுத்தல் பணிக்காக வைக்க முடியுமான பிரேதங்களின் எண்ணிக்கை.:............................

5. நிறுவனத்திற்குரிய ஈமக்கிரியை வண்டிகளின் எண்ணிக்கை:- ....................................................

6. பிரேதத்தை ஒழுங்குபடுத்த முன்னர் போக்குவரத்துப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வண்டிகளின் எண்ணிக்கை :...............................................

7. அகற்றப்படும் பிரேத உடல் பாகங்கள் கழிவகற்றப்படும் முறை :........................................................

8. அஞ்சலிக்காக பிரேதம் கையேற்கப்படுமாயின்.-
(i) ஒரே தடவையில் வைக்க முடியுமான பிரேதங்களின் எண்ணிக்கை: ..........................................
(ii) அஞ்சலி செலுத்த வரும் நபர்கள் ஒரே தடவையில் நிறுத்தி வைக்க முடியுமான வாகனங்களின் எண்ணிக்கை யாது? :..........................................................

9. இயற்கைப் பூக்கள் வைக்கப்பட்டுள்ளனவா விற்பனை செய்யப்படுகின்றனவா? ஆம்/இல்லை.

10. அகற்றப்படும் இயற்கைப் பூக்கள், செடிப் பகுதிகள் வெளியேற்றப்படும் முறை:....................................................

11. நிறுவனத்தில் பணி புரியும் பணியாட்களின் எண்ணிக்கை:- ....................................................................................

12. முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பின் அவரின் -

(i) பெயர்:- ...................................................................................................................................................

(ii) தேசிய அடையாள அட்டை இல.:- ...............................................................................................................

13. ஈமக்கிரியை சேவைகள் வழங்கும் இடங்களை முறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணை விதிகளின் ஏற்பாடுகளை அவ்வாறே செய்வதற்கும் மற்றும் அவ்வப்போது பிரதேச சபையினால் விதிக்கப்படும் ஏனைய சுகாதார, பாதுகாப்பு கட்டளைகளுக்கு ஏற்ப நடப்பதற்கு சம்மதம் தெரிவித்து இத்தால் கீழே கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்கின்றேன்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:- .....................

**2ஆம் அட்டவணை**

**20 ஆம் சரத்து**

1. மரணமடைந்தவரின் விபரங்கள்:

(அ) பெயர்:- ...................................................................................................................................................

(ஆ) பால் (ஆன்/பெண்) :- ...................................................................................................................................

(இ) மரணம் நிகழ்ந்த திகதி:- ..........................................................................................................................

(ஈ) மரணம் நிகழ்ந்த இடம்:................................................................................

2. மரணச்சான்றிதழின் விபரங்கள்:

(அ) இலக்கமும் திகதியும்:- ...........................................................................................................................

(ஆ) சான்றிதழ் வழங்கிய உத்தியோகத்தரின் பதவிப் பெயரும் திகதியும்:- ..............................................................................

(இ) விசேட கட்டளைகளின் விபரம்:

3. பிரேதத்தை கையளித்தவரின் விபரங்கள்:

(அ) பெயர் :- ..................................................................................................................................................

(ஆ) முகவரி :- ................................................................................................................................................

(இ) தேசிய அடையாள அட்டை :..............................................................................

(ஈ) மரணமெய்தியவருக்குள்ள உறவு:- .................................................................

4. பிரேதம் பற்றிய தகவல்கள் :-

(அ) ஒழுங்குபடுத்தல் நிலையத்திற்கு கையேற்கப்பட்ட திகதி/நேரம் ....................................................................................

(ஆ) நிலையத்திலிருந்து வெளியேற்றிய திகதி/நேரம்:- ..................................................

(இ) கொண்டு செல்லப்பட்ட மயாணம்/சுடலை: ..............................................................

(ஈ) ஈமக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்ட திகதி:- ...............................................................

## பகுதி 23

## இடம்பெயர் வியாபாரம்

1. பிரதேச சபை எல்லைக்குள் இடம்பெயர் வியாபாரிகளை மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் அக்காரியத்துக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல், நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் அல்லது பிரதேசத்தில் பொருட்களை விற்றல் ஆகியவற்றை ஒழுங்குறுத்தல் அல்லது ரத்து செய்தல் பற்றிய துணைச் சட்டமாகும்.

2. பிரதேச சபையின் தலைவரினால் குறித்த காரியத்துக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமும் அடையாள அட்டையும் இல்லாத எந்தவொரு நபரும் ஏதாவது ஒரு வீதியில் அல்லது தெருவில் அல்லது பொதுத் திடலில் அல்லது பகிரங்க பூந்தோட்டத்தில் அல்லது தள்ளுவண்டியில் அல்லது மோட்டார் வாகனம் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படுகின்ற ஏதாவது ஒரு வாகன தரிப்பிடத்தில் அல்லது பொது பஸ் நிலையத்தில் அல்லது மக்கள் கூடும் பொது இடத்தில் பொருட்களை விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்தல் அல்லது விற்பனைக்காக அங்கும் கொண்டு செல்லுதல் ஆகாது.

3. மேற்படி இரண்டாவது சரத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதுடன், அக் கட்டணம் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக சபையினால் கூறப்பட்ட விதத்தில் அமைதல் வேண்டும்.

4. வழங்கப்படும் ஒவ்வோர் அனுமதிப்பத்திரத்திலும் பொருட்களை விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் அல்லது பிரதேசங்கள் மற்றும் விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

5. முறையான நீதிமன்றம் ஒன்றின் மூலம் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படின் குறித்த அனுமதிப்பத்திரம் உடனடியாக தலைவரிடம் திருப்பி ஒப்படைக்கப்படல் வேண்டும்.

6. முறையான நீதிமன்றம் ஒன்றினால் ரத்து செய்யப்பட்டால் அன்றி, ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் எந்த ஆண்டுக்காக வழங்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையும் செல்லுபடியாகும்.

7. மேலே 6 ஆவது சரத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் பொதுமக்கள் கூடுகின்ற இடத்தில் அல்லது பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதோ ஒரு விதத்தில் மக்கள் ஒன்றுகூடல் இடம்பெறும் வேளையில் இடம்பெயர் வியாபாரத்துக்காக தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்று அச்சந்தர்ப்பம் முடிவுறும் காலப்பகுதி குறிக்கப்பட்டு தலைவரினால் வழங்கப்படலாம்.

8. ஒவ்வோர் இடம்பெயர் வியாபாரியும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் தலைவரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை தெளிவாக காணக்கூடியதாக அணிந்திருத்தல் வேண்டும்.

9. தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அலுவலரினால் அனுமதிப்பத்திரத்தையும் அடையாள அட்டையினையும் காட்டுமாறு கேட்கும்போது அந்த ஆவணங்களை உடனே சமர்ப்பிக்க வேண்டியது இடம்பெயர் வியாபாரியினது கடமையாகும்.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்பெயர் வியாபாரி ஒருவர், காலை 6.00 மணியிலிருந்து பி.ப. 10.00 மணிவரையான காலப் பகுதியினுள் தனது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உரிமை கொண்டவராவார். அவ்வாறாயினும், தலைவரினால் அக்கால எல்லைக்குப் புறம்பாக வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அது பற்றி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு உரிமை உண்டு.

11. அனுமதிப்பத்திரம் பெற்றவர் ஏதாவது தொற்று நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

*12.* உணவுப் பண்டங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒவ்வோர் இடம்பெயர் வியாபாரியும் கீழ்க்காணும் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்: -

(i) விற்பனைக்காக கொண்டு செல்லும் உணவுப் பண்டங்களில் ஈ உட்காருவதைத் தவிர்ப்பதற்காக மற்றும் தூசு, அசுத்தங்கள், துர்மணம் ஆகியன சேர்வதைத் தவிர்ப்பதற்கு ஏற்றவாறு வைத்திருக்க வேண்டியதுடன் யாராயும் நபர்கள் தொடுவதற்கு இடமளித்தல் ஆகாது.

(ii) உணவுப் பொருட்களை வைத்துக்கொள்ளும் வாகனம் மிதிவண்டி, தள்ளுவண்டி, பாத்திரங்கள் தட்டுகள் ஆகியன மற்றும் உணவுப் பொருட்களுடன் தீண்டுகின்ற சகல உபகரணங்களும் உதிரிகளும் தினமும் சுத்தமாக வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) உணவுகளை சுற்றுவதற்காக பயன்படுத்தப்படும் கடதாசி அல்லது உறைகள் ஆகியன சுத்தமாயும் அதற்கு உகந்த நிலையிலும் நிலவுதல் வேண்டும்.

(iv) உணவுகளை எடுப்பதற்காக சுத்தமான உபகரணங்களும் கருவிகளும் பயன்படுத்துதல் வேண்டும். கைகளால் தொட்டு உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் கூடாது.

(v) உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்காக தொற்று நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டுள்ள யாரொரு நபரையும் ஈடுபடுத்துதல் கூடாது.

(vi) யாராயினும் ஒரு நபருக்கு அல்லது நபர்களுக்கு அபாயம் ஏற்படக்கூடிய விதத்தில் அல்லது இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் தீயைப் பயன்படுத்துதல் ஆகாது.

(vii) கழிவுகளையோ அல்லது அசுத்த நீரையோ பொது இடங்களில் போடுதல் கூடாது என்பதுடன், அவற்றை சுகாதாரப் பாதுகாப்புடன் அப்புறப்படுத்துவதற்கு தலைவர் அவர்கள் திருப்திப்படக்கூடிய வகையிலான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) கொள்வனவு செய்யப்பட்ட உடனேயே புசிக்கக் கூடிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் அதற்கெனவே ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(ix) கொள்வனவு செய்வோரினால் புசித்த பின்னர் மீதப்படுத்தும் உணவுப் பொருட்களின் துண்டுகளை போடுவதற்காக மூடியுள்ள, நன்கு மூடக்கூடிய வேறான பாத்திரங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*13.* பசுவதை சட்டத்தை குறிப்பிடப்பட்டுள்ள மிருகத்தினது அல்லது மிருகங்களினது இறைச்சி இடம்பெயர் வியாபாரி ஒருவரினால் விற்பனை செய்யப்படுதல் ஆகாது.

*14.*இடம் பெயர் வியாபாரி ஒருவரினால் ஏதாயினும் ஒரு தொற்றுநோய் அல்லது பரவும் நோய் பரவியுள்ள பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது தலைவரினால் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

*15.* பகிரங்க சந்தைத் தொகுதியினுள் இடம்பெயர் வியாபாரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

*16.* ஏதாவது ஓர் இடத்தில் நீண்ட நேரம் தங்கி நின்று வியாபாரம் செய்தல் அனுமதிப்பத்திரம் பெற்ற எவரினாலும் செய்யப் படுதல் ஆகாது.

*17.* இத் துணைச் சட்டம் மீறப்படுதல் தொடர்பாக, மேற்கொள்ளப்படுதல் வேண்டும் எனக் கூறப்பட்ட ஏதாவது ஒரு காரியத்தை செய்யாது விடுவதற்காக ரூபா எழுநூற்று ஐம்பதுக்கு மேற்படாத தண்டத்துக்கும், அந்த சட்டமீறல் இடையறாத தொடர்ந்து செய்யப்படுமாயின் முறையான அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் அது தொடர்பில் குற்றவாளியாக்கப்படின் அல்லது அந்த சட்டமீறல் பற்றி கவனம் செலுத்தப்பட்டு தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற வேறோர் அதிகாரியினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதன் பின்னர் குறித்த சட்ட மீறல் இடையறாது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தினத்துக்கும் ரூபா இருநூற்று ஐம்பதுக்கு மேற்படாத மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

*18.* இடம்பெயர் வியாபாரிகளினால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு வீதியில் அல்லது வீதியின் இரு மருங்கிலும் அல்லது கட்டிடங்களுக்கு முன்னால் அல்லது வேறோர் இடத்தில் தலையில் போட்டு அல்லது தலையின் மீது விரிக்கப்பட்ட ஏதாவது விரிப்பின் மீது போட்டு பொருட்களை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல் ஆகாது.

*19.* உணவுப்பண்டங்கள் அல்லாத பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளினால் உறைகளில் இட்டு விற்பனை செய்யக்கூடிய அனைத்து பொருட்களையும் உறைகளில் இட்டு விற்கப்படல் வேண்டும்.

*20.* இடம்பெயர் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற யாராயினும் ஒரு நபரினால் எந்த ஒரு வீதியிலும் செலுத்தப்படுகின்ற வாகனங்களுக்கோ அல்லது பயணிக்கும் பாதசாரிகளுக்கோ அல்லது பொது இடங்களில் நடமாடுகின்ற மக்களுக்கோ இடையூறு ஏற்படுவதாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பொது இடங்களுக்குப் பொறுப்பானவர்களினால் அல்லது சபையின் ஓர் அதிகாரியினால் அறிவிக்கப்பட்ட உடனே வியாபார நடவடிக்கைகளை நிறுத்தி அவ்விடத்திலிருந்து சென்றுவிடுதல் வேண்டும்.

*21.* இடம்பெயர் வியாபாரம் செய்யும் ஒருவரினால் முறையான அனுமதி இன்றி பொருட்களின் விளம்பரத்திற்காக ஒலிபெருக்கி இயந்திரங்கள், வானொலி ஒலிப்பதிவு இயந்திரம் அல்லது பகிரங்க அழைப்புத் தொகுதிகள் பயன்படுதல் கூடாது.

*22.* (i) இத் துணைச் சட்டத்தில் சொற்பிரயோகம் தொடர்பாக "உணவுப் பண்டங்கள்" என்பதனால் மனிதர் உட்கொள்ளுவதற்காக பெறப்படும் தயாரிக்கப்பட்ட உயர்வுகளும் பான வகைகளும், பழங்கள் இளநீர் அல்லது உட்கொள்ளுவதற்காக பெறப்படும் அனைத்து வகைகளும் கருத்தில் கொள்ளப்படும்.

(ii) "இடம்பெயர் வியாபாரம்" என்பதனால் தன்னால் அல்லது ஒரு பிராணியின் துணையுடன் அல்லது வாகனத்தின் மூலம் பொருட்களை கொண்டு வந்து மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரம் எனக் கருதப்படுவதுடன், மீண்டும் விற்பனை செய்வதற்காக ஒரு நபரினால் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த வியாபாரம் இதனுள் அடங்காது.

*7-390*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.